# உரிமைப் பெண்

★

பெ. தூரன்

★

அமுத நிலையம் லிமிடெட்
தேனாம்பேட்டை :: சென்னை-18

உரிமை பதிவு

அமுதம் 37

முதற் பதிப்பு—மார்ச், 1952

இரண்டாம் பதிப்பு—ஜனவரி, 1956

## உள்ளுறை

★

| | | | |
|---|---|---|---|
| 1. | உள் நெருப்பு | ... | 1 |
| 2. | அவள் வளர்த்த கடாரி | ... | 10 |
| 3. | பஞ்சுக் காலன் | ... | 25 |
| 4. | எது பெரிது? | ... | 37 |
| 5. | மழையும் இடியும் | ... | 60 |
| 6. | பட்டணம் கை | ... | 70 |
| 7. | ராதா | ... | 81 |
| 8. | தூரப் பிரயாணம் | ... | 91 |
| 9. | தந்தை சொல் | ... | 98 |
| 10. | உரிமைப் பெண் | ... | 115 |

விலை ரூ 1—12—0

நாஷனல் ஆர்ட் பிரஸ்

தேனாம்பேட்டை, சென்னை-18

# முகவுரை

கதைக்குக் காலில்லை என்று கூறுவார்கள். நான் இதை ஒப்புக்கொள்ளுவதில்லை. கதைக்கு நல்ல உறுதியான இரண்டு கால்கள் இருக்கவேண்டும். கவர்ச்சியான சம்பவம் அல்லது உணர்ச்சி, சொல்லும் திறமை ஆகிய இவ்விரு கால்களும் இல்லாமல் மக்களின் உள்ளத்திலே கதை நிலைத்து நிற்க முடியாது.

கதைக்கு வேறு இலக்கணங்கள் வேண்டாமா? நான் வேண்டாமென்று சொல்லவில்லை; நிச்சயமாக வேண்டும்; ஆனால் அவற்றை வரையறுக்கும்போதுதான் பல சங்கடங்கள் தோன்றுகின்றன.

சிறுகதை இலக்கணம்பற்றிய ஓர் ஆங்கில நூலைச் சமீபத்திலே நான் படித்துக்கொண்டிருந்தேன். அதிலே சிறுகதையின் இலக்கணத்தை ஆசிரி.யர் மிக அழகாக வகுத்துக் கூறுகிறார். அவருக்குத் தெரிந்தது போல அவ்வளவு தெளிவாக வேறு யாருக்கும் சிறுகதையின் இலக்கணம் தெரியாதென்றே சொல்லிவிடலாம். கதையை எப்படி ஆரம்பிப்பது, படிப்பவரின் ஆர்வம் ஓங்கும்படி எப்படிச் சொல்லுவது, எப்படி முடிப்பது என்பன போன்ற கலைத் திறமைகளைப்பற்றியெல்லாம் மிக நன்றாக விளக்கியிருக்கிறார். இருந்தாலும் அந்த ஆசிரியர் ஒரு சிறுகதைகூட எழுதியதில்லை. எப்பொழுதாவது சிறுகதை எழுத முயன்றாரோ என்று கூடத் தெரியாது. அப்படி எழுத முயன்றிருந்தாலும் அதில் வெற்றி பெற்றிருப்பாரோ என்பதும் சந்தேகந்தான். இலக்கணம் வகுப்பது ஒருவகைத் திறமை; சிறுகதை எழுதுவது மற்றொருவகைத் திறமை. இவ்வாறே மற்ற கலைகளைப் பற்றியும் கூறலாம்.

இன்னும் ஒரு விஷயம். பண்டிதர்களும், ரஸிகர்களும் கூடிப் பல சிறந்த சிறுகதைகளை ஆராய்ந்து சிறுகதைக்கு இலக்கணம் வகுப்பார்கள். அடுத்த நாளிலே புதிதாக ஒருவன் எங்கிருந்தோ தோன்றுவான். அவன் இவர்கள் வகுத்த இலக்கணத்திற்கு நேர்மாறான முறையிலே அற்புதமான ஒரு சிறுகதை உண்டாக்கி விடுவான். எல்லாக் கலைகளிலும் இவ்வாறு நேரிடுகிறது.

இதனாலேதான் இலக்கணத்தை முடிவாக வரையறுப்பதில் பல சங்கடங்கள் தோன்றுகின்றன என்று கூறினேன். இருந்தாலும் சிறந்த கலைஞர்களின் சிருஷ்டிகளை ஆய்ந்து இலக்கணத்தை அமைத்துக் கொண்டே செல்வது அவசியந்தான்.

சிறுகதையின் கண், காது, மூக்கு என்றிப்படிப்பட்ட உறுப்புக்களின் இலக்கணத்தை அறுதியிட்டுக் கூறுவதிலே சங்கடங்கள் இருந்தாலும் அதன் கால்களைப்பற்றி நிச்சயமாகக் கூறிவிடலாம். அதனால்தான் கதைக்குக் காலில்லை என்ற பேச்சை நான் ஒப்புக் கொள்ளுவதில்லை.

வாழ்க்கையின் சில அம்சங்களைப்பற்றியே திருப்பித் திருப்பிக் கதை எழுதுகிறார்களென்று சிலர் குறைகூறுகிறார்கள். அப்படிப் புதிய துறைகள் வேண்டுமென்பவர்களுக்கு இந்தத் தொகுப்பிலே கிராம மக்களின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்ட கதைகள், விலங்குக் கதைகள், அடிமனக் கோளாறுகள்பற்றிய கதைகள் என்றிப்படிப் பல சிறுகதைகள் இருக்கின்றன.

மனம் என்பது நமக்குக் கிடைத்துள்ள அற்புதமான கொடை. அதன் அமைப்பை முற்றிலும் அறிந்து கொள்வது மிகவும் சிரமமென்றாலும் பொதுவாக அதை இரண்டு பாகங்களாகப் பிரிக்கலாம். மேலே உள்ள பாகம் சாதாரணமாக வாழ்க்கையிலே தொழில்படுவது. அதன் இயக்கத்தின்படியே நமது செயல்கள் நடைபெறுகின்றன. ஆனால் அதையும் பிடித்து ஆட்டிவைப்பது மனத்தின் மற்றொரு பாகமாகிய அடிமனம். அது மகா பொல்லாதது: அதன் கோளாறுகளை இன்று பல மனத் தத்துவர்கள் அறிந்து கூற முயன்றுகொண்டிருக்கிறார்கள். அடி மனத்தின் சூழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு புதிய இலக்கியமும் மற்றக் கலைகளும் இன்று வளரத் தொடங்கியுள்ளன.

முகவுரை எழுதவந்த இடத்திலே இவற்றைப்பற்றியெல்லாம் விரித்துச் சொல்லி உங்களுடைய பொறுமையைச் சோதிக்க விரும்பவில்லை. உண்மையில் இந்த முகவுரையை நீங்கள் படிக்க வேண்டியதே இல்லை. கதைகள் தாமாகவே பேசும்; பேச வேண்டும். அவற்றிற்கு முகவுரை எதற்கு? புதிய அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு எழுதிய பல கதைகள் இதில் இடம் பெற்றிருக்கின்றன என்பதையும், உரிமைப் பெண்ணின் கதையைக் கூறுகிற அந்தக் கற்பனை எழுத்தாளன் சிறுகதை இலக்கணம் பற்றி எல்லோரையும் சிந்திக்கும்படி செய்கிறான் என்பதையும் குறிப்பாகக் காட்டவே இதை எழுதுகிறேன்.

பிள்ளைவரம் என்ற தலைப்புடன் எனது சிறுகதைத் தொகுதி ஒன்று முன்பு வெளிவந்துள்ளது. அதற்கு நல்ல பாராட்டும் ஆதரவும் கிடைத்ததால் உண்டான உற்சாகத்தோடு இத்தொகுதியையும் வாசகர்களுக்கு அளிக்கிறேன். வணக்கம்.

சென்னை,
26—3—52

பெ. தூரன்

# உள் நெருப்பு

"சொங்கப்பனா அப்படிக் கோபித்துக்கொண்டான்? அவனுக்குக் கோபமே வராதே!" என்று எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள். அவர்களால் அதை நம்பவே முடியவில்லை.

"வெறும் கோபம் மட்டுமா? பக்கத்திலிருந்தவர்கள் விலக்கி யிருக்காவிட்டால் பொன்னப்பனை அவன் கொன்றே இருப்பான்" என்று அந்தச் சம்பவத்தை நேரில் கண்டவர்கள் உரைத்தார்கள். அதைக் கேட்டுக் காட்டுப் பாளையம் என்ற அந்தக் கிராமமே திகைத்துப் போய் விட்டது.

சொங்கப்பனுக்குக் கோபமே வராது; அவனைக் கேலி பண்ணலாம், வையலாம், வம்புச் சண்டைக்கு இழுக்கலாம்; என்ன செய்தாலும் அவனுக்குக் கோபம் வந்ததை யாருமே கண்டதில்லை. கோபம் வந்தால் அவன் முகம் எப்படியிருக்கும் என்று பார்க்கக்கூட வெகு பேர் ஆசைப்பட்டதுண்டு. ஆனால் அந்த ஆசை இது நாள் வரையிலும் பூர்த்தியாகவே இல்லை. சிறுவர்கள் அவன் காதைப் பிடித்து இழுப்பார்கள்; தொந்தி வயிற்றைத் தடவிப் பார்ப்பார்கள். அவனைச் சூழ்ந்துகொண்டு,

தொந்தி வயிற்றுச் சொங்கப்பா
சோற்றுப் பானை எங்கப்பா
குந்திக் கொண்டு அள்ளப்பா
குறையக் குறையத் தின்னப்பா

என்று அவன் தொந்தி வயிற்றையும் பெருந் தீனியையும் பரிகாசம் செய்து பாட்டுப் பாடுவார்கள். அவன்

கல்லுப் பிள்ளையார் மாதிரி ஒருவித உணர்ச்சியையும் வெளிப்படுத்தாது உட்கார்ந்திருப்பான். அவனுக்குக் கோபம் வராது.

"சொங்கப்பா, கல்யாணம் பண்ணிக்கிறாயா? நான் வேணும்னு எங்காவது ஒரு நல்ல பொண்ணைப் பார்த்து உனக்கு ஏற்பாடு செய்கிறேன்" என்று சிலர் அவனைக் கேட்பார்கள். அப்படிக் கேட்டு அவனைப் பேச்சுக்கிழுப் பதிலே அவர்களுக்கு ஒரு தனி இன்பம். ஆனால் அந்தக் கேள்வியே காதில்விழாததுபோல அவன் அமர்ந்திருப்பான்.

நான்கைந்து தடவை வற்புறுத்திக் கேட்டால், "வாண்டாம்; நான் கல்யாணம் பண்ணிக்கமாட்டேன்" என்று பதில் வரும். சொங்கப்பன் முகத்திலே அப் பொழுதுகூட மாறுதல் எதுவும் விசேஷமாக உண் டாகாது. கொஞ்சம் சிரிப்பின் சாயல் லேசாகப் படரும். அவனுடைய மூளையிலே ஏதோ சிறிது கிளர்ச்சி ஏற்பட் டது போலத் தோன்றும். மறுகணத்திலே அதுவும் மறைந்துவிடும்.

அவனை ஒரு மசையன் என்று எல்லோரும் சொல்லு வார்கள். அப்படிப்பட்டவனுக்குப் பொன்னப்பன்மேல் அவ்வளவு பெரிய கோபம் வந்ததை அறிந்துதான் எல் லோரும் ஆச்சரியமும் திகைப்பும் அடைந்தார்கள்.

சொங்கப்பன் ஒரு அநாதை. குழந்தைப் பருவத்தி லிருந்து அவன் காட்டுப்பாளையம் என்ற அந்த ஊரிலே தான் இருக்கிறான். ஆனால் அவனுடைய தாய் தந்தை யர்கள் யாரென்று ஒருவருக்கும் தெரியாது. பஞ்சம் பிழைப்பதற்காக அந்த ஊருக்குச் சுமார் முப்பத் தைந்து வருஷங்களுக்கு முன்னால் வந்திருந்த யாரோ

அவனை அங்கேயே அநாதையாக விட்டுச் சென்றதாகச் சில முதியவர்கள் கூறுவார்கள். அதைப் பற்றி யாருக்கும் நிச்சயமாக ஒன்றும் தெரியாது. ஏழு வயதுச் சிறுவனாக இருந்த அவன் மேல் அந்த ஊர்ப் பெரிய பண்ணைக் காரரான முத்துசாமிக்கவுண்டர் இரக்கங் கொண்டார். தம் வீட்டிலேயே அவனுக்கு இடமளித்தார். நாளடைவில் சொங்கப்பன் அவருடைய பண்ணையிலே ஒரு நல்ல வேலை யாளாகிவிட்டான். சிறுவனாக இருக்கும்போது மாடு மேய்க்கும் வேலையை அவனுக்குக் கொடுத்தார்கள். இப்பொழுது பண்ணையிலே அவன் செய்யாத வேலை கிடை யாது.

சாப்பிடுவதில் போலவே வேலை செய்வதிலும் சொங் கப்பன் கெட்டிக்காரன். "நாலாள் வேலையை அவன் ஒருத்தனே செய்துவிடுவான்" என்று எல்லோரும் பேசிக் கொள்வார்கள்.

அவனுக்கு முத்துசாமிக்கவுண்டர் வீட்டிலே சோறு; பண்ணையிலே வேலை. நன்றாகச் சாப்பிடுவது, நன்றாக வேலை செய்வது—இதுதான் அவனுடைய தினசரி வாழ்க்கை. வேலையில்லாத சமயத்தில் எப்பொழுதாவது அவன் ஊர் மத்தியில் வேப்பமரத்தைச் சுற்றிக் கட்டி யிருக்கும் மேடையிலே வந்து கொஞ்ச நேரம் உட்காரு வான். அந்தச் சமயத்தில்தான் அவனை எல்லோரும் கேலி பண்ணுவது, சண்டைக்கிழுப்பது, வம்புக்கிழுப்பது, கல்யாணப் பேச்சுப் பேசுவது—எல்லாம்.

அவன் வாழ்ந்த இந்த நாற்பத்திரண்டு வருஷங்களில் ஒரு நாளாவது அவனுக்குக் கோபம் வந்ததை யாரும் கண்டதே யில்லை.

அப்படியிருக்க இன்று அவன் திடீரென்று இவ்விதம் செய்ததுதான் யாருக்கும் விளங்கவில்லை. காட்டுப்பாளையத்து மக்கள் அனைவருக்கும் இது பெரிய அதிர்ச்சியை உண்டாக்கிவிட்டது. நேரிற் கண்டவர்கள் அப்படியே ஸ்தம்பித்துப் போனார்கள். காதில் கேட்டவர்கள், "ஆ அப்படியா? இத்தனை நாள் இல்லாமே இன்னைக்கு ஏன் அப்படி அவனுக்குக் கோபம் பொங்கிவிட்டது?" என்று அதிசயித்தார்கள்; பெண்கள் கன்னத்தில் கையை வைத்து மருண்டு விழித்தார்கள். சில கிழவிகள், "மசைக் கோபம் என்பது இதுதான். மசையனுக்குக் கோபம் வந்தால் அதை யாராலும் தணிக்க முடியாது" என்றார்கள்.

இவ்வாறு எல்லோரும் மலைத்துப் போகும்படியாக இன்று சொங்கப்பனுக்குக் கோபம் வந்துவிட்டது. அவனுடைய கோபத்திற்குள்ளான பொன்னப்பன் பல வருஷங்களாக அந்த ஊரிலேயே இருக்கவில்லை. இன்று காலையில்தான் ஊருக்கு வந்து சேர்ந்தான். அப்படியிருக்க அவன் மேல் சொங்கப்பனுக்கு அத்தனை பெரிய கோபம் உண்டானது மேலும் மலைப்பை அதிகரிக்கச் செய்தது.

இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்னால் காட்டுப்பாளையத்திலிருந்து கண்டிக்கு நாலைந்து பேர் ஒரே இரவில் யாரும் அறியாமல் புறப்பட்டுப் போய்விட்டார்கள். உள்ளூரில் கூலி கிடைப்பது அரிதாயிருந்தது. ஏதோ கிடைப்பதும் வயிற்றைக் கழுவுவதற்கே போதாமலிருந்தது. அதனால் பணம் சம்பாதிக்கவேண்டும், கல்யாணம் செய்துகொள்ளவேண்டும் என்று ஆசைப்பட்டவர்களுக்கு அந்த ஊர் லாயக்கில்லாமல் போய்விட்டது. கண்டிக்குப் போனால் ஐந்தாறு வருஷங்களில்

ஏராளமாகச் சம்பாதித்துக்கொண்டு வந்துவிடலாம் என்று அவர்கள் நம்பிப் போனார்கள். அவர்களில் பொன்னப்பனும் ஒருவன்.

அவன் பல வருஷங்களுக்குப் பிறகு இன்று எதிர்பாராதவிதமாகத் திரும்பி வந்தான். தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்து மலேரியா ஜுரத்தால் பீடிக்கப்பட்டு மிகவும் மெலிந்திருந்தான். உடம்பு வெளுத்துத் துரும்பாக இருந்தது.

இனிமேலும் கண்டியில் இருந்தால் உயிருக்கே ஆபத்தாக முடியும் என்ற நிலையில் அவன் திரும்பி வந்திருக்கிறான்.

பொன்னப்பன் நல்ல வாயாடி. "இந்த வாயில்லாவிட்டால் உன்னை நாய் கூட மதிக்காது" என்று அவனுடைய அரட்டையைக் கேட்டவர்கள் சொல்லுவார்கள்.

பிற்பகல் சுமார் மூன்று மணியிருக்கும். பொன்னப்பன் கண்டியில் தனது வாழ்க்கையைப்பற்றி வேப்ப மரத்துக் கல்லுக்கட்டின் மேல் உட்கார்ந்துகொண்டு அங்கே சூழ்ந்திருந்த ஆடவர்களிடம் கயிறு திரித்துக்கொண்டிருந்தான். அந்தச் சமயத்தில் சொங்கப்பன் தற்செயலாக அங்கு வந்தான். அவனுக்குப் பொன்னப்பன் திரும்பி வந்த சேதி அதுவரையில் தெரியாது.

வந்தவனைப் பொன்னப்பன், "என்ன சொங்கப்பா, தொந்தி கிந்தி பலமாக இருக்குதே; என்னைத் தெரியுதா?" என்று கேலியாய்ச் சிரித்துக்கொண்டு கேட்டான். அவ்வளவுதான், சொங்கப்பன் ஒரே பாய்ச்சலாக அவன் மேல் பாய்ந்து அடி அடி என்று அடித்து நொறுக்கிவிட்டான். "கேலியா பண்றே? அதெல்லாம் இப்போ எங்

கிட்டே நடக்காது" என்ற வார்த்தைகள் அவன் வாயி லிருந்து வெடித்தன. சுற்றியிருந்தவர்கள் யாருமே அவ னைத் தடுக்க முயலவில்லை. எல்லோரும் ஆச்சரியத்தால் அப்படியே மரம்போல் ஆகிவிட்டார்கள்.

கடைசியில் ஒன்றிரண்டு பேர் சமாளித்துக்கொண்டு சொங்கப்பனைப் பிடித்து விலக்கிவிட்டார்கள். இன்னும் கொஞ்ச நேரம் அவர்கள் குறுக்கிடாமலிருந்தால் பொன் னப்பன் உயிர் தப்புவதே அரிதாகியிருக்கும்.

சொங்கப்பனுடைய தொந்தியைப் பற்றி எத்தனையோ குத்தலான தமாஷ்களெல்லாம் நடந்திருக்கின்றன. அப் பொழுதெல்லாம் அவன் கோபித்ததே கிடையாது. அவ்வாறிருக்க இன்று திடீரென்று ஒரு சாதாரண வார்த் தைக்கு, அதுவும் இத்தனை வருஷங்களாக ஊரைவிட்டுச் சென்றிருந்த ஒருவன் கேட்டதற்கு அவ்வளவு கோபம் வருவானேன்? அதிலும் சொங்கப்பனும் பொன்னப் யனும் சிறுவயதில் ஒன்றாகவே மாடு மேய்த்துக்கொண் டிருப்பார்களாம். அப்படியிருக்க அவனுக்கு ஆளையே கொன்று விடுவதுபோலக் கோபம் வருவதற்குக் காரணம் என்ன? எல்லோரும் மனத்திற்குள்ளேயே இக்கேள்வி களைக் கேட்டுக் கொண்டார்கள். ஆனால் ஒருவருக்காவது நேரில் அவனை அந்தச் சமயத்தில் கேட்கத் தைரியம் வரவில்லை.

சிலர் சமாதான வார்த்தைகளைச் சொல்லிச் சொங் கப்பனை அவ்விடத்திலிருந்து கூட்டிக்கொண்டு போய் விட்டார்கள்.

ஒன்றிரண்டு மணி நேரம் சென்ற பிறகுதான் மக்கள் நடந்த சம்பவத்தைப் பற்றி மெதுவாக அவனிடம் கேட்க

ஆரம்பித்தார்கள். "சொங்கப்பா, என்ன உனக்கு அவ்வளவு பெரிய கோபம் வந்துவிட்டது?" என்றார் ஒரு பெரியவர்.

பதில் இல்லை. பழையபடி மௌனப் பிள்ளையாராகச் சொங்கப்பன் வீற்றிருக்கிறான்.

"அப்பா! எல்லாரும் பயந்தே போனோம். இன்னும் சித்தே விட்டிருந்தா, ஆளையே தீர்த்திருப்பாய்; சொங்கப்பா, ஏன் அப்படிக் கோவிச்சுக்கிட்டே?" என்றார் ஒரு தாடிக்காரர்.

பதில் இல்லை.

"மறுபடியும் கோபம் வந்துவிடப் போகிறது; சும்மா இருங்கோ" என்றார் ஒரு குள்ளையர்.

"சே, சே, அப்படியெல்லாம் வராது. இல்லையா சொங்கப்பா? ஏன் இன்னைக்கு அப்படிப் பண்ணினே? சொல்லு" என்றார் ஒரு நெட்டையர்.

பதில் பிறக்கலாயிற்று.

"என்னவோ அவனைப் பார்த்ததும் என்னை அறியாமலே கோபம் வந்துவிட்டது. அவனை அப்படியே கசக்கிப் போடலாம்னு ரோசம் வந்தது" என்றான் சொங்கப்பன்.

அவன் பதிலிலே பதற்றமோ கோபமோ இருக்கவில்லை. அதனால் எல்லோருக்கும் தைரியமும் உற்சாகமும் பிறந்துவிட்டன. அந்தக் குள்ளையருங்கூட அவனை மொய்த்துக்கொண்டு கேள்விமேல் கேள்வி தாராளமாகப் போட ஆரம்பித்தார்.

"ஆமாம்; அவன் உன்னை என்ன பண்ணினான்? சும்மா கேலியாக ரெண்டு வார்த்தைதானே சொன்னான்?"

"அதென்னமோ, அவனை அடிக்க வேணும்னே இருந்தது எனக்கு."

"அவன் கண்டியிலிருந்து இன்னைக்குத்தானே வந்தான் ?"

"அது மெய்தான். இருந்தாலும் அவனைப் பார்த்ததும் ஒரே கோபம் வந்துவிட்டது. ஒரே அடியில் அடிச்செறியலாம்னு மனசு கொதித்தது."

"ஏன் அப்படி ?"

"அதென்னமோ எனக்கே தெரியவில்லை."

"சின்ன வயசில் நீங்க ரெண்டு பேரும் சேர்ந்தே இருப்பீர்களே?"

"ஆமாம், நாங்க ரெண்டு பேருந்தான் சேர்ந்து மாடு மேய்ப்போம். அப்போ அவன் என்னைவிடப் பெரிய பையனாகயிருந்தான். சும்மா என்னை அடிப்பான். தினமும் வேணும்னே அடிக்கிறது, கேலி பண்ணறது, ஏமாத்தறது. இதுதான் அவனுக்கு வேலை."

"சரி சரி, அதுக்குத்தான் இப்போ வட்டியும் முதலுமாகக் கொடுத்தியா? ஆளையே கொன்றிருப்பாயே விட்டிருந்தா ?"

"அப்பா! அந்தக் காலத்திலே நான் அவனிடத்திலே பட்ட வேதனை சொல்லவே முடியாது. அன்னைக்கு அவனைத் திருப்பி அடிக்க எனக்குப் பலமில்லை. பேசாமல் எல்லாக் கஷ்டத்தையும் பொறுத்துக் கொண்டேன். என் மனசுக்கு அடியிலே மாத்திரம் குமுறிக்கொண்டிருந்தது."

"அந்த வருத்தத்தையெல்லாம் இதுவரையிலும் அடக்கி வைத்துக் கொண்டிருந்தாயா ?"

"இல்லை இல்லை. அதெல்லாம் எப்பவோ மறந்து போச்சு. இருந்தாலும் இன்னைக்கு அவனைப் பார்த்ததும் என்னை அறியாமலே திடீர்னு கோபம் அப்படி வந்து விட்டது."

"இனிமேல் அவனைக் கண்டா மறுபடியும் அடிச்சுடாதே. பாவம், மெலிஞ்சு வந்து சேர்ந்திருக்கிறான்!"

"சே, இனிமேல் என்னத்துக்கு அடிக்கிறேன்? என்னமோ ஒரு தடவை ஏமாந்து போச்சு. இனிமேல் அவனைத் தொடமாட்டேன்."

சொங்கப்பன் இவ்வாறு கூறியபோதிலும் இப்பொழுது அவனிடம் மக்கள் முன்போல அவ்வளவு தாராளமாகக் கேலி, தமாஷ் வைத்துக்கொள்ள விரும்பவில்லை. உள்ளுக்குள்ளே பயம். திடீரென்று எரிமலைபோல் கிளம்பி விட்டால் என்ன செய்வதென்று சந்தேகம். ஆனால் அந்த எரிமலை பொன்னப்பன் மேல் சீறிப் பொங்கியதற்குப் பின் நிரந்தரமாக அணைந்துவிட்டது என்பது அவர்களுக்குத் தெரியாது.

# அவள் வளர்த்த கடாரி

"வள்ளியாத்தா, படுக்கப் போகிறதற்கு முன்னே கட்டுச்சோறு கொஞ்சம் கட்டி வையம்மா; நாளைக்கு நேரத்திலே சந்தைக்குப் போகவேணும்" என்று வெற்றிலையை மடித்து வாயில் போட்டுக்கொண்டே வீரப்பன் சொன்னான். நாள் முழுவதும் கூலிவேலை செய்துவிட்டு வந்த அவன் களைப்பாறக் குடிசைத் திண்ணையின் மேல் உட்கார்ந்திருக்கிறான். அவன் மகள் வள்ளியாத்தாள் உள்ளே வேலை செய்துகொண்டிருக்கிறாள். எங்கிருந்தோ மாயமாக வந்து இருள் பரவிக் கொண்டிருந்தது.

"எந்தச் சந்தைக்குப் போகிறீர்கள்? துடியலூருக்கா?" என்று வேலை செய்துகொண்டே கேட்டாள் மகள்.

"ஆமாம், நாளைக்குத் திங்கட் கிழமையல்ல? இந்தக் கடாரியைச் சந்தைக்குக் கொண்டு போகலாம்னு இருக்கிறேன்."

"என்னத்துக்கையா அதை இப்போ விற்கவேணும்? இன்னும் ரெண்டு மூன்று மாசம் போனால் கன்றுப் போடுமே?"

"ஆமாம், கன்றுப் போட்டால் எச்சு விலைக்குத்தான் போகும். ஆனால் செலவுக்கு அவசரமாகப் பணம் வேணுமே?"

"இப்போ என்ன அப்படிச் செலவு?" என்று யோசனையுடன் கேட்டாள் மகள்.

தகப்பன் பதில் சொல்லுவதற்குச் சற்றுத் தயங்கினன். எப்படி ஆரம்பிப்பது என்று அவனுக்குத் தோன்றவில்லை. வேறு ஏதாவது விஷயமாக இருந்தால் அவனுக்குத் தயக்கமே இராது. அவன் இதுவரையில் தன் மகளிடம் எதையும் மறைத்து வைக்கவில்லை. அவன் மனைவி தன் நான்கு வயசுக் குழந்தையான ஒரே மகளை விட்டுவிட்டுத் திடீரென்று வாந்திபேதியால் இறந்தது முதல் வீரப்பனுக்கு அந்த மகள்தான் உயிர். அவன் இரண்டாவது கல்யாணம் செய்து கொள்ளவும் மறுத்து விட்டான். அவனுடைய தங்கை மாராயி வெகுநாள் வரையிலும் மன்றாடிப் பார்த்தாள்; அவன் இணங்கவில்லை. தன் குழந்தையின் மேலிருந்த அன்பினலேயே அவன் அப்படி உறுதியாக இருக்கிருன் என்று அனைவரும் உணர்ந்துகொண்டனர்.

மனைவி இறந்த சில மாதங்கள் வரையில் அவன் தங்கை தன் கணவன் வீட்டிலிருந்து வந்து அவனுடன் தங்கியிருந்தாள். உதவிக்கு அவளல்லாமல், வீரப்பனுக்கு வேறு நெருங்கிய உறவினர்கள் இல்லை. மாராயியின் புருஷனும் தன் மைத்துனனுக்கு ஏற்பட்ட துன்பத்தை நினைத்து அவளை அங்கேயே இருக்கும்படி விட்டுவிட்டான். ஆனல் அவள் எவ்வளவு காலம் இப்படி இருக்க முடியும்? அவளும் தன் குடும்பத்தைக் கவனிக்க வேண்டாமா? அதனல் வீரப்பன் ஒருநாள் அவளிடம், "மாராயி, நீ இங்கேயே இருந்தால் உன் வீட்டிலே மாமியாருக்குக் கஷ்டமாகத்தான் இருக்கும். அவர்களும் வயசானவர்கள்; எத்தனை நாளுக்குத்தான் வீட்டு வேலையெல்லாம் தனியாகச் செய்வார்கள்? நாங்கள் என்ன, இரண்டு சீவன்கள் தானே? எப்படியோ சமாளித்துக் கொள்கிறோம். நீ

ஊருக்குப் போய் உன் வீட்டைக் கவனித்துக் கொள்; உன் குழந்தைகளையும் நன்றாகப் பார்த்து வளர்த்துவா'' என்று அன்போடு சொல்லி அனுப்பிவிட்டான்.

அன்று முதல் வீரப்பன் தானாகவே சமைப்பான்; குழந்தைக்குச் சோறு போடுவான். அவளுக்குத் தண்ணீர் ஊற்றுவான். இப்படியாக வீட்டு வேலைகள் அனைத்தையும் செய்து முடித்துவிட்டு நேரம் தவறாமல் கூலி வேலைக்குப் போவான்; வள்ளியாத்தாளையும் கூடவே கூட்டிச் செல்லுவான். அவன் கழனிகளிலே வேலை செய்து கொண்டிருக்கும்போது அவள் மர நிழலிலே கல்லையும் ஓட்டையும் பொறுக்கி எடுத்து வைத்து விளையாடிக் கொண்டிருப்பாள்.

இப்படி வளர்ந்து பன்னிரண்டு வயதாவதற்குள் அவள் சிறிது சிறிதாகச் சமையல் செய்வதற்குக் கற்றுக்கொண்டாள். தளர்ச்சி அடைந்துகொண்டிருந்த தந்தைக்கு அது பெரிதும் உதவியாக இருந்தது. வீரப்பன் தினமும் கூலி வேலைக்குப் போய் வருவான். வந்ததும் தன் மகளோடு சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு, அவள் சமைத்து வைத்திருக்கும் சோளச்சோற்றையோ, ராகிக் களியையோ உண்பான். அவன் உண்ட பிறகு தானும் உண்டு, அடுத்த நாட்காலையில் வேண்டியிருக்கும் உணவைப் பத்திரமாக மூடிவைத்துவிட்டு வள்ளியாத்தாள் படுக்கச் செல்லுவாள். தந்தையும் மகளும் பேசிக்கொண்டே உறங்கி விடுவார்கள்.

வீரப்பன் சம்பாதிக்கும் கூலியைக்கொண்டு இவ்வாறு வாழ்க்கை எளிமை மணக்கும் இன்பமாக நடந்து வந்தது. ஆனால் மகளுக்கு வயசாக ஆக வீரப்பன் மனத்திலே ஒரு கவலை குடிபுகலாயிற்று. ஆண்டு முழுவதும் வேலை செய்தாலும் அவனால் இருபது ரூபாய் கூட மிச்சம் பிடிக்க

முடியவில்லை. அந்த நிலையில் தன் மகளுக்கு வயது வந்தவுடன் எப்படிக் கல்யாணம் செய்ய முடியும் என்று அவன் எண்ணமிடலானான். அவனுக்கு ஒரே மகள் தான் இருக்கிறாள். அவளுக்கு மரியாதையான முறையில் சீரெல்லாம் செய்து மணம் முடிக்க வேண்டுமல்லவா? இருநூறு முந்நூறு ரூபாய்கூட இல்லாமல் அதை எப்படிச் செய்வது? இந்த எண்ணம் அவனை வாட்டத் தொடங்கியது. தன் மகளைக் கூலி வேலைக்குப் போகும்படி சொல்லவும் அவனுக்கு விருப்பமில்லை.

பல நாட்களுக்குப் பிறகு அவனுக்கு ஒரு நல்ல யோசனை தோன்றிற்று. அதன்படி அவன் ஒரு கடாரிக் கன்றை முப்பது ரூபாய் கொடுத்து வாங்கி வந்தான். அது நல்ல மயிலை; காங்கயம் வர்க்கத்தைச் சேர்ந்தது. பெரிதானால் முந்நூறு நானூறு என்று விலைக்குப் போகும். வீட்டு வேலைகளையெல்லாம் செய்துவிட்டு மற்ற நேரத்தில் வள்ளியாத்தாள் அதை மேய்த்து வரலானாள். சில நாட்களிலேயே அவளுக்கு அதன் மேல் அளவில்லாத பிரியம் ஏற்பட்டு விட்டது; மிகுந்த சிரத்தையோடு அதை வளர்த்து வந்தாள். மூன்று ஆண்டுகளிலே அது நல்ல அழகான கடாரியாகி ஈனும் பருவத்தை அடைந்து விட்டது.

அதை விற்றுக் கிடைக்கும் பணத்தைக் கொண்டு வள்ளியாத்தாளுக்கு அடுத்த மாதத்தில் கல்யாணத்தை முடித்து விடுவதென்று வீரப்பன் இப்பொழுது தீர்மானம் செய்திருக்கிறான். தன் தங்கை மாராயியின் மகனுக்கே உரிமைப் பெண்ணாகக் கொடுத்து விடுவதென்று ஏற்பாடாகி விட்டது. ஆனால் அதைப்பற்றி மகளிடம் அவன் ஒரு வார்த்தைகூடப் பேசியதில்லை. வேறு எல்லா விஷயங்

களைப்பற்றியும் அவளுடன் கலந்து யோசிப்பவன் அவளுடைய மணத்தைப்பற்றி மட்டும் அவ்வாறு செய்யவில்லை. அதைக் குறித்து அவளுடன் பேசுவதற்கு என்ன இருக்கிறது? கல்யாணம் என்றால் அது பெற்றோர்கள் ஆலோசித்து ஏற்பாடு செய்யவேண்டிய காரியந்தானே? அதில் மகனுக்கோ மகளுக்கோ என்ன யோசனை இருக்கிறது? கிராமங்களிலே பரம்பரையாக இந்த நியாயந்தான் வழக்கத்திலிருந்து வருகிறது. அதையே வீரப்பனும் பின்பற்றினன். 'சிறு பிள்ளைகளுக்கு அதைப்பற்றி என்ன தெரியும்? எனக்குக் கல்யாணம் செய்தபோது என்னைக் கேட்டா செய்தார்கள்?' என்று இப்படி அவன் எண்ணிக் கொண்டான். மேலும், தன் அருமை மகள் என்றாலும் அவளிடத்தில் கல்யாணத்தைப்பற்றிப் பேசுவதற்கு அவனுக்கு இயல்பாக வார்த்தை வரவில்லை.

அதனால்தான் அவன் இப்பொழுதுகூடப் பதில் சொல்லத் தயங்கினன். ஆனால் மகள் மறுபடியும் அதே கேள்வியை விடாது கேட்டாள். அவன் கொஞ்சம் சமாளித்துக்கொண்டு, "எனக்கும் வயசாகிவிட்டது. சீக்கிரமாக உனக்குச் செய்ய வேண்டிய கடமையெல்லாம் செய்துவிட்டால் மனசுக்கு நிம்மதியாக இருக்கும்" என்று ஒருவிதமாக மறுமொழி கூறினன்.

"இப்போ உங்களுக்கென்ன அப்படி வயசாய்ப் போய்விட்டது?" என்று தடுமாற்றத்தோடு வள்ளியாத்தாள் வினவினள்.

"ஏன், சித்திரை வந்தால் ஐம்பது முடியுதே?"

"அதெல்லாம் ஒரு வயசா? என்ன இருந்தாலும் கடாரியை இப்போ விற்க வேண்டாமையா" என்று

சொல்லிக்கொண்டே மகள் கதவருகில் வந்தாள். அவளுக்கு இந்தக் கல்யாணப் பேச்சு முன்பே தெரியாததல்ல. யாரும் பெண்களிடம் அதைப்பற்றிக் கலந்து கொள்ளா விட்டாலும் அவர்களுக்கு அதை நுட்பமாக அறிந்து கொள்ளும் ஆற்றல் இருக்கிறது. அத்தை மாராயி அடிக் கடி வருவதிலிருந்தும், உடன் பிறந்தவனுடன் தனியாகத் தாழ்ந்த குரலில் பேசுவதிலிருந்தும் அவள் விஷயத்தை அறிந்துகொண்டாள். அவளுக்குத் தன் அத்தை மகனை மணந்துகொள்வதில் விருப்பமில்லை. அவள் பழகியதெல் லாம் அவன் ஒருவனுடன்தான். வேறு இளைஞர்களுடன் அவள் அதிகமாகப் பேசியதுகூடக் கிடையாது. அவ ளுண்டு, அவள் வளர்த்த கடாரியுண்டு, வீட்டு வேலையுண்டு என்று இதுவரை இருந்து வந்தாள். என்றாலும் அத்தை மகனை மணப்பதற்கு அவள் உள்ளம் ஏனோ இடங்கொடுக்க வில்லை. அதைக் குறிப்பாகவாவது தன் தந்தைக்குத் தெரியப்படுத்த வேண்டுமென்ற ஆவலோடிருந்தாள். இப் பொழுது அதற்குச் சமயம் வாய்த்துவிட்டதாக அவள் கருதினாள்.

"இப்போ விற்கப்படாதென்றுதான் எனக்கும் ஆசை. ஆனால் உன் அத்தை சும்மா அவசரப்படுத்து கிறாள்" என்று உட்கருத்தைப் பட்டும் படாததுமாக வீரப்பன் சொல்லி வைத்தான்.

"அத்தைக்கு வேலை என்ன?" என்று இதற்குப் பதில் சிறிது வெடுக்கென்று பிறந்தது.

"என்னமோ சோசியன் சொல்லியிருக்கிறானாம். பையனுக்கு இந்த வருஷத்திலே நடக்காவிட்டால் பிறகு கல்யாணம் நடக்கவே நடக்காதாம். அதனால்தான் அவ ளுக்கு இத்தனை அவசரம்."

"சோசியன் என்ன வேண்டுமானாலும் சொல்லு வான். அவனுக்கென்ன? அப்படி அவசரமாக இருந்தால் எங்காவது போகிறது."

"அப்படிச் சொல்ல முடியுமா? அவளுக்கிருக்கிற உரிமை எங்கே போகும்?"

இந்தச் சமயத்தில் வாசலிலே கட்டியிருந்த கடாரி 'ம்மா' என்று கத்திற்று. வள்ளியாத்தாள் வெளியே வந்து, தான் பிடுங்கி வந்திருந்த பச்சைப் புல்லில் கொஞ் சம் எடுத்து அதனருகே போட்டுவிட்டு அங்கேயே நின் ருள். அவள் மனத்திலே என்ன என்னவோ எண்ணங்கள் எழுந்து மோதின. சற்று நேரம் மௌனமாக இருந்து விட்டு, "ஐயா, இந்தக் கடாரியை விற்கவே வேண்டாம்; இது ஒன்றிருந்தால் எனக்குப் போதும்" என்ருள்.

"என்ன வள்ளியாத்தா, இப்படிச் சொன்னல் எப்படி....?"

"நான் உங்களிடம் சொல்லாமல் வேறு யாரிடத் திலே சொல்லுவேன்? அம்மாளா இருக்கிருள்?" என்று சொல்லிக்கொண்டே அவள் தன்னையும் அறியாமல் அழுது விட்டாள்.

வீரப்பனுக்கு அந்த அழுகையின் பொருள் விளங்க வில்லை. தான் சொன்ன சொல்லை ஒரு நாளும் தட்டியறி யாத மகள் அன்று கட்டுச் சோறு கட்டி வைக்காததன் குறிப்பும் அவனுக்குப் புலனுகவில்லை. கல்யாணப் பேச் சைக் கேட்டால் பெண்கள் இப்படியெல்லாம் நடந்து கொள்வது இயல்பு என்று எண்ணிக்கொண்டு அவன் காலையில் கடாரியைப் பிடித்துக்கொண்டு சந்தைக்குப் புறப்பட்டான். அவன் அதைச் சாதாரணமாகப் பிடித்துக்

கொண்டு போனதில்லை. வள்ளியாத்தாள்தான் மேய்க்கக் கொண்டு போவது; தண்ணீர் காட்டுவது; கட்டுத்தறியில் கட்டுவது எல்லாம். இன்று புதிதாக அவன் பிடித்துக் கொண்டு அதட்டவே கடாரி பயந்து குடிசையை நோக்கிக் கத்திற்று. வள்ளியாத்தாள் கதவருகில் நின்று கொண்டிருந்தாள். அவள் கன்னத்திலே கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. தந்தையும் அதைக் கவனித்தான்.

"இத்தனை நாளாகப் பிரியமாக வளர்த்த கடாரியைப் பிரிவதென்றால் உனக்கு வேதனையாகத்தான் இருக்கும்; என்ன செய்யலாம்?" என்று கூறிக்கொண்டே வீரப்பன் போய்விட்டான்.

துடியலூர்ச் சந்தைக்குக் காட்டூரிலிருந்து ஒன்பது மைலிருக்கும். இரண்டு மைல் காட்டுப் பாதையில் சென்று விட்டால் பிறகு விசாலமான பாட்டை. அதில் போவது அத்தனை கடினமல்ல. இருந்தாலும் அந்தக் கடாரியைப் பிடித்துக்கொண்டு போவது பெருஞ் சங்கடமாக முடிந்து விட்டது வீரப்பனுக்கு.

வள்ளியாத்தாள் அன்று அடுப்பு மூட்டவே இல்லை; துக்கத்தோடு படுத்திருந்தாள். மாலையில் தகப்பன் பசியோடு வந்தால் என்ன செய்வதென்றுகூட நினைக்கவில்லை. தனது வாழ்க்கையில் இருள் சூழ்வதைப்போல அவளுக்கு ஒரு தெளிவில்லாத உணர்ச்சி ஏற்பட்டது. தந்தையிடத்தில் நேற்றுவரை குழந்தையைப் போலத் தன் மனத்தில் தோன்றியதை யெல்லாம் சொல்லிக்கொண்டிருந்தவளுக்கு இன்று வாயடைத்துவிட்டது. அவளுக்கு ஒன்றும் புலப்படவில்லை. தந்தை இரவிலே வீட்டிற்குத் திரும்பும் போது அவள் சோறு சமைக்காததையும், உணவு

அருந்தாமல் இருப்பதையும் பார்த்தாவது அவன் உண்மையை அறிந்துகொள்ளமாட்டானா என்று எண்ணியிருந்தாள். அந்த நம்பிக்கை ஒன்றுதான் அவளுக்குக் கொஞ்சம் ஆறுதல் அளித்தது.

ஆனால் அவள் எதிர்பார்த்தபடி வீரப்பன் அன்றிரவு திரும்பவில்லை. மறு நாளும் அவன் வரக் காணோம். அதற்கடுத்த நாள் பொழுது சாயும் வரையில் வரவில்லை.

கடாரியை விற்றுப் பணத்தை எடுத்துக்கொண்டு நேராகத் தன் தங்கை வீட்டிற்குப் போயிருக்கலாம் என்று அவள் கருதினாள். தங்கையோடு கல்யாண ஏற்பாடுகளைப் பற்றியெல்லாம் உற்சாகமாகப் பேச்சு நடந்துகொண்டிருக்கும் என்று அவளுக்குத் தோன்றியது. இந்த எண்ணம் அவள் துக்கத்தை மேலும் அதிகமாக்கிற்று.

வள்ளியாத்தாளுக்குச் சென்ற ஆறுமாதங்களாக ஒரு தோழி கிடைத்திருந்தாள். அவள்தான் எதிர் வீட்டுச் சின்னப்பனுக்கு மனைவியாக வாய்த்த பாவாத்தாள். இருவரும் விரைவிலே நெருங்கிப் பழகி ஒருத்திமேலொருத்தி மிகுந்த அன்பு கொள்ளலானார்கள். வள்ளியாத்தாள் பாவாத்தாளை அக்காள் என்று அழைத்தாள். பாவாத்தாள் வீரப்பனைப் பெரியப்பன் என்று முறை கொண்டாடினாள். இளம் பெண்கள் இருவரும் தங்கள் உள்ளத் துடிப்பையெல்லாம் தங்களுக்குள்ளே ஒளிக்காமல் பேசிக்கொள்வார்கள். பாவாத்தாளுடைய சொந்த ஊர் அங்கிருந்து பதினைந்து மைல் இருக்கும். அங்கேயே ஓர் இளைஞனுக்கு அவளை மணம் முடிப்பதாக நெடுநாள் வரையில் பேச்சிருந்ததாம். அவளுக்கும் அது உள்ளூற விருப்பமாம். ஆனால் சீர்வரிசைகளைப் பற்றி நடந்த பேச்சில் பெற்றோர்களுக்

குள்ளே உடன்பாடேற்படாததால் கடைசியில் அந்தக் கல்யாணம் நின்றுபோய் விட்டதாம். பிறகு பாவாத்தாள் காட்டூரில் என்றும் பார்த்திராத ஒருவனுக்கு வாழ்க்கைப் பட்டாள். இப்பொழுது அவளுடைய உள்ளத்தைத் திறந்து காண்பிப்பதற்கு வள்ளியாத்தாள் ஒருத்திதான் உண்டு.

கிராமங்களிலே புதிதாக மணமான இளம் பெண்கள் தனியாக உட்கார்ந்துகொண்டு கண்ணீர் வடிப்பதைச் சாதாரணமாகக் காணலாம். தாய் தந்தையரைப் பிரிந்து புக்ககம் வந்ததால் அப்படிச் செய்கிறார்கள் என்று அனை வரும் சொல்வார்கள். இது பொதுவாக உண்மையாக இருக்கலாம். ஆனால் வேறு காரணமே இருக்காது என்று அவர்கள் தீர்மானமாக நினைப்பதுதான் ஆச் சரியம். அப்படி இருந்தால்தான் என்ன? நாளடைவில் ஒன்று இரண்டு குழந்தைகள் பிறந்துவிட்டால் எல்லாம் சரியாகப் போய்விடுகிறது. சமூகக் கட்டுப்பாட்டை யெல்லாம் பார்த்துப் பார்த்து உள்ளம் சுருங்கி இளம் பெண்களும் தங்கள் நிலைமையை மௌனமாக ஏற்றுக் கொண்டு விடுகிறார்கள். பின்பு வாழ்க்கை அவர்களுக்கு இன்பமாகவும் மாறிவிடுகிறது. மறதி என்பது ஓர் அற் புதமான சக்தி யல்லவா?

கிராமச் சமுதாய வாழ்க்கை போதிக்கின்ற இந்தக் கருணையற்ற பாடத்தைத்தான் பாவாத்தாள் இன்று கற்றுக் கொண்டு வருகிறாள். அவளும் ஒன்றிரண்டு ஆண்டுகளில் கூர்மை மழுங்கிக் குடும்பச் சகடத்தில் கிரீச்சிடாது செல் லும் சக்கரமாகிவிடுவாள். அதுதானே வேண்டியது?

சென்ற இரண்டு மூன்று நாட்களாகப் பாவாத்தா ளுக்கு வேலை அதிகம். பருத்திக்காடு களை வெட்ட

வேண்டியிருந்தது. அதனால் தன் தோழியின் வீட்டுப் பக்கம் அவள் வரவில்லை. ஆனால் மூன்றும் நாள் மாலையில் அவளுடன் இரண்டு வார்த்தையாகிலும் பேசிவிட்டுப் போகலாம் என்று வேகமாக வந்தாள். வந்தவளுக்கு வள்ளியாத்தாளின் கவலையெல்லாம் தெரிந்துவிட்டது. தன் வீட்டிற்கு வந்து முதலில் கொஞ்சமாவது சாப்பிடவேண்டும் என்று வற்புறுத்தினாள். ஆனால் வள்ளியாத்தாள் இணங்கவில்லை. மூன்று நாளும் அவள் அடுப்பு மூட்டவில்லை.

"தினமும் சாப்பிட்டுச் சாப்பிட்டு என்ன கண்டுவிட்டேன்? அப்படி இந்த உடம்பைக் காப்பாற்றி என்ன ஆகப் போகிறது?" என்று அவள் புலம்பினாள்.

"என்ன இருந்தாலும் இந்த ஆண் பிள்ளைகளுக்கு ஒன்றுமே தெரிகிறதில்லை" என்று குற்றம் சாட்டினாள் பாவாத்தாள்.

"அவர்களைச் சொல்லி என்ன செய்வது?" என்று பெருமூச்சு விட்டாள் மற்றவள்.

"ஆமாம், ஆண்பிள்ளைகளுக்குத்தான் தெரியாதென்றால் பெண்கள் மாத்திரம் தெரிந்து கொள்ளுகிறார்களா? எங்கள் வீட்டிலே அம்மாளுந்தான் இருக்கிறாள்."

"பெண்ணாகப் பிறக்கவே படாது" என்று வள்ளியாத்தாள் முடிவு க்ட்டினாள்.

பாவாத்தாளுக்குச் சட்டென்று ஒரு யோசனை தோன்றிற்று. "பெரியப்பன் வந்ததும் அவரிடம் பேசட்டுமா?" என்று அவள் கேட்டாள். ஆனால் அந்தக் கேள்வியின் பொருள் மனத்தில் பதியப் பதிய அவளுக்கே சந்தேகமும் திகிலும் ஏற்பட்டு விட்டன.

"நீ மட்டும் எப்படிச் சொல்லுவாய்? என்னவோ விதியென்று பேசாமல் இருக்க வேண்டியதுதான்" என்று வள்ளியாத்தாள் பற்றற்றவள் போல் பேசினாள்.

இவ்வாறு இருவரும் அங்கலாய்த்துக் கண்களிலிருந்து முத்துத் துளிகளைச் சிந்திக்கொண்டிருந்தார்கள்.

வெகு நேரம் இப்படிக் கழிந்தது. வெளியிலே இன்னும் மங்கலாக வெளிச்சமிருந்தாலும் குடிசைக்குள்ளே ஒரே கும்மிருட்டாக இருந்தது. விளக்கேற்றி வைக்க வேண்டுமென்று அவர்களுக்குத் தோன்றவில்லை. அந்தச் சமயத்தில் எதிர் வீட்டு வாசலிலிருந்து பாவாத்தாளின் மாமியார் அவளை உரத்த குரலில் கூப்பிடும் ஓசை கேட்டது. "அக்கா, நீ வீட்டுக்குப் போ. அங்கே வேலை இருக்கும்" என்றாள் வள்ளியாத்தாள்.

ஆனால் பாவாத்தாள் அசையவே இல்லை. வெளியிலே காலடிச் சத்தம் கேட்டது. முன்றானையால் முகத்தைத் துடைத்துக்கொண்டு இருவரும் கலவரத்தோடு திரும்பிப் பார்த்தார்கள். வீரப்பன் மெதுவாக நடந்து வந்து வெளித் திண்ணையிலே, "உஸ் அப்பாடா!" என்று அனத்திக்கொண்டு உட்கார்ந்தான். முழங்கால் வரையிலும் படிந்திருந்த புழுதியைக் கழுவவே இல்லை. அவன் முகத்தில் சோர்வும் களைப்புமே குடிகொண்டிருந்தன.

சற்று நேரம் யாரும் பேசவில்லை. பிறகு பாவாத்தாள் ஆரம்பித்தாள். "பெரியப்பா, எங்கே போயிருந்தீர்கள்? இந்த மூன்று நாளாய் வள்ளியாத்தா சோறு தண்ணீர் ஒன்றும் குடிக்காமல் அழுதுகொண்டே கிடக்கிறாள்."

"நானும் நல்ல கஞ்சி குடித்து மூன்று நாளாச்சு" என்று பதில் சொன்னான் வீரப்பன்.

"ஏன் பெரியப்பா? அத்தை வீட்டுக்குத்தானே போயிருந்தீர்கள்?"

"இல்லேம்மா இல்லே. அப்பவே வள்ளியாத்தா அந்தக் கடாரியை விற்க வேண்டாமென்று சொன்னாள். நான் தான் கேட்காமல் கொண்டுபோனேன்."

"அதை என்ன விலைக்குக் கொடுத்தீர்கள்?"

"அதை ஏன் கேட்கிறாய்? வள்ளியாத்தாள் ரொம்ப மனமுடைஞ்சு போவாள். எனக்கு அதுதான் கவலே. பணம் பெரிசில்லே."

"பெரியப்பா, என்ன நடந்தது? சொல்லுங்கள்."

"நான் அந்தக் கடாரியைப் பிடித்துக்கொண்டே போனேன். ரஸ்தாவைக் கண்டதும் சும்மா மிரண்டு மிரண்டு குதித்துக்கொண்டே வந்தது. காட்டுக்குள்ளேயே இருந்து வளர்ந்ததால், சைக்கிள், மோட்டார் ஒன்றையும் பார்த்தது கிடையாது. ஒரு நாலு மைல்கூடப் போயிருக்க மாட்டேன். பெரியநாயக்கன் பாளேயத்திற்குப் பக்கமாகப் போயிருக்கலாம். ஒரு நாசமாப் போன மிலிட்டரி லாரி வந்து சேர்ந்தது. அந்தப் பாவி கிட்டவந்து பூம் பூமென்று சத்தம் பண்ணினன். கடாரி ஒரே இழுப்பாக இழுத்துக் கொண்டு போய்விட்டது. நானும் கூடவே ஓடிப் பார்த்தேன். என்னாலே முடியல்லே" என்று சொல்லி அவன் நிறுத்தி விட்டான்.

"அப்புறம்...?" என்று பாவாத்தாள் மேலும் கேட்டாள்.

"அப்புறம் என்ன? இந்த இரண்டு நாளாக எங்கெல்லாமோ தேடிக்கொண்டே போனேன். வழி நெடுக விசாரித்துக்கொண்டே மலையருகில் போய்விட்டேன்.

கடைசியிலே ஒருத்தன் குருடிமலைச் சாரலுக்குள்ளே ஒரு கடாரி கத்திக்கொண்டு ஓடினதாகச் சொன்னான். அங்கே போய்க் கல்லுக்குள்ளும் முள்ளுக்குள்ளும் புதர் புதராக அலைந்தேன். அப்படி அலைஞ்சாலும் பரவாயில்லை; கடாரி கிடைத்திருந்தால் எல்லோருக்கும் சந்தோஷமாய்ப் போயிருந்திருக்கும்."

"காட்டுக்குள்ளே என்னமாவது............?" என்று இழுத்து நிறுத்தினாள் பாவாத்தாள்.

"ஆமாம், பாவாத்தா, கிளியை வளர்த்துப் பூனை கையில் கொடுத்தது போலக் கடாரியைப் புலிக்கு இரையாகக் கொடுத்துவிட்டேன். புலி யடித்து அது கிடந்ததைப் பார்த்து எனக்கே பொறுக்க முடியவில்லை. அப்படியே ஒரு மூச்சு அழுதுவிட்டேன்" என்று தழுதழுத்த குரலில் வீரப்பன் முடித்தான்.

அப்பொழுதுதான் வள்ளியாத்தாள் பேச வாயெடுத்தாள். "ஐயா, கடாரி போனால் போகிறது. அதற்காக மனத்திலே உங்களுக்குக் கவலை வேண்டாம். அது போனால் இன்னொன்று வாங்கி வளர்த்தால் போகிறது. நான் சீக்கிரமாகச் சோறாக்குகிறேன்; சாப்பிடலாம்" என்று உற்சாகமாக அவள் சொன்னாள். தான் வளர்த்த கடாரியைப் புலி அடித்துவிட்டதே என்று அவளுக்குப் பெரிய வருத்தந்தான்; இருந்தாலும் அதைக் கீழே அழுத்திவிட்டு ஏதோ ஒரு விவரிக்க முடியாத இன்ப உணர்ச்சி மேலோங்கியது.

"சோறாக்கி அப்புறம் சாப்பிடுவானேன்? இப்பொழுதே எங்கள் வீட்டிற்குப் போய்ச் சாப்பிடலாம், எழுந்திருங்கள்" என்று பாவாத்தாள் கலகலப்பான குரலிலே அழைத்தாள்.

வள்ளியாத்தாள் இப்படிக் கவலை இல்லாமல் பேசுவாளென்று வீரப்பன் எதிர்பார்க்கவே இல்லை. அவள் வருத்தப்பட்டுப் புலம்புவாளே என்றுதான் அவன் பெரிதும் பதைத்துக் கொண்டிருந்தான். அவளுக்குச் செய்ய வேண்டிய கடமையை விரைவில் செய்ய இயலாமற் போய் விட்டதே என்றுகூட அவன் கலங்கவில்லை.

ஆனல் வள்ளியாத்தாளின் செய்கை அவனுக்கு மலைப்பை உண்டாக்கிவிட்டது. உயிருக்குயிராக வளர்த்த கடாரியைப் புலி அடித்துவிட்டது என்று கேள்விப்பட்ட பிறகும், விற்பதற்கே உடன்படாது அழுதவள் இவ்வாறு குதூகலமாகப் பேசுவது அவனுக்கு விளங்கவே இல்லை. அவன் திகைத்துப்போய்ச் சிலைபோல் உட்கார்ந்திருந்தான். பாவாத்தாள் சாப்பிட அழைத்ததும் அவன் செவியில் நுழையவில்லை.

# பஞ்சுக் காலன்

சுந்தரம் வேட்டையாடுவதில் கை தேர்ந்தவன். நீலகிரித் தொடரிலே அவன் நுழையாத இடம் கிடையாது. எவ்வளவு அடர்ந்த காடு என்றாலும் அதற்குள்ளே அவனுடைய அடிச்சுவடு பட்டுத்தான் இருக்கும். யானை வேட்டை, புலிவேட்டை என்றால் அவனுக்கு ஒரே உற்சாகம். காட்டெருமை, காட்டுப் பன்றி முதலிய பயங்கர மிருகங்களையும் அவன் துப்பாக்கி எத்தனையோ தடவை உயிர் குடித்திருக்கிறது. ஆனால் புலி வேட்டையில்தான் அவனுக்கு அலாதியான விருப்பம்.

யானை மிகவும் பலம் வாய்ந்ததுதான். ஆனால் புலியின் தந்திரமோ குரூரமோ அதற்கு வராது. "யானையை ஏமாற்றி மடக்கிவிடலாம்; புலியிடத்திலே அந்த ஜாலமெல்லாம் பலிக்காது" என்று அவன் சொல்லுவான்.

"பிறகு எதற்காகப் புலி வேட்டை, புலி வேட்டை என்று எப்பொழுதும் அதையே நாடுகிறாய்?" என்று கேட்டால் அவனுக்குச் சிரிப்பு வந்துவிடும். "ஆட்டுக் குட்டியை வேட்டையாடுவதிலே என்ன சாமர்த்தியமிருக்கிறது? எந்த ஜமீன்தாரும் அதைச் செய்யலாம். எனக்குப் புலி வேட்டைதான் உகந்தது. மனிதனுடைய புத்தி சாலித்தனத்தை அதுதான் ஒவ்வொரு விநாடியும் சோதனை செய்யக்கூடியது" என்று அவன் பெருமையோடு பதில் சொல்லுவான்.

அவன் கூறுவது முற்றும் உண்மைதான். புலி வேட்டை எளிதான காரியமல்ல. எடுத்து நீட்டியவுடன்

குறி தவறாமல் சுடக்கூடிய திறமை முதலில் வேண்டும். அது மட்டும் போதாது. சமயோசித புத்தியும் மின்னல் வேகத்திலே தீர்மானம் செய்து பதற்றமில்லாமல் சடா ரென்று காரியத்தில் இறங்கும் தன்மையும் வேண்டும். இவை யெல்லாமிருந்தாலும் புலியின் தன்மையைப் பற்றிப் பூரண மாகத் தெரிந்துகொள்ளாவிடில் அதை வேட்டையாடுவது உயிருக்கு ஆபத்தாகத்தான் முடியும்.

ஷோக் மான் வேட்டை என்று கேள்விப்பட்டிருக்கி றீர்களா? வேட்டையாடுகிறவன் துப்பாக்கியை வைத்துக் கொண்டு ஷோக்காக ஓரிடத்திலே பதுங்கியிருப்பான். அவன் காட்டிற்குள்ளே அலைவதுமில்லை; மானைத் தேடு வதுமில்லை. கூட வந்திருக்கும் ஏவலாளர்கள் தப்பட்டை, கொம்பு முதலிய வாத்தியங்களை முழக்கிக்கொண்டு காட் டிற்குள்ளே நுழைவார்கள். அந்த ஆரவாரம் கேட்டு மிரண்ட மான்கள் அங்கும் இங்குமாகப் பாய்ந்தோடும். பதுங்கியிருக்கிறவனுக்கு எதிரிலே தென்பட்டால் அவன் சுடுவான். இதுதான் ஷோக் மான் வேட்டை. இப் படி ஒய்யாரமாகப் புலிவேட்டை யாடும் ஒரு வகையும் உண்டு. ஒரு மரத்தின் உச்சியிலே கட்டப்பட்டிருக்கும் ஒளிகூண்டிலே ஒன்றிரண்டு பேர் உட்கார்ந்துகொள் வார்கள். கீழே ஓரிடத்திலே ஓர் ஆட்டையோ அல்லது கிழட்டு மாட்டையோ கட்டிவிடுவார்கள். கானகத்திலே தனியாகக் கட்டப்பட்டிருக்கும் அந்தப் பிராணி இருள் ஏற ஏறப் பயந்து ஓலமிடும். அதைக் கேட்டுப் புலி வருவ துண்டு.

கட்டுண்டு கிடக்கும் அந்த ஜீவனைப் புலி அடித்துத் தின்ன ஆரம்பிக்கும்போது மர உச்சியில் இருப்பவர்கள் அதன் முகத்திலே விழும்படி பிரகாசம் மிகுந்த மின்சார

டார்ச்சு ஒளியைத் திடீரென்று போடுவார்கள். புலியின் கண்கள் இருட்டு நேரத்திலே பூனையின் கண்கள்போல இன்னும் அகலமாக விரிந்திருக்கும். அதனால் பிரகாசமான ஒளி பட்டவுடன் புலி திகைப்படைந்து பார்வை கலங்கி அசைவற்று நிற்கும். அந்தச் சமயம் பார்த்து ஆற அமர இருந்து துப்பாக்கியிலே குறி வைத்துச் சுடுவார்கள். அதிலே அத்தனை ஆபத்துக் கிடையாது. ஷோக் மான் வேட்டையைப்போல இதுவும் ஷோக் வேட்டைதான்.

சுந்தரத்திற்கு இது கொஞ்சங்கூடப் பிடிக்காது. காட்டு மிருகங்கள் நடமாடுகிற இடத்திற்கு நேரே அவன் செல்லுவான். மான் முதலான தனக்கு விருப்பமான இரையைத் தேடிப் புலியும் அங்கு வந்து பதுங்கிக்கொண்டிருக்கும். அதைக் கண்டுபிடித்து நேருக்கு நேரே சுட வேண்டும். இதுதான் அவன் விரும்புவது. இதிலே ஆபத்துண்டு. சாமர்த்தியத்திற்கும் இடம் உண்டு. "ஷோக் வேட்டை என்றால் அது கிழவிகள் செய்யவேண்டிய காரியம்" என்பான் சுந்தரம்.

அவனை நீலகிரி வட்டாரத்திலே ஷிகாரி சுந்தரம் என்றுதான் அனைவரும் அழைப்பார்கள். துஷ்ட மிருக வேட்டையிலே விருப்பமுள்ள செல்வர்களில் அவன் உதவியை நாடாதவர்கள் இல்லை. அதனால் சுந்தரத்திற்கு நல்ல வரும்படி. புலித்தோலும் போட்டோக்களும் செல்வர்களின் வீட்டை அலங்கரிக்கும். சுந்தரத்திற்கு அவற்றைப் பற்றி லட்சியம் இல்லை. செத்துப்போன புலி அவன் கவனத்தை இழுக்காது. அதனருகில் நின்று போட்டோ எடுத்துக்கொள்வதிலும் அவன் ஆர்வங் காட்டுவதில்லை. புலியைச் சுட்ட சுந்தரம் தூரத்திலே விலகி நின்றுகொள்ளுவான். கூட வரும் செல்வர்கள் செத்துப்போன

புலியின் மீது பயமில்லாமல் காலை ஊன்றி நின்று கையிலே துப்பாக்கியையும் பிடித்துக்கொண்டு போட்டோ எடுத்துக் கொள்ளுவார்கள்.)

இருபத்தைந்து நாட்களுக்கு முன்னாலே சீமானூர் ஜமீன்தார் புலிவேட்டைக்குச் சுந்தரத்தை அழைத்த போது அவனுக்கு அளவுக்கு மீறி உற்சாகம் வந்துவிட்டது. சில மாதங்களாக அவனுக்கு இப்படி நல்ல சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. அதோடு மற்றொரு முக்கிய காரணமும் இருந்தது. தீபாவளிக்குத் துணிமணிகள் வேண்டும். இந்த வேட்டை வெற்றிகரமாக முடிந்துவிட்டால் அதற்குக் கவலைப்பட வேண்டியதில்லை. வீட்டிலே மனைவி மக்களுக்குத் திருப்தியாக எல்லாம் நல்ல பட்டாகக் கிடைத்து விடும்.

இப்படி நினைத்துக்கொண்டு அந்த ஷிகாரி வேட்டைக்குக் கிளம்பினான். வருவாயிலே அதிக நாட்டம் வைத்ததனாலோ என்னவோ அன்றைய இரவு வேட்டை உயிருக்கே ஆபத்தைக் கொண்டுவரக் கூடிய அவ்வளவு சங்கடமானதாகப் போய்விட்டது.

முன் நிலாக் காலமாதலால் அடர்ந்த அந்த நீலகிரிக் காடுகளிலும் சுந்தரம் எளிதாக வழி காட்டிக்கொண்டு சென்றான். சுமார் ஒரு மைல் நடந்த பிறகு அவன் ஜமீன்தாரையும் அவரோடு வந்த நால்வரையும் அங்கே ஏற்படுத்தப்பட்டிருந்த ஒளியிடங்களுக்குள்ளே தங்கும்படி செய்தான். நல்ல பத்திரமான இடங்கள். மேலும் அந்தப் பக்கத்திலே புலிகளின் நடமாட்டம் அநேகமாகக் கிடையாது. வேட்டைக்காரர்களின் ஆர்ப்பாட்டம் அங்கே அதிகமாக இருந்ததால் மான்கள்கூட அந்த வழியாகப் போவதைத் தவிர்த்துவிட்டன.

"ஒளியிடத்திலேயே ஜாக்கிரதையாக இருந்துகொண்டு ஏதாவது மிருகம் எதிர்ப்பட்டால் சுடுங்கள்; நான் இன்னும் கொஞ்சம் உள்ளே நுழைந்து பார்த்துவிட்டு வருகிறேன்" என்று சொல்லிவிட்டு அவன் கையில் துப்பாக்கியை எடுத்துக்கொண்டு தனியாகப் புறப்பட்டான். சுமார் ஒரு மைல் அவன் நடந்திருப்பான். எதிரே ஒரு நீர்நிலை தென்பட்டது. அதைச் சுற்றிலும் சிறிதளவு வெளியிடம். பிறகு ஒரே மரச் செறிவு. அந்த நீர்நிலையை விட்டால் அவ்விடத்திலே வெகு தூரத்திற்குத் தண்ணீர் குடிக்க வேறொன்றுங் கிடையாது. ஆகையால் தாகங் கொண்ட பிராணிகள் எல்லாம் இரவு நேரத்திலே அங்கேதான் வர வேண்டும். புலி வேட்டைக்கு அதைப் போலச் சிறந்த இடம் கண்டுபிடிப்பது அரிது. சுந்தரம் மூன்று புலிகளை அங்கே சுட்டு வீழ்த்தியிருக்கிறான். ஆனால் அந்த இடத்தில் ஒரு கிழப் புலி மட்டும் அவனை இதுவரையில் ஏய்த்துக்கொண்டே வந்திருக்கிறது.

ஷிகாரி சுந்தரம் அதற்குப் பஞ்சுக்காலன் என்று பெயர் வைத்திருந்தான். புலிகள் எல்லாமே சப்தம் செய்யாமல் நடக்கக்கூடியவைதாம். அவற்றின் பாதங்களின் அடிப் பாகம் அவ்வளவு மெத்தென்றிருக்கும். வறண்டு உதிர்ந்துபோன இலைகளை மிதிப்பதால் ஓரளவு அரவம் கேட்குமேயொழிய, காலடி வைக்கும்போது உடம்பின் கனம் காரணமாக ஓசையே கேட்காது. இந்தக் கிழப் புலி உதிர்ந்த சருகுகளைக் கூட எப்படியோ சமாளித்துக் கொண்டு சிறிதளவும் ஓசை செய்யாமல் செல்லும். அதனாலேயே அவன் அதற்கு அப்படிப் பெயர் வைத்திருந்தான்.

பஞ்சுக்காலனுக்கு வயது முதிர்ந்து சிறிது தளர்ச்சியும் ஏற்பட்டுவிட்டது. வேகத்தில் வல்ல மான்களின்மீது

முன்னைப்போல இப்பொழுது பாய்ந்து சாடுவதற்கு அதனால் முடிவதில்லை. பாயக்கூடிய தூரமும் கொஞ்சம் குறைந்து போயிற்று. அதனால் அது மனித இரையை நாட ஆரம்பித்தது. சாதாரணமாகப் புலிகள் மனிதனைக் கொல்ல இந்தத் தளர்ச்சி நிலையில்தான் தொடங்குவது வழக்கம். மனிதனுக்கு அத்தனை வேகம் கிடையாதல்லவா? இளம் பிராயம் முதற்கொண்டு புலிகளுக்கு மனிதனை அடித்துப் பழக்கமில்லை. காட்டிலே தனது தினசரி வாழ்க்கையிலே சந்திக்காத ஒரு புதிய பிராணி அவன். அதனால் பெரிய புலிகளும் அவனைக் கண்டால் பயந்து ஓடிவிடும். ஆனால் ஒரு தடவை மனித ரத்தத்தை ருசி கண்டுவிட்டால் பிறகு அந்த ருசியில்தான் அவற்றிற்கு நாட்டம் அதிகம். இப்படிப்பட்ட மனிதக் கொல்லிகளைச் சுடுபவர்களுக்கு அரசாங்கத்தில் சன்மானம் கொடுப்பதுண்டு.

பஞ்சுக்காலன் இதுவரை மூன்று பேரை மடக்கிவிட்டது. அதைச் சுட்டு மாய்க்கவேண்டுமென்று சுந்தரம் பல தடவைகளில் முயன்றிருக்கிறான். ஆனால் அவனை அது எப்படியோ ஏய்த்துக்கொண்டிருந்தது. அந்த மனிதன் தன்மேல் கண் வைத்திருக்கிறான் என்பதும் அதற்குத் தெரிந்துவிட்டது. அதனால் அதற்கும் சுந்தரத்தின் மேலே கண். அவனுடைய வாடை அதற்குத் தனியாகத் தெரியும். பஞ்சுக்காலனுடைய அடிச்சுவடுகளும் சுந்தரத்திற்கு நன்றாகத் தெரியும். இப்படி மனிதனும் மிருகமும் போட்டி போட்டுக்கொண்டு கண் வைத்திருந்தது மற்றவர்களுக்குத் தெரியாது. ஆனால் அவர்களுக்குள்ளே மட்டும் பகை வளர்ந்துகொண்டேயிருந்தது.

சுந்தரம் அந்தத் தடாகத்துக்கு மேல்புறமாக மரக் கூட்டங்களிடையே மெதுவாக அமர்ந்தான். அங்கிருந்து

நாலு பக்கமும் நன்றாகப் பார்க்கலாம். அவன் அங்கே சேருவதற்கும் முன்னிலா மறைவதற்கும் சரியாக இருந்தது. அவனுக்கு இருட்டிலே பார்த்து நல்ல பழக்கமுண்டு. கூர்ந்த பார்வையும், சிறிய அரவத்தையும் அறிந்து கொள்ளக்கூடிய செவி நுட்பமும் காட்டு வேட்டையிலே அத்தியாவசியம். பயிற்சியடைந்த அவனுடைய புலன்கள் எப்பொழுதும் உஷாராகவே இருக்கும்.

அன்றைக்கு வெகு நேரம் வரையிலும் யாதொரு பிராணியும் நீரருந்த வரவில்லை. மனித வாடையைக் கண்டு கொண்டனவோ என்று சுந்தரத்திற்கு ஐயமுண்டாயிற்று. வேட்டை கிடைக்காவிட்டால் தீபாவளி குஷிப்படாதே என்று அவனுக்குக் கவலை. அதே சமயத்தில் அந்தப் பஞ்சுக்காலன் தன்னை நீண்ட நாளாக ஏமாற்றி வருவதை நினைத்து அதன்மேல் எரிச்சலும் உண்டாயிற்று. அவன் மனத்திலே பலவிதமான நினைவுகள் ஓடின. சுந்தரம் மெதுவாக மல்லாந்து தரையில் சாய்ந்தான். சிந்தனையின் ஓட்டமும், சிறிதும் கலைவுறாத ஆழ்ந்த நிசப்தமும் சேர்ந்து எப்படியோ அவனுக்குச் சிறிது நேரத்திலே உறக்கத்தை உண்டாக்கிவிட்டன. கண்கள் அவனை அறியாமலே நித்திரையில் மூடின. வலது கையில் வைத்திருந்த துப்பாக்கியின் பிடியும் தளர்ந்து போயிற்று. கைகள் இரண்டும் நெஞ்சின் மேலே கட்டைகள் போலக் கிடந்தன.

அடர்ந்த காட்டிற்குள்ளே அவன் இவ்வாறு அஜாக்கிரதையாக என்றும் தூங்கினதே இல்லை. இன்று அவனுக்குப் பொல்லாத காலம் போலிருக்கிறது.

இவ்வாறு அவன் ஆழ்ந்து உறங்கும் சமயத்திலே அவனுக்கு எதிரிலே ஒரு பயங்கரக் காட்சி நடைபெற்றுக்

கொண்டிருந்தது. கலைமான் ஒன்று மருண்டு மருண்டு பார்த்துக்கொண்டு மெதுவாக நீர்நிலையை அணுகிற்று. அதன் காதுகள் விறைப்பாக நின்றன. மான் தனது வாயை நீரில் வைப்பதற்குமுன் மறுபடியும் சுற்றிலும் ஒரு முறை ஊடுருவிப் பார்த்தது. அவ்வளவுதான்; அக் கணமே திடீரென்று திரும்பி மின்னல் வேகத்தில் வந்த வழியிலேயே தாவிற்று. அதே சமயத்தில் பஞ்சுக்காலன் அதன் மேலே சரேலென்று பாய்ந்தது. அதன் நகங்கள் வெளியில் கோரமாகத் துறுத்திக்கொண்டு மானின் உடலைக் கிழிக்கத் தயாராக இருந்தன. ஆனால் ஒரு முழ தூரத்திற்குள் அதன் பாய்ச்சல் தப்பிப் போய்விட்டது. கலைமான் தனது முன்னெச்செரிக்கையினாலும் கால்களின் உறுதியாலும் உயிர் பிழைத்துச் சென்றோடி மறைந்தது. பஞ்சுக்காலனின் முதுமையும் பாய்ச்சல்தூரக் குறைவும் மானுக்கு உதவியாக நின்றன.

பஞ்சுக்காலன் பாய்ந்ததாலும், மரச் செறிவிற்குள் மான் குதித் தோடியதாலும் ஏற்பட்ட அரவத்தால் சுந்தரம் விழித்துக்கொண்டான். ஆனால் அவன் திடுக்கிட்டு எழுந்திருக்கவில்லை. காட்டிற்குள்ளே அப்படி எழுந்திருப்பது உயிருக்கு ஆபத்து என்று அவனுக்கு நன்றாகத் தெரியும். அதனால் நெருக்கடியான சமயங்களிலும் அவன் அசையாதபடி கண்ணை விழித்து நிதானமாகச் சுற்றிலும் பார்க்கப் பழகியிருந்தான்.

அப்படி இன்று நாலு பக்கத்திலும் பார்க்கின்ற போது ஏமாந்துபோன கிழப் புலியின் உருவம் சற்றுத் தூரத்தில் தெரிய வந்தது. சுந்தரம் அந்தத் திசையிலே பார்வையைச் செலுத்திப் பஞ்சுக்காலனைப் பார்ப்பதற்கும் அது அவனை ஏறிட்டுப் பார்த்து அறிந்துகொள்ளுவ

தற்கும் சரியாக இருந்தது. உயிர் குடிக்க உறுதிகொண்டிருந்த விரோதிகள் நேருக்கு நேர் தனியாக எதிர்ப்பட்டுவிட்டார்கள். சுந்தரம் புலியை ஊடுருவிப் பார்த்தான். புலியின் கண்கள் இவனை நோக்கி இரண்டு சுடர் விளக்குகளைப்போல் ஜொலித்தன. அந்தப் பார்வையிலே குரூரமும் ரத்த வெறியும் கலந்திருந்தன. பஞ்சுக்காலன் அவன் மேலே பாய்வதற்குத் தயாராயிற்று. உடம்பெல்லாம் அதற்கேற்றபடி முறுக்கேறியது. அதன் நுனிவால் படம் எடுத்த நாகம்போலச் சுருண்டு நெளிந்தது. சுந்தரத்திற்கு அந்த நிலைமையின் நெருக்கடியும் ஆபத்தும் தெரியாமலில்லை. ஆனால் அவன் அசையாமல் கல் தூண் போலக் கிடந்தான். நெஞ்சின் மேலே கிடக்கும் வலது கையை நகர்த்திப் பக்கத்திலே உள்ள துப்பாக்கியை எடுக்க அவன் நினைக்கவில்லை.

அப்படிச் செய்வது உயிருக்கு ஆபத்து என்பதை அவன் அறிவான். அசையாமலிருந்துகொண்டு நேராகப் பார்வையைத் தன்மேல் செலுத்தும் மனிதனைத் தாக்கப் புலி பயப்படுகிறது. பார்வை கொஞ்சம் விலகினாலோ, உடம்பில் அசைவு ஏற்பட்டாலோ உடனே அது பாய்ந்து விடும். பார்வையை வேறு பக்கம் திருப்பினால் கவனம் வேறு இடத்தில் சென்றுவிட்டதென்று அது புரிந்து கொள்ளுகிறது. உடம்பில் அசைவு ஏற்பட்டாலோ அதன் மூலம் தனக்கு ஆபத்து வருமென்று அதன் இயல்பு உணர்ச்சி தூண்டுவதால் அது பயத்தால் பிறக்கும் துணிச்சலோடு எதிரியைத் தாக்க முயலுகிறது. இந்த இரு வகையான விபத்துக்களிலிருந்தும் தப்புவதற்குச் சுந்தரம் அசையாமல் படுத்துப் பஞ்சுக்காலனையே உற்று நோக்கியிருந்தான்.

அந்த நிலையிலே ஒரு விநாடி செல்லுவதும் அவனுக்கு ஒரு யுகமாகத் தோன்றியது. முதுகில் மிகுந்த வலி கண்டது. எத்தனை நேரம் அப்படி உடம்பின் ஒரே பாகத்தைக் கரடுமுரடான நிலத்திலே வைத்துக்கொண்டிருப்பது? உறங்கும்போது அவன் அசையாதுதான் படுத்திருந்தான். ஆனால் ஆபத்து முன்னால் தலையெடுத்து நிற்கும்போது எப்படியோ இந்த அசையா நிலையை அவனால் பொறுக்க முடியவில்லை. இன்னும் சற்று நேரம் சென்றால் தன்னால் அசையாமலிருக்க முடியாதென்று அவன் நினைத்தான்.

பஞ்சுக்காலனுக்கும் அந்தச் சந்தேகமான நிலைமை பிடிக்கவில்லை. முன்னால் மானையிழந்த ஏமாற்றம் ஒரு பக்கம்; சுந்தரத்தை ஒழித்துக்கட்டாவிட்டால் தன் உயிருக்கு ஆபத்துத்தான் என்ற உணர்ச்சி ஒரு பக்கம்; பசி ஒரு பக்கம். இப்படி எல்லாம் சேர்ந்து அதன் பொறுமையைச் சோதித்தன. என்ன ஆனாலும் சரி, அந்த மனிதன் மேல் பாய்ந்தே தீருவதென்று அது முடிவு கட்டிவிட்டது. ஒரே விநாடி. பஞ்சுக்காலன் சரியாகத் தூரத்தை அளந்துகொண்டது. இனி அம்புபோல நேரே பாயவேண்டியதுதான் பாக்கி. சுந்தரத்திற்கும் அதன் எண்ணம் புலப்படாமல் இல்லை. கொஞ்சம் அசைந்தால் அதன் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு அவனே தூண்டுகோல் போட்டதாகும். ஆனால் அசையாமலிருந்துதான் என்ன பலன்? எப்படியும் அவன்மேல் பாய்வதென அந்தப் புலி முடிவு கட்டிவிட்டது.

சுந்தரத்திற்கு ஒன்றுமே புலப்படவில்லை. தனது சாமர்த்தியமெல்லாம் இன்று உதவவில்லையே என்று அவன் உள்ளம் கலங்கினான். பாதுகாத்துக்கொள்ள ஒரு

முயற்சியும் செய்யாமலா இந்தப் புலியின் வாயில் சிக்கு வது என்று அவனுக்குக் கோபம் வேறு. என்ன ஆனா லும் சரி, துப்பாக்கியை எடுத்துச் சுடுவது என்ற முடி வுக்கு வந்துவிட்டான்.

இரண்டு உயிர்களும் ஒரே முடிவுக்கு வந்திருக்கின் றன. எந்த உயிர் எந்த உயிருக்குப் பலியாகுமோ என்று திகைக்கும்படியான அந்தப் பயங்கரக் கண நேரம். புலி யின் வால் சுருண்டு நிமிர்ந்துவிட்டது. பாய்வதற்கு வேண்டியவாறு உடம்பு முறுக்கேறிவிட்டது. சுந்தரத்தின் கை துப்பாக்கியைத் தூக்கத் துடித்துக்கொண்டிருக் கிறது. இரண்டு ஜோடிக்கண்கள் மட்டும் மாறாமல் ஒன்றை ஒன்று விழுங்குவனபோல் பார்த்திருந்தன. அவற்றிற் கிடையே கூற்றுவனின் பாசக் கயிறு இங்கா அங்கா என்று ஊசலாடிக்கொண்டிருந்தது.

ஆயிற்று, பஞ்சுக்காலன் பாயப் போகிறது. அந்தக் கணத்திலே எதிர்பாராத கிரீச் என்ற ஒரு குரல் கேட் டது. ஓர் எலியின் கீச்சுக் குரல். அதையொட்டி ஓர் ஆந்தையின் அலறல். எலியென்றால் ஆந்தைக்குப் பிரிய மான உணவல்லவா? எங்கேயோ மரக் கிளையிலே உட் கார்ந்திருந்த அந்த ஆந்தை பஞ்சுக்காலனுக்கு அருகிலே குடுகுடுவென்று சென்ற ஓர் எலியைப் பார்த்துவிட்டது. அதன்மேல் ஓரே பாய்ச்சல்; எலி பயந்து அலறிக் கத்தியது. அதைக் கொன்ற ஆந்தையும் வெற்றிக் குரல் கொடுத் தது. இவ்வாறு ஏற்பட்ட அந்த சப்தம் எப்படியோ பஞ் சுக் காலனின் கவனத்தை ஒரு விநாடி கவர்ந்தது. பார்வையைக் கொஞ்சம் அந்தப் பக்கம் திருப்பிற்று.

சுந்தரத்திற்கு அந்தக் கண நேரம் போதும். மின்னல் வேகத்திலே துப்பாக்கியை எடுத்துக் குறி வைத்து

விட்டான். ஏமாந்த புலியும் மறு கணத்திலே அவன்மேல் மூர்க்கமாகப் பாய்ந்தது. ஆனால் சுந்தரம் முந்திக்கொண்டான். அவன் குறி தவறியது கிடையாது. முதல் குண்டிலேயே பஞ்சுக்காலன் மடங்கி விழுந்தது. அடுத்த குண்டு அதன் உயிரை முற்றும் போக்கிவிட்டது.

சுந்தரத்திற்கு எப்பொழுதுமே ஆந்தை என்றால் ஒரே வெறுப்பு. அதைக் கண்டால் சுடாமல் விடமாட்டான். அதனுடைய விகாரத் தோற்றம், அதன் கடூரமான குரல் இரண்டும் அவனுக்குப் பிடிக்கவில்லை. ஆனால் பஞ்சுக்காலன் வேட்டையிலிருந்து அவனுக்கு ஆந்தைகளிடம் மிக்க மதிப்பு உண்டாகிவிட்டது. ஒவ்வோர் உயிர்ப் பிராணியையும் ஒரு நல்ல காரியத்திற்கு இறைவன் உண்டாக்கியிருக்கிறான் என்று அவன் அது முதல் கூறிக்கொண்டிருக்கிறான்.

# எது பெரிது?

"ஒவ்வொருவனுக்கும் அவன் அவன் உயிர்தான் பெரிது. அதற்கப்புறந்தான் மற்றதெல்லாம்" என்றார் கல்யாணசுந்தரம்.

"ஒரே அடியாக அப்படிச் சொல்வதற்கில்லை. உயிரைக் காட்டிலும் பிரியமானது வேறே ஏதாவது ஒன்று ஒவ்வொருவனுக்கும் இருக்கலாம்" என்று எதையோ யோசித்துக்கொண்டே பதில் கொடுத்தார் அவருடைய நண்பர் வீராசாமி.

"அதெல்லாம் வெறும் பேச்சு. உயிர்தான் மனிதனுக்கு எல்லாவற்றையும்விடப் பிரியமானது."

"நீங்கள் சொல்வதை ஓரளவிற்கு நான் ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனால் நான் அதை முற்றும் ஆமோதிக்க முடியாது."

"தன்னுடைய உயிரின் மேல்தான் மனிதனுக்குப் பற்று அதிகம் என்பதை எடுத்துக் காட்டச் சுவாமி ராமதீர்த்தர் அழகான கதை ஒன்று சொல்லியிருக்கிறார். அது உங்களுக்குத் தெரியுமா? சிறு வயசிலிருந்து ஒருவன் வெவ்வேறு பொருள்களின்மேல் ஆசை கொள்வதையெல்லாம் அவர் கூறிக்கொண்டே வருகிறார். கல்யாணம் செய்துகொள்ளுகிறபோது அவன் தனக்குத் தன் மனைவி தான் மிகப் பிரியமானவள் என்று நினைத்தானும். இரண்டு வருஷங்கள் கழிகின்றன. ஓர் ஆண்குழந்தை பிறக்கிறது. அவனுடைய ஆசையெல்லாம் குழந்தையிடம் செல்கிறது. உயிரைக் காட்டிலும் அதுவே மேலானது என்று அவன்

நினைத்தானாம். ஒருநாள் தற்செயலாக அவன் வசித்து வந்த வீடு தீப்பற்றிக் கொண்டது. அச்செய்தி கேட்டு அவன் தான் உத்தியோகம் செய்யும் காரியாலயத்திலிருந்து ஓடோடியும் வந்தான். குழந்தை வீட்டிற்குள்ளே அகப் பட்டுக்கொண்டதை அறிந்தான். ஆனால் அவன் உள்ளே பாய்ந்து செல்லவில்லை. 'ஐயோ! என் குழந்தையைக் காப்பாற்ற யாரும் இல்லையா?' என்று கதறிக்கொண்டு நின்றானே ஒழிய, வீட்டிற்குள் நுழைய மனம் துணிய வில்லை. காரணம் என்ன? அவனுக்கு அவனுடைய உயிர்தான் குழந்தையைவிடப் பெரிது. அதன் மேல்தான் அவனுக்கு ஆசை அதிகம்.'' இவ்வாறு கதை சொல்லிக் கல் யாணசுந்தரம் தம் கொள்கையை நிலைநாட்ட முயன்றார்.

"சுவாமி ராமதீர்த்தர் இந்தக் கதையின் மூலம் நிரூபிக்க வந்த விஷயம் வேறு. ஒவ்வொருவனிடத்திலும் இறைவன் விளங்குகிறான் என்பதை விளக்க அவர் கதை சொன்னார். எனது எண்ணம் தவறு என்று அதன் மூலம் எவ்வாறு ஏற்படுகிறது? உயிர்தான் பெரி தென்று அவர் கூறவில்லையே?''

"நீங்கள் என்ன சொன்னபோதிலும் என் அபிப் பிராயம் மாறாது. மனிதனுக்கு உயிரைவிடப் பெரிதாக என்ன இருக்க முடியும்?''

"நடராஜ பிள்ளைகூட இப்படித்தான் சொல்லிக் கொண்டிருந்தார். ஆனால்........''

"எந்த நடராஜ பிள்ளை?''

"அவர்தான், பாங்கியிலே தலைமைக் கணக்காராக இருந்தாரே அந்த நடராஜ பிள்ளை. அவரும் உங்களைப் போலத்தான் வாதாடிக் கொண்டிருந்தார்.''

"பிறகு யார் ஜெயித்தது? அவரே ஜெயித்தார் என்று நான் நிச்சயமாய்ச் சொல்லுவேன்."

"இல்லை; அப்படி ஒன்றும் இல்லை. அந்த விஷயமே வேறு விதமாக முடிந்துவிட்டது."

"அதைத்தான் கொஞ்சம் விவரமாகச் சொல்லுங்களேன்."

"என்னுடைய கட்சி வெற்றி பெறவேண்டும் என்பதற்காக நான் அதைச் சொல்ல வரவில்லை. ஆனால் அந்த விவாதத்தின் முடிவிலே ஓர் உருக்கமான சம்பவம் இருக்கிறது. அதைப்பற்றி யோசிக்கவேண்டும் என்பதற்காகவே சொல்லுகிறேன்" என்று வீராசாமி பீடிகை போட்டுக்கொண்டார்.

வீராசாமியும் கல்யாணசுந்தரமும் சென்னைக் கடற்கரையிலே வீசும் காற்றை அநுபவித்துக் கொண்டு மணற் பரப்பில் அமர்ந்திருக்கிறார்கள். வீராசாமிக்கு அறுபது வயது இருக்கும். ஆனால் அவரைப் பார்த்தவர்கள் அத்தனை வயது மதிப்பிடவே மாட்டார்கள். மற்றவருக்கு 45 இருக்கும். ஒரு மாதத்திற்கு முன்புதான் அவர் ஒட்டுக் குடியாகத் தியாகராயநகரில் உள்ள வீராசாமியின் வீட்டுக்கு வந்து சேர்ந்தார். அது முதல் இருவருக்கும் பழக்கம் ஏற்பட்டு நட்பு வளர்ந்துவந்தது. சில நாட்களில் அவர்கள் இரண்டு பேருமாகச் சேர்ந்துகொண்டு கடற்கரைக்குச் செல்லலானார்கள். சுவாரசியமாக எதைப்பற்றியாவது பேசி மாலை நேரத்தை இன்பமாகக் கழித்துவிட்டுத் திரும்புவார்கள். இன்றும் அம்மாதிரிதான் வந்து வார்த்தையாடிக்கொண்டிருக்கிறார்கள். வீராசாமி ஆரம்பித்தார்:—

"நடராஜ பிள்ளை எனக்கு நெருங்கிய நண்பர். உங்களுக்கு அவரை நேரிலே தெரிந்திருக்க முடியாது.

அவர்தான் என்னை உல்லாச சபையில் அங்கத்தினராகச் சேரும்படி செய்தவர். வாரத்திற்கு ஒருமுறை அந்தச் சபை சனிக்கிழமை தோறும் மாலை நேரத்தில் கூடும். தேநீர் அருந்திக்கொண்டே உல்லாசமாகப் பல விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருப்போம். ஒரு சனிக்கிழமையன்று எப்படியோ இதே கேள்வி எழுந்தது. 'சிலருக்கு உயிரைவிடக் கலை பெரியது' என்று ஒருவர் சொன்னார். அதற்கு உதாரணமாக அவர் ஒரு வரலாற்றை எடுத்துக் காட்டினார்.

"பாரிஸ் நகரத்திலே ஒரு சிற்பி இருந்தானும். ஏதோ ஒரு சந்திலே ஒரு சின்ன அறையிலே இருந்து கொண்டு சலவைக் கல்லில் அவன் ஓர் அழகிய இளமங்கையின் வடிவத்தைச் செதுக்கிக்கொண்டிருந்தான். அவன் அதில் ஈடுபட்டுப் பல நாட்களாகிவிட்டன. அவனுக்கு வேறொன்றைப்பற்றியும் ஞாபகம் இல்லை. சிற்பம் எப்பொழுது முடியும், எப்பொழுது அதைப் பார்க்கலாம் என்று சிலர் அவனைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். சிற்பி ஏதோ ஒரு நாளைக் குறிப்பிட்டு அந்த நாள் காலையிலே வந்தால் பார்க்கலாம் என்று சொன்னான். குறிப்பிட்ட நாளுக்கு முதல் நாள் மாலையில் நெடுநேரம் வரை அவன் அந்தச் சிலைக்கு முடிப்புக் கோலமும் நயனமோக்கமும் செய்துகொண்டிருந்தான். பொழுது மறைந்து இருளும் சூழ்ந்துகொண்டது. அப்பொழுதும் அவன் ஒரு சிறிய கைவிளக்கின் வெளிச்சத்திலே வேலை செய்தான், ஒவ்வோர் அங்கமாகக் கவனித்து அதைக் கூர்ந்து நோக்கிச் சிறு சிறு மாறுதல் செய்தான். கடைசியில் இரவு பத்துப் பதினொரு மணிக்கு அவனுக்கு ஒருவாறு திருப்தி உண்டாயிற்று. தன் பணி முடிந்ததென்று பெருமகிழ்ச்சி

யோடு படுத்துறங்கப் போனான். அந்தச் சமயத்தில் உறைபனி பெய்யத் தொடங்கிற்று. பாரிஸ் நகரமல்லவா? சில சமயங்களில் அங்கு உறைபனி பெய்யும். குளிரின் கடுமையும் மிக அதிகரித்தது. ஜலம் பனிக்கட்டியாக மாறியது. அக்கடுங் குளிரிலே சலவைக்கற் சிலையைத் திறந்து வைத்திருந்தால் அதில் கீறல்கள் விழுந்து கெட்டுப் போகும். அதற்கு என்ன செய்வது என்று அவன் கவலை கொண்டான். அவனுடைய சிறிய அறையிலே கணப்புக் கிடையாது. ஏழையாகிய அவனுக்குக் கரி வாங்கிக் கணப்பு மூட்டக் காசு ஏது? அவனுடைய உடம்பைக் குளிரிலிருந்து காப்பாற்றிக் கொள்ள ஒரே ஒரு நீண்ட கம்பளிச் சட்டைதான் உண்டு. அதைத் தன் உடம்பிலிருந்து களைந்து சிலையைப் பத்திரமாகப் போர்த்தினான். அவனுக்கு மனசிலே ஆறுதல் ஏற்பட்டது. சந்தோஷமாகச் சிலையின் பாதத்தருகில் படுத்துக்கொண்டு தூங்கலானான்.

"மறுநாள் காலையில் அந்த அற்புதச் சிற்பத்தைக் காணப் பலர் வந்தனர். உயிர் பெற்ற பாவைபோலச் சிலை அழகின் பிழம்பாய் நின்றது. ஆனால் அதை உருவாக்கிய சிற்பியோ உயிரற்ற பிணமாய்க் கிடந்தான். வறுமையால் வாடி மெலிந்த அவனுடைய உடல் குளிர் தாங்காது விறைத்துப் போய்விட்டது. அந்தச் சிற்பிக்குத் தன் உயிரைவிடக் கலைதான் பெரியதாகத் தோன்றிற்று" என்றார் அவர்.

" 'அவன் ஒரு முட்டாள்' என்றார் நடராஜ பிள்ளை.

"மற்றொருவர் ஆரம்பித்தார்: 'உயிரைவிடக் கொள்கைகளைப் பெரிதாக மதிப்பவர் எத்தனையோ பேர் இருந்திருக்கிறார்கள். மகாத்மா காந்தி தமது கொள்கைக்காக உயிரை விடத் தயாராக இருக்கவில்லையா?'

“ ‘எல்லோரும் மகாத்மா காந்தி, ஏசுகிறிஸ்து ஆகிவிட மாட்டார்கள். அவர்களைப் போன்ற பெரியோர்களைப் பற்றிப் பேசக்கூடாது. சாதாரணமான நம்மைப்போன்ற மனிதர்கள் அப்படி நினைப்பார்களா என்பதுதான் கேள்வி’ என்று நடராஜ பிள்ளை உரத்துப் பேசினார்.

“ ‘சாதாரண மனிதரிலும் அப்படி நினைப்பவர்கள் இருப்பார்கள். இருக்கவே முடியாது என்று நினைப்பது சரியல்ல’ என்றேன் நான்.

“ ‘அப்படி ஒருவன் இருந்தால், அவனைப் பைத்திய மென்றுதான் நான் சொல்லுவேன்’ என்று கூறினார் நடராஜ பிள்ளை.

“ ‘நல்ல தன்மையுடையவர்கள் எங்கும் இருக்கிறார் கள். அவர்களை உலகம் அறியாமல் இருக்கலாம். அதனால் இல்லை என்று சொல்லிவிட முடியாது. அவர்கள் பல விஷயங்களிலே தப்பான வழியில் சென்றாலும் ஏதாவது ஒன்றில் உயர்ந்து நிற்பார்கள். அதை அவர்கள் பெரிதாக மதிப்பார்கள்’ என்றார் மற்றோர் அங்கத்தினர்.

“இப்படியாகப் பலரும் அந்த விவாதத்திலே கலந்து கொண்டார்கள். அன்று உல்லாச சபையில் உல்லாசம் அதிகம் இல்லை. காரசாரமே மேலிட்டிருந்தது. நடராஜ பிள்ளை விடாப்பிடியாகத் தாம் சொன்னதையே வற்புறுத் திக்கொண்டிருந்தார். மற்றவர்கள் அதை ஆமோதிக்க வில்லை. ஆனால் அன்று யாருக்கும் பின்னால் நடக்கப் போகிற விஷயம் தெரியாது. தெரிந்திருக்குமானால் நடராஜ பிள்ளையே அத்தனை வேகமாக வாதாடியிருக்க மாட்டார்.

“நடராஜ பிள்ளை திருவல்லிக்கேணியிலே உள்ள பாங் கிலே தலைமைக் கணக்கராக இருந்தார். நம்பிக்கைக்கும்

பொறுப்பாகக் காரியங்களைக் கவனிப்பதற்கும் அவரைப் போல வேறொருவர் கிடைக்க முடியாது. அத்தனைக்கும் அவர் சாதாரண மனிதர்தான்; சாது. அநாவசியமாக வேறொருவர் விஷயத்தைக் காதிலேகூட வாங்கிக்கொள்ள மாட்டார். பக்கத்து வீட்டுக்காரருக்குக்கூட அவரைத் தெரியாது. தாமுண்டு, தமது வேலை உண்டு என்று இருப்பார். வாரத்திற் கொரு முறை உல்லாச சபைக்கு வருவதைத் தவிர அவரை வெளியே அதிகமாகப் பார்ப்பது அருமை. ஆனால் அவரிடம் குறைபாடே இல்லை என்று சொல்ல முடியாது. பெண்கள் விஷயத்திலே அவருக்கு அவ்வளவு உறுதி இல்லை. இப்படி இன்னும் சில சொல்லலாம். ஆனால் நண்பன் என்ற முறையில் நான் எல்லாவற்றையும் வெளியில் கூற விரும்பவில்லை. சாதாரண மனிதர்தான் அவர் என்பதை உங்களுக்குக் காட்டவே இதை இங்கே குறிப்பிடுகிறேன்.

"அவர் பாங்கிலே குமாஸ்தாவாக 30 ரூபாய் சம்பளத்தில் சேர்ந்தார். ஒழுங்காக வேலை செய்து வந்ததால் படிப்படியாகப் பதவி உயர்ந்தது. பத்தாவதுவரையில் தான் அவர் படிப்பு. இருந்தாலும் கடைசியில் தலைமைக் கணக்கராவே ஆகிவிட்டார். காரியாலயத்திற்குத் தாமதமாய் ஒரு நாள்கூட அவர் போனதில்லை. பத்து மணி என்றால் சரியாகப் பத்து மணிக்கு ஆஜராகிவிடுவார். அவர் உள்ளே நுழைவதைக் கண்டு கடிகாரத்தில் மணியைச் சரிப்படுத்தி வைக்கலாம் என்று மற்றவர்கள் சொல்லுவார்கள். அத்தனை கிரமமாக அவர் வேலைக்கு வருவார். யாராவது காலந் தாழ்த்து வந்தாலோ, அல்லது கணக்கைச் சரியாக வைக்காவிட்டாலோ அவருக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்காது. 'இந்தக் காலத்துப் பையன்

களுக்குப் பொறுப் புணர்ச்சியே கிடையாது' என்று சீறுவார். வேலை நேரம் தவிர மற்ற நேரத்தில் அவர் தாராளமாகச் சிரித்துக்கொண்டு பேசுவதுண்டு. ஆனால் வேலையில் மட்டும் வெகு கண்டிப்பு. கீழ் உத்தியோகஸ்தர்களெல்லாம் அவரைக் கண்டால் பயந்து கிடப்பார்கள். அத்தனை மரியாதை. பாங்கு மானேஜருக்கும் டைரக்டர்களுக்கும் அவரிடத்திலே மிகவும் பிரியமும் மதிப்பும் உண்டு.

"நடராஜ பிள்ளை முப்பத்தைந்து வருஷம் அந்தப் பாங்கிலே வேலை பார்த்தார். வேறு இடத்திற்குப் போகலாமென்று அவர் நினைக்கவே யில்லை. அப்படி நினைத்திருந்தால் அதிகச் சம்பளங்கூடக் கிடைத்திருக்கும். அவர் அதை விரும்பவில்லை. நாணயம் தவறாமல் கடைசி வரையில் ஒரே இடத்தில் வேலை செய்வதென்று அவர் தீர்மானம் பண்ணியிருந்தார்.

"அதனால் அவர் தமது 55 ஆவது வயது முடிந்ததும் ஓய்வெடுத்துக்கொள்ள விரும்பியபோது அந்தப் பாங்கு டைரக்டர்கள், மானேஜர், குமாஸ்தாக்கள் முதலிய மற்ற ஊழியர்கள் அனைவரும் ஏகோபித்த மனத்துடன் அவருக்கு ஒரு நிதியளிக்கவும், பிரிவுபசாரம் செய்யவும் முன் வந்தார்கள்.

"நடராஜ பிள்ளை ஓரளவு பணம் சேமித்து நீண்டகால டிபாசிட்டுகளாகப் பல பாங்குகளில் போட்டு வைத்திருந்தார். தமது வருவாயிலிருந்தே சொந்த வீடு ஒன்றும் கட்டிக்கொண்டார். பாங்கிலிருந்து விலகிய பிறகு தலயாத்திரை போய்விட்டு வந்து தமது இறுதி நாட்களை அமைதியாகக் கழிக்கவேண்டுமென்பது அவருடைய எண்ணம். பூச்செடிகள் வைத்து வளர்ப்பதிலே அவருக்குப் பிரியம்

அதிகம். ஆனால் உத்தியோகம் செய்கிறபோது அதற்குப் போதுமான நேரம் கிடைக்கவில்லை. ஏதோ மாலை வேளையில் சிறிது நேரம் தமது வீட்டைச் சுற்றியுள்ள செடிகளைக் கவனித்துக்கொண்டிருப்பார்; அவற்றிற்குக் கிணற்றிலிருந்து நீரிறைத்து ஊற்றுவார். வயது ஆக ஆகத் தளர்ச்சி அதிகரிக்கத் தொடங்கியதால், காரியாலயத்திலிருந்து மாலையில் வந்த பிறகு இதைக்கூடச் செய்ய முடியவில்லை. அலுப்பு அதிகமாய் ஏற்பட்டது. ஆதலால் வேலையைவிட்டு விலகியதும் தமது காலத்தையெல்லாம் பூக்களோடு செலவிட வேண்டுமென அவர் ஏங்கிக்கொண்டிருந்தார். 'இன்னும் மூன்று மாத காலம் இருக்கிறது. பிறகு இந்தச் செடிகளோடு செடியாய்ப் பேசாமல் உட்கார்ந்துவிடுவேன். வேலை பார்ப்பதிலே ஒரு தப்பு வரப்படாது என்று நினைத்து நினைத்து அந்தக் கவலையே எனக்கு இப்பொழுது ஒரு பாரமாக இருக்கிறது. அந்திய காலத்தில் இந்தப் பொறுப்பையெல்லாம் இளமையும் வலிமையும் உள்ளவர்களிடம் ஒப்படைத்துவிட்டு ஓய்வு பெற வேண்டாமா? எனக்கு இப்போது ஓய்விலே அதிக ஆசை வந்துவிட்டது' என்று என்னிடம் அவர் கூறினர்.

"அப்படிக் கூறி ஒரு மாதங்கூட ஆகவில்லை. அவருக்கு ஓய்வு கிடைக்க இன்னும் இரண்டு மாதங்களே இருந்தன. திடீரென்று அவர் விஷயமெல்லாம் எதிர்பாராத விதமாய் மாறிப் போய்விட்டன.

"நடராஜ பிள்ளை வழக்கம்போலக் காலந் தவறாமல் பாங்குக்குச் சென்றுகொண்டிருந்தார். விரைவில் கிடைக்கப்போகிற ஓய்வைப் பற்றிய நினைவால் உண்டான ஒரு வித இன்பத்தின் சாயல் அவருடைய முகத்தில் மலர்ந்து கொண்டிருந்தது. ஒருநாள் மாலை ஐந்து மணி இருக்கும்.

பாங்கு மூடும் சமயம். நடராஜ பிள்ளையின் தங்கை மகன் அருணாசலம் அவசர அவசரமாக அவருடைய அறைக்குள்ளே நுழைந்தான். அவனுக்கு இரண்டாயிரம் ரூபாய் உடனே தேவையாயிருந்தது. அது எதற்கு என்று அவர் என்னிடம் சொல்லவில்லை. ஏதோ தவிர்க்கமுடியாத நெருக்கடியாகத்தான் இருக்கவேண்டும். நடராஜ பிள்ளைக்கு அந்தப் பையனிடம் அதிகப் பிரியம் உண்டு. மேலும் அவனுக்குத்தான் அவர் தம் கடைசி மகளைக் கல்யாணம் செய்து கொடுப்பதென்று முடிவு செய்திருந்தார். அவருக்கு மூன்று குழந்தைகள். மூன்றும் பெண்கள். இருவருக்கு விவாகமாகிவிட்டது. கடைசி மகளுக்குப் பதினேழு வயது இருக்கும். அவள் மட்டும் வீட்டில் இருக்கிறாள். ஓய்வு பெற்று வந்ததும் கல்யாணத்தை முடித்துவிட்டுத்தான் அவர் யாத்திரை கிளம்புவதாகத் திட்டம் வகுத்திருந்தார்.

"அருணாசலம் நல்ல பிள்ளைதான். அவன் பி. ஏ. வரையில் படித்து முடித்துவிட்டுச் சொந்தமாக ஏதோ வியாபாரம் செய்துகொண்டிருக்கிறான். அவனுக்கு என்ன அவசரமோ தெரியவில்லை. அந்தச் சமயத்திலே பணம் கிடைக்காவிடில் பெரிய சங்கடம் ஏற்பட்டிருக்குமென்று நான் ஊகிக்கிறேன். ஆனால் அதைப்பற்றி மட்டும் நடராஜ பிள்ளை என்னிடம் கூற விரும்பவில்லை. அதைப் பற்றிப் பேசுவதில் அவருக்கு மனமில்லை என்று தெரிந்ததால் நான் வற்புறுத்த வேண்டாமென இருந்துவிட்டேன்.

"மருமகனுக்குப் பணம் கொடுத்து உதவ வேண்டுமென்று அவர் நினைத்தார். ஆனால் உடனே இரண்டாயிர ரூபாய்க்கு எங்கே போவது? அடுத்த நாள் காலை வரையிலும் அவகாசம் இருந்தாலும் அவர் சமாளித்துவிட

முடியும். கைமாற்ருகவே அந்தத் தொகையை அவர் சுலபமாக வாங்கலாம். ஆனல் உடனே வேண்டுமென்ருல் என்ன செய்வது?

" பாங்கு மானேஜரும் தம் வீட்டிற்குப் போயாகிவிட்டது. அவர்தாம் கடைசியாக வரவு செலவுக் கணக்கைப் பார்த்துக் கையிருப்புச் சரியாக இருக்கிறதா என்றும் சோதித்து, பணத்தை இரும்புப் பெட்டியில் வைத்துப் பூட்டிவிட்டுப் போகவேண்டும். ஆனல் ஒவ்வொரு நாளும் இவ்வாறு நடக்கிறதில்லை. சில நாட்களிலே அவர் முன்னலேயே போய்விடுவார். நடராஜ பிள்ளையிடம் அளவற்ற நம்பிக்கை இருந்ததால் மானேஜர் கையிருப்பைப்பற்றி அவ்வளவு கவலைப்படுவதில்லை. பணப்பொறுப்பு அவருக்கு முக்கியமாக உண்டென்ருலும் இத்தனை வருஷங்களாக ஏற்பட்ட நம்பிக்கையின் காரணமாக அவர் நடராஜபிள்ளை விஷயத்தில் அத்தனை ஜாக்கிரதையாக இருப்பதில்லை. இரும்புப் பெட்டிக்கு அவரிடத்திலே ஒரு சாவியும், நடராஜ பிள்ளையிடத்திலே ஒரு சாவியும் இருக்கும். அவரிடம் உள்ளதுதான் ராஜ சாவி. அதைக் கொண்டு பூட்டிவிட்டால் மற்றச் சாவியால் திறக்க முடியாது. ஆனல் நடராஜபிள்ளையிடம் உள்ள சாவியைக் கொண்டு பூட்டினல் அவரிடம் உள்ளதைக் கொண்டு திறந்துவிட முடியும். மானேஜரிடம் ராஜ சாவி இருப்பதன் அர்த்தமே அவருக்குத்தான் பணப் பொறுப்பு என்பதாகும். ஆனல் நம்பிக்கை வலுக்கிறபோது உஷாரெல்லாம் சற்றுத் தளர்வது சகஜந்தானே? அந்த மாதிரியே இன்றும் நடந்துவிட்டது.

"மானேஜர் போய்விட்டார். நடராஜ பிள்ளையே பணப் பெட்டியைப் பூட்டிவிட்டுச் செல்லவேண்டும். மறுநாள் காலையிலும் அவர்தான் அதைத் திறப்பார். கொடுக்கல்

வாங்கல் தொடர்ந்து நடக்கும். நடராஜ பிள்ளை வழக்க மாகக் கணக்கை ஒரு தடவைக்கு இரண்டு தடவை சரி பார்த்து இருப்பை எண்ணிக் கட்டி வைத்துவிட்டுப் போவார். ஒரு சல்லிக் காசு குறையாது. நூறு ரூபாய் நோட்டுக்கள் தனியாக, பத்து ரூபாய் நோட்டுக்கள் தனியாக, மற்றவை தனியாக, ரூபாய் நாணயம் சில்லறைகள் தனியாக ஒழுங்காக இருக்கும்படி வைப்பார். பார்த்தவுடனே இருப்புத் தொகை சட்டென்று தெரிகிற மாதிரி துண்டுக் காகிதங்களில் ஒவ்வொரு கட்டின் மதிப்பையும் எழுதி அதில் செருகி வைத்திருப்பார். ஒரு நாள், அரை நாளுக்கென்றுவது அவர் அதில் காலணாக்கூடத் தமது சொந்தக் காரியத்திற்காகத் தொட்டது கிடையாது.

"ஆனால் இன்றைக்கு அதிலிருந்து அருணாசலத்திற்கு இரண்டாயிரம் கொடுத்தால் என்ன என்று யோசிக்கலானார். அடுத்த நாள் காலை ஒன்பது மணிக்குள் அந்தத் தொகையைச் சமாளித்து விடலாம். பிறகு காரியாலயத் திற்கு வந்ததும் அதைப் பெட்டியில் வைத்துவிட்டால் போகிறது - யார் கவனிக்கப் போகிறார்கள்? மேலும் அவர் என்ன, களவாடவா போகிறார்? எதிர்பாராத நெருக்கடியைத் தீர்க்க எடுத்துக்கொண்ட தொகையை யாரும் அறியாமல் மறுநாள் காலையிலே திருப்பி வைத்து விடப் போகிறார்; அவ்வளவுதானே? செய்கிற காரியம் என்னவோ தப்பு என்பதில் சந்தேகமில்லை. முதலில் அதற்கு அவர் மனச்சாட்சி இடம் கொடுக்கவில்லை. பாங்குப் பணத்தைக் கையாடுவதா என்று அவர் நெஞ்சம் திடுக்கிட்டது. ஆனால் அந்த நெருக்கடியான நிலைமை யிலே வேறு என்ன செய்வது?—கொஞ்ச நேரம் அவர்

யாதொரு தீர்மானத்திற்கும் வர முடியாமல் ஊசலாடினார். மருமகனுக்கு இல்லையென்று சொல்லவும் மனம் வரவில்லை; பணத்தைத் தொடவும் கைவரவில்லை.

"பணத்தை எடுக்கும் விஷயம் யாருக்குத் தெரியப் போகிறது என்கிற எண்ணமே கடைசியில் வெற்றி கொண்டது. நூறு ரூபாய் நோட்டுக்களாக இருபதை எடுத்து அருணாசலத்திற்கு அவர் கொடுத்துவிட்டார்.

"பாங்கியை விட்டு வீடு வந்ததும் அவர் பணம் தேடும் முயற்சியில் ஈடுபடலானார். நாணயமுடையவராதலாலும், கைமாற்று வாங்கினால் குறித்த நாளில் தவறாமல் திருப்பிக் கொடுப்பார் என்று பலருக்கும் தெரியுமாதலாலும் பணம் எளிதில் கிடைத்தது. இரவு பதினொரு மணிக்குக் கையிலே இரண்டாயிரம் சேர்ந்தபோதுதான் அவருக்கு நிம்மதி உண்டாயிற்று.

"மறுநாள் காலையிலே உணவருந்தியதும் பணத்தை ஒரு பையில் பத்திரமாக முடிந்து கொண்டு வழக்கமாகப் புறப்படும் நேரத்திற்குச் சற்று முன்னதாகவே பாங்கிக்குப் புறப்பட்டார். எப்படியும் காலதாமதம் ஆகிவிடக்கூடாது என்பது அவர் கவலை. சரியாக ஒன்பது மணிக்கு அவர் ஏறியிருந்த பஸ் கிளம்பியது. இருபது நிமிஷத்தில் மாம்பலத்திலிருந்து திருவல்லிக்கேணியில் பஸ் நிற்கும் இடம் சேர்ந்துவிடலாம்; அங்கிருந்து ஐந்து நிமிஷ நடை. சரியாக 9-25 க்குப் பாங்கியில் இருக்கலாம். அதனால் அவர் நெஞ்சிலே இருந்த பாரம் நீங்கிற்று.

"ஆனால் நாம் நினைக்கிறபடியே எல்லாம் நடக்கிறதா? பஸ் புறப்பட்டு ஏழெட்டு நிமிஷந்தான் ஆகியிருக்கும். வழியிலே எதிர்பாராத ஒரு விபத்து ஏற்பட்டது. பக்கத்

திலே இருக்கும் ஒரு சிறிய தெருவிலிருந்து வேகமாக வந்த கார் தடாலென்று பஸ்மேல் மோதிவிட்டது. பஸ் டிரைவர் எவ்வளவோ சாமர்த்தியமாக அதைத் தடுக்க முயன்றும் பயனில்லாமல் போயிற்று. அவன் மேல் தவறு இல்லை. காரை ஓட்டிக்கொண்டு வந்த இளைஞனுக்குப் புதுப் பழக்கம். அதனால் அவன் வேகத்தைக் குறைக்க முடியாமல் வந்து இடித்துவிட்டான். அவனுடைய கார் புதியது. அதன் முன்பாகத்தில் இருந்த விளக்கு நொறுங்கிப் போயிற்று. ஆனால் நல்ல வேளை அவன் உயிர் தப்பினான். நெற்றியில் மட்டும் பெரிய காயம் ஏற்பட்டு ரத்தம் வழிந்துகொண்டிருந்தது. பஸ்ஸில் அதிகமாகப் பழுது ஏற்படவில்லை. பிரயாணிகளுக்கும் யாதொரு தீங்கும் இல்லை. பஸ் ஓட்டியவன் திறமைதான் அதற்குக் காரணம் என்று சொல்லலாம்.

"எல்லோரும் அவனைப் புகழ்ந்தார்கள். ஆனாலும் அவனுக்குப் பயம். எங்கே தன் வேலை போய்விடுமோ என்று அவன் கலங்கினான். பஸ்ஸில் வந்த பிரயாணிகளையெல்லாம் அங்கேயே இருந்து நடந்த விஷயத்தை அப்படியே அதிகாரிகளுக்கு எடுத்துச் சொல்லித் தன்னைக் காப்பாற்றும்படி வேண்டிக்கொண்டான். நடராஜ பிள்ளை மரியாதைக்கு உரியவராகவும் வயதானவராகவும் தோன்றியதால் அவரைக் கட்டாயம் இருந்து சாட்சி கூறும்படி டிரைவர் வெகுவாகப் பரிந்து கேட்டான். அதை மறுக்க அவரால் முடியவில்லை. மேலும் அது பிரயாணிகளின் கடமையும் அல்லவா?

"நடுவழியில் வேறொரு பஸ் அந்த நேரத்தில் கிடைப்பதும் சுலபமல்ல. வேலைக்கு அனைவரும் போகும் சமயமானதால் பஸ்கள் நிறைந்து வந்தன.

"நடராஜ பிள்ளை சாட்சி சொல்லிவிட்டு வேறொரு பஸ்ஸில் ஏறிக் காரியாலயம் சேருவதற்கு மணி $10\frac{1}{2}$ ஆகிவிட்டது. இருந்தாலும் என்ன? ஒருநாள்தானே தாமதம்? அதுவும் அவர் பிழையினால் ஏற்பட்டதல்லவே? பெட்டியிலுள்ள கையிருப்புப் பணத்தை இதற்குள் யார் பார்த்திருக்கப் போகிறார்கள்? கொடுக்கல் வாங்கலும் $10\frac{1}{2}$க்குப் பின்தானே? இவ்வாறு அவர் எண்ணமிட்டுக்கொண்டே உள்ளே நுழைந்தார். அங்கே அவர் கண்ட காட்சி அவர் உள்ளத்தைத் திருகிவிட்டது. இரும்புப் பெட்டியின் கதவு திறந்திருந்தது. நோட்டுக் கற்றைகள் கீழே கிடந்தன. மானேஜர் அவற்றைக் கவனமாக எண்ணிக் கொண்டிருந்தார். நடராஜ பிள்ளையின் இருதயம் அப்படியே நின்று விடும்போல இருந்தது.

"அவரைக் கண்டதும், 'வாருங்கள், ஏன் இன்றைக்கு என்றும் இல்லாதபடி தாமதம்?' என்றார் மானேஜர்.

" 'பஸ்ஸில் வரும்போது வழியிலே ஒரு விபத்து....' என்று மென்று விழுங்கிக்கொண்டே நடராஜ பிள்ளை பதிலளித்தார்.

"'ஆமாம், பணம் இரண்டாயிரம் குறைச்சலாக இருக்கிறதே! பத்தாயிரம் ரூபாய் உடனே வேண்டுமென்று மானேஜிங் டைரக்டர் சொல்லி அனுப்பினார். அதனால் தான் வந்ததும் பெட்டியைத் திறந்து பார்த்தேன். இருப்புச் சரியில்லையே?'

"என்ன பதில் அளிக்கிறதென்று நடராஜ பிள்ளைக்குத் தெரியவில்லை. ஒரு நாளும் இம்மாதிரியான குற்றம் செய்யாதவராகையால் அவருக்கு உடனே ஒன்றும் சொல்லத் தோன்றாமல் விழித்தார். உடம்பெல்லாம் குப்பென்று வேர்த்தது.

"மானேஜருக்கு விஷயம் விளங்கவில்லை. 'பெட்டி சரியானபடி பூட்டித்தானே இருந்தது?' என்று கேட்டுக் கொண்டே தலைமைக் கணக்கரை உற்றுப் பார்த்தார்.

"நடராஜ பிள்ளையின் முகத்தில் என்றும் இல்லாத வேதனையின் சாயல் படரலாயிற்று. கொஞ்ச நேரம் அசைவற்று நின்றுகொண்டு இருந்துவிட்டுப் பிறகு அவர் நிதானமாகப் பேசலானார்: 'நேற்றுச் சாயங்காலம் எனக்கு அவசரமாக இரண்டாயிரம் ரூபாய் வேண்டியிருந் தது. இருப்பிலிருந்து அதை எடுத்தேன். இதோ அதை இப்பொழுது திருப்பிக் கொண்டுவந்திருக்கிறேன்.'—

"இவ்வளவுதான் அவர் சொன்னது. வேறு மன்னிப்பு வார்த்தைகளோ அருணாசலத்தைப் பற்றிய விஷயமோ அவர் கூறவில்லை. தம் பையில் இருந்த இரண்டாயிரத்தை யும் மானேஜர்முன் வைத்துவிட்டுத் தம் ஸ்தானத்தில் போய் அமர்ந்துகொண்டார்.

"மாலையில் காரியாலயம் மூடப்போகும் வரையில் இது சம்பந்தமாக மானேஜர் பேசவே இல்லை. அவர் எந்த நிமிஷமும் தம்மைக் கூப்பிட்டு விசாரிப்பார் என்று தலை மைக் கணக்கர் எதிர்பார்த்தார். ஆனால் அவர் கூப்பிடு வதாகக் காணோம். அந்தச் சங்கடமான நிலைமையை நடராஜ பிள்ளையால் தாங்க முடியவில்லை. அவர் உள்ளம் வெடித்துப் போகும்போல் இருந்தது.

"மானேஜருக்கும் என்ன செய்வதென்று தோன்றாமல் இருந்திருக்கவேண்டும். அவர் பலவிதமாக அதைப்பற்றிச் சிந்தித்துக் கடைசியில் ஒரு தீர்மானத்திற்கும் வர இயலா மல் குழம்பிக்கொண்டிருந்திருப்பார் என்பது என் உத்தே சம். மாலை ஐந்து மணிக்குக் குமாஸ்தாக்கள், காஷியர்

முதலியவர்களெல்லாம் வெளியே சென்ற பிறகு அவர் தலைமைக் கணக்கரை அழைத்தார். தலைகுனிந்தபடியே அவர் மௌனமாக வந்து நின்றார். சற்று நேரம் இருவரும் வாய் திறக்கவில்லை. பிறகு மானேஜர், 'நீங்கள் இப்படிச் செய்வீர்களென்று நான் நினைக்கவே இல்லை. பலமுறை இதுமாதிரி காரியம் நடந்திருக்காது என்றுதான் இப்பொழுதும் எனக்கு நம்பிக்கை. வேலையிலிருந்து விலகிக் கொள்ளும் சமயம். ஆகையால் இதைப் பற்றிப் பேசாமல் அப்படியே விட்டுவிடலாம். இதனால் உங்கள் மேலிருந்த நல்ல அபிப்பிராயம் எனக்கு மாறவில்லை' என்று கூறினார். அந்தச் சமயத்தில்கூட அவர் மனத்திலே என்ன பேசுவதென்ற தெளிவு உண்டாகவில்லை என்பது அவர் வார்த்தையிலிருந்தே வெளியாகியது. நடராஜ பிள்ளை தமது நிலைமையை விளக்கவோ, இம்மாதிரியான குற்றம் முன்னால் என்றும் செய்ததில்லை என்று கூறிக்கொள்ளவோ விரும்பவில்லை. மௌனமாகச் சிறிது நேரம் நின்றார். அவர் பார்வை நிலத்தை நோக்கியே இருந்தது. பதிலை எதிர்பார்க்கிறவர் போன்று மானேஜர் மேலே நோக்கினார். ஆனால் அவரும் பேசவில்லை. பத்து நிமிஷம் இப்படிச் சென்றிருக்கும். அது ஒரு யுகம் போல் இருந்தது நடராஜ பிள்ளைக்கு. பிறகு அவர் அவ்விடத்தை விட்டு மெதுவாக நகர்ந்தார். எப்படியோ வீட்டுக்குப் புறப்பட்டுப் போய்ச் சேர்ந்தார்.

"அப்புறம் ஒரு பதினைந்து நாட்கள் அவர் பாங்கிக்குச் சென்றிருப்பாரென்று நினைக்கிறேன். ஆனால் அவர் முன்பு இருந்த தலைமைக் கணக்கரல்ல; இப்பொழுது எல்லாம் மாறிப் போய்விட்டது. வழக்கம்போல அவர் குமாஸ்தாக்களையோ மற்ற ஊழியர்களையோ நிமிர்ந்து பார்ப்பது

யில்லை. அவருடைய தலை குனிந்தபடியே இருக்கும். அதிகமாகப் பேசுவதுகூட இல்லை. வேலையை மட்டும் யந்திரம்போலச் செய்துகொண்டிருந்தார். நடந்த விஷயம் மானேஜரைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது. அவரும் அதுபற்றி மறுபடியும் பேச்செடுக்கவே இல்லை. நடராஜ பிள்ளையை நடத்தும் முறையிலும் அவர் யாதொரு வேறுபாடும் காண்பிக்கவில்லை. இருந்தாலும் நடராஜ பிள்ளையின் உள்ளம் உடைந்துவிட்டது. கடமை தவறிய வன் ஆனேன் என்ற எண்ணம் அவரைப் பீடிக்கலாயிற்று. அவர் கீழ் வேலை செய்பவர்கள் பழையபடியே பயந்து கொண்டு காரியம் செய்தாலும் அவருக்கு என்னவோ அது தம்மைக் கேலி செய்வதுபோலத் தோன்றியது. அவரால் மனவேதனை சகிக்க முடியவில்லை.

"அவ்வளவுதான். படுக்கையில் படுத்துவிட்டார். நோயென்று அவர் எந்தக் காலத்திலும் நான்கு நாள் சேர்ந்தாற்போல் கட்டிலில் கிடந்ததில்லை. இந்த முறை ஒரே அடியாகப் படுத்துவிட்டார். அவருக்கு என்ன நோயென்று வைத்தியர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. மாற்றி மாற்றி ஏதோ மருந்து கொடுத்தார்கள். அவரும் தம் மனைவியின் சொல்லை மறுக்காமல் அவற்றைச் சாப் பிட்டுக்கொண்டிருந்தார். அவரைப் பார்க்க நான் பல முறை சென்றேன். அப்படிச் சென்றபோது ஒரு தடவை நான் வற்புறுத்தியதன் மேல்தான் அவர் இதுவரை நான் கூறிய விஷயங்களையெல்லாம் என்னிடம் ரகசியமாகச் சொன்னார். வேறொருவரிடமும் அவர் வெளியிட விரும்ப வில்லை.

"'முப்பது வருஷங்களாக வேலை செய்தேன். ஒரு சின்னத் தப்புச் செய்ததில்லை. கடைசியிலே ஓய்வெடுக்கப்

போகும் தருணத்தில் கடமை தவறிவிட்டேன்' என்று பெருமூச்சு விட்டார். அவர் கண்கள் மங்கின. அவர் முகம் பார்க்க விகாரமாக மாறியது.

"அந்த நிலையில் நான் அவருக்கு என்ன ஆறுதல் சொல்ல முடியும்? கடமை தவறியதை நினைந்து ஒரு கண்ணியமான உள்ளம் உருகுகின்றது. அதைச் சாந்தப் படுத்த வெறும் வார்த்தைகளுக்கு வன்மை உண்டா? நான் ஆரம்பத்தில் கூறியபடி நடராஜ பிள்ளை நற்குணங் களின் வடிவமல்ல; அவரிடம் குறைபாடுகள், தவறுகள் உண்டு. ஆனால் கடமை ஒன்றை மட்டும் அவர் வழுவாது செய்து வந்தார். அதில் தவறினால் இவ்வளவு மனச் சோர்வு ஏற்படுமென்று அவருக்கே அதுவரை தெரியாது. நண்பன் என்ற முறையிலே நான் என்ன என்னவோ வழிகளைக் கையாண்டு அவருக்கு ஆறுதல் உண்டாக்க முயன்றேன்.

"மானேஜரிடம் சென்று நடந்த விஷயங்களை யெல் லாம் ஒன்றுவிடாமல் சொன்னேன். 'இந்தச் சமயத் திலே அவருக்கு நீங்கள்தான் ஆறுதல் கொடுக்க முடியும். வேறொருவராலும் அதைத் தர இயலாது. ஒரு நாள்கூடத் தப்புச் செய்யாதவர் கடைசியில் அப்படிச் செய்துவிட்டு உள்ளுக்குள்ளேயே நைந்து உருகுகிறார். மருமகன்மேல் கொண்ட வாஞ்சையின்முன் கடமை உணர்ச்சி மறைந்ததே என்று கலங்குகிறார்' என்று கூறி வேண்டினேன்.

"மானேஜர் நல்லவர். நான் கூறியதைச் சரியான நோக்கோடு ஏற்றுக்கொண்டார். நடராஜ பிள்ளையின் வீட்டிற்கு ஒருநாள் இரவு வந்து அவரோடு தனியாக வெகு நேரம் பேசிக்கொண்டிருந்தார். அதனால் நல்ல பலன்

ஏற்பட்டிருக்குமென்று நம்பி நான் ஆவலோடு மறுநாள் மாலை நடராஜ பிள்ளையைக் காணச் சென்றேன்.

"நான் எதிர்பார்த்தபடி ஒரு நன்மையும் ஏற்படவில்லை. அவர் நிலைமை இன்னும் மோசமாகக் காணப்பட்டது. வெகு நேரம் நான் பேச்சுக் கொடுத்துப் பார்த்தேன். ஆனால் அவர் ஒரே மௌனம் சாதித்தார். வேதனையோடு புரண்டு புரண்டு படுத்தார். அவர் உள்ளத்தில் என்ன என்ன எண்ணங்கள் எழுந்தனவோ, யார் கண்டார்கள்?

" 'நீங்கள் ஒன்றும் பணத்தைத் திருடிக் கொள்ள வில்லையே? அந்தப் பணம் மறுநாள் காலைவரையில் பெட்டியில் இருந்திருந்தாலும் அதனால் பாங்குக்கு யாதொரு லாபமும் உண்டாகி இருக்காது' என்று இப்படிப் பேச்சை மாற்றினேன்.

"அவர் வாய் திறந்தார். 'பாங்குக்கு லாபமா இல்லையா, அதா கேள்வி?' என்று என்மேல் சீறிவிழுந்தார்.

"மௌனம் சாதிப்பதைவிட அப்படிச் சீறினாலும் மனக் கொதிப்புத் தணியும் என்று நான் மேலும் மேலும் பேசினேன். என் பேச்சு அவருக்கு வெறுப்பையே தந்தது. அவர் துயரமும் ஓங்கிற்று.

" 'விஷயத்தைப் புரிந்து கொள்ளாமல் வாய்க்கு வந்தபடி உளறுகிறீர்கள். நான் கடமையில் தவறிவிட்டேன். அதை இனி மாற்ற முடியுமா? நான் இத்தனை காலம் வாழ்ந்து என்ன பிரயோசனம்?' என்றார் அவர்.

" 'மானேஜர் உங்களைப்பற்றி வித்தியாசமாக நினைக்க வில்லையே?'

" 'அவர் என்னைக் கண்டித்திருந்தால் எனக்கு ஓரளவு சந்தோஷமாக இருக்கும். வெளியே அனுப்புகிற சமயத்

தில் எதற்குக் கண்டிக்க வேணும் என்று இருந்துவிட்டார். அதுவே என்னை வாட்டுகிறது.'

" 'இல்லை இல்லை; அவர் அப்படி நினைப்பதாகத் தெரியவில்லை.'

" 'மானேஜர் நினைப்பதைப்பற்றியும் எனக்குக் கவலையில்லை. எத்தனையோ தடவை நான் இப்படிப் பணத்தைக் கையாண்டிருப்பேன் என்று அவர் எண்ணி னாலும் அதைப்பற்றி அவர்மேல் குற்றம் சொல்ல முடியாது. அவருக்கு என்மேல் இருந்த நம்பிக்கையை நான் போக்கிக்கொண்டேன். பிறகு எனக்கு என்ன வேண்டியிருக்கிறது?'

"என்னால் அவருக்குச் சமாதானம் சொல்ல முடிய வில்லை. அரைமணி நேரம் பேசாமல் உட்கார்ந்திருந் தேன். அவர் கட்டிலில் நிலைகொள்ளாது புரண்டு புரண்டு பெருமூச்சு விட்டார். அவர் முகத்தில் படிந்திருந்த துயரம் பெருகிக்கொண்டேயிருந்தது. நான் வெளியே புறப்படுகிற சமயத்திலே அவர் மனைவி மருந்தை எடுத்துக் கொண்டு ஏக்கத்தோடு வந்தாள். அவர் அதை வாங்கி அருந்திவிட்டு, கதவருகே வாடிய முகத்துடன் வந்து நின்ற மகளை ஏறிட்டுப் பார்த்தார். பிறகு கட்டிலின்மேல் சாய்ந்து முகத்தை மறுபுறம் திருப்பிக் கொண்டார். நான் வெளியே வந்தேன்.

"நாளுக்கு நாள் அவர் நிலைமை மிகவும் கவலைக்கு இட மாக மாறியது. அநுதினமும் நான் அவரைப் போய்ப் பார்ப்பேன். அவர் பேசுவதையே நிறுத்திக்கொண்டார்.

"ஒரு நாள் என்னால் அவருடைய முகத்தைப் பார்க் கச் சகிக்கவில்லை. அதில் ஒரே துயரம். என்னையும் மீறிக்

கண்ணீர் பிதுங்கியது. நெடுநாள் நட்பு அல்லவா? என்றால் தாங்க முடியவில்லை.

"அவர் சிரித்தார்; மகிழ்ச்சி இல்லாத சிரிப்பு; துயரச் சிரிப்பு. 'எனக்காகவா கண்ணீர்? கடமை தவறிய வனுக்கு எதற்காக இரக்கப் படுகிறீர்கள்?' என்றார் அவர்.

"எனக்கு மேலும் அழுகை வந்துவிட்டது. குழந்தை யைப்போல விம்மி விம்மி அழுதேன். 'அழுவதற்குக் காலம் வரும். என்னுடன் சிநேகமாக இருந்த தோஷத் திற்கு அப்பொழுது கண்ணீர் சிந்தலாம். இப்போது என்ன வந்துவிட்டது?' என்று அவர் கூறி மறுபக்கம் புரண்டு படுத்துக்கொண்டார்.

"அன்றைக்குத்தான் அவர் பேசியது. பிறகு பேச்சே இல்லை. பாங்கு ஊழியர்கள் நிதி கொடுக்கவும் இல்லை; பிரிவுபசாரக் கூட்டம் நடத்தவும் இல்லை. நடராஜ பிள்ளை படுக்கையை விட்டு எழுந்திருக்கவும் இல்லை.

"கடைசி நாளன்று நான் பக்கத்திலேயே இருந்தேன். அவர் ஏதேதோ பிதற்றினார். ஆவலோடு எதிர்பார்த்த ஓய்வைப்பற்றியோ, தாம் வளர்த்த பூச்செடிகளைப் பற்றியோ, மனைவி மக்களைப்பற்றியோ அவர் நினைக்கவே இல்லை. கடமை ஒன்றைப்பற்றித்தான் என்ன என்னவோ கூறிக்கொண்டிருந்தார். வார்த்தைகள் தெளிவாக வர வில்லை.

"ஆனால் மூச்சு நிற்பதற்கு முன்பு நன்றாக அனைவருக் கும் தெரியும்படி அவர் ஒரு தரம் நிதானமாகப் பேசினார்:

'கடமை பெரிதா, உயிர் பெரிதா? கடமை தவறி வாழ்வதைவிட இறப்பதுதான் நல்லது'

"அந்த நிமிஷத்திலே அவர் முகத்தில் ஒரு தெளிவு பிறந்தது. ஆனல் உயிர் நிற்கவில்லை."

இவ் வரலாற்றைக் கூறி முடிக்கும்போது வீராசாமியின் குரல் கம்மியது. கல்யாணசுந்தரம் சிந்தனையில் மூழ்கினர்.

# மழையும் இடியும்

ஐப்பசி மாதத்தில் ஒரு நாள் மாலை. மேற்குத் திசையிலே தலை நிமிர்ந்து படுத்திருக்கும் மலைத் தொடர்களின் இடையே வானம் உறுமிக்கொண்டிருந்தது. அங்குத் தோன்றி மேலெழுகின்ற கருமேகங்கள் பயங்கரமாக ஆகாயப் பரப்பை மூடுகின்றன. எட்டு நாட்களாக விடாது பெய்துகொண்டிருந்த மழையெல்லாம் சேர்ந்து ஒரே கணத்தில் பெய்ய வருவது போலத் தோன்றுகிறது. இன்று சற்றுப் பிரகாசித்த சூரியனும் ஒளிந்துகொண்டான். தனது நெருப்பெல்லாம் வரப் போகும் பெருமழையில் அவிந்துவிடுமே என்று பயந்துகொண்டான் போலிருக்கிறது.

நஞ்சப்பன் குறும்பையாட்டு ரோமத்தால் செய்த முரட்டுக் கம்பளியை இழுத்துப் போர்த்துக்கொண்டு திண்ணையிலே உட்கார்ந்திருந்தான். அவனுடைய பொக்கை வாயிலே எருக்கிலையினால் சுற்றிய புகையிலைச் சுருட்டுப் புகைந்துகொண்டிருந்தது. பக்கத்திலே ஒரு வாக்கணத்தில் தீத் தயாராக இருந்தது. சுருட்டு அடிக்கடி கெட்டுப்போகிறது. கிழவனைக் கண்டால் இந்தத் தீக்கூட லட்சியம் செய்வதில்லை. கிழவனுக்கோ வேகமாகச் சுருட்டை உறிஞ்சித் தீயை அணையாமல் செய்யவும் சக்தியில்லை. இந்த நிலையிலே நாலைந்து தரம் நெருப்புக்கொண்டு வந்து கொடுத்துச் சலித்துப்போன அவனுடைய பேத்தி மாராயி ஒரு வாக்கணம் நிறைய நெருப்புக் கொண்டுவந்து வைத்துவிட்டு உள்ளே அடுப்பு வேலையைக் கவனிக்கப்

போய்விட்டாள். தீயை வாக்கணத்திலே கொண்டு வந்ததைக் கண்ட நஞ்சப்பனுக்குத் தன்னை அறியாமல் சிரிப்பு வந்துவிட்டது. "நல்ல யோசனை பண்ணினாய். இது தான் சரி. இனிமேல் உன்னைத் தொந்தரவு பண்ணமாட்டேன்" என்றான் அவன்.

"தொந்தரவொண்ணுமில்லை தாத்தா. அடுப்பு வேலை கெட்டுப் போகுதேன்னு பார்த்தேன்" என்றாள் குமரி.

"ஆமாம்மா. அதைப்பாரு. சீக்கிரமா ஏதோ ரண்டு காச்சிக் குடித்துவிட்டுப் படுத்துக் கொள்வோம். பெரிய மழை வரும்போல் இருக்கிறது" என்றான்.

அதற்குள்ளே மறுபடியும் சுருட்டு அவிந்து போய் விட்டது. பேச்சை நிறுத்திவிட்டுக் கிழவன் அதைப் பற்ற வைக்கக் கரண்டியைக் கையில் தூக்கினான்.

மின்னல்போல மாராயி உள்ளே மறைந்துவிட்டாள்.

பனை ஓலை வேய்ந்த கூரையின் மேலே பெரும் பெரும் துளிகளாக விழும் மழையின் சப்தம் கேட்க ஆரம்பித்தது.

மாராயி வாசலுக்கு ஓடிவந்தாள். காய்ந்துகொண்டிருந்த சுள்ளிகளை யெல்லாம் அவசர அவசரமாகச் சேகரிக்கலானாள்.

"மாரு, உள்ளே வந்து விடு. மழையில் நனையாதே" என்று கூவினான் கிழவன்.

"விறகெல்லாம் நனைந்து போனால் நாளைக்கு அடுப்புப் பத்தவைக்க என்ன செய்வது தாத்தா?"

"கொஞ்சம் எடுத்துக்கொண்டு சீக்கிரம் வா. மழையிலே நனையப்படாது."

"ஒரு நாளைக்குத்தான் நனைஞ்சுபோனா என்ன தாத்தா? நான் என்ன கருப்பட்டியா? கரைந்தா போவேன்?"

"ஐயோ, வாண்டாம்மா, நனையவேபடாது."

"ஏன் தாத்தா, மழை வந்தபோதெல்லாம் இப்படியே சொல்றீங்க? உங்களுக்கென்ன மழை யென்றால் இத்தனை பயம்?"

"ஆமாம்; பயந்தானம்மா; பயந்தான்."

"என்னத்துக்குத் தாத்தா பயம்? எனக்கொன்றுமே தெரியவில்லையே?" என்று சுள்ளிகளைக் கையில் எடுத்துக் கொண்டு வந்து கதவருகே நின்ற மாராயி கேட்டாள்.

"அதுவா? அதை ஏன் கேட்கிறாய்? நான் பொல்லாத பாவி" என்று கிழவன் பெருமூச்சு விட்டுக்கொண்டு மெதுவாகக் கூறினான். அவன் குரலிலே சோகம் தொனித்தது. கையிலிருந்த சுருட்டு நழுவித் தரையிலே விழுந்தது. அதன் உயிர் போய்விட்டது.

விறகை அப்படியே குடிசைக்குள் போட்டுவிட்டு மாராயி தாத்தாவிடம் வந்து நின்றாள்.

"தாத்தா, என்னவோ ஒரு விசனம் உங்கள் மனசிலே இருந்துகொண்டே இருக்கிறது. அடிக்கடி இப்படி நீங்கள் பெருமூச்சு விடுவதை நான் பார்க்கிறேன். ஏன் தாத்தா, உங்களுக்கென்ன விசனம்?" என்று ஆவலோடு அவள் வினவினாள்.

இதற்குள்ளே பெரிய மழை ஆரம்பித்துவிட்டது. திண்ணை யெல்லாம் சாரலடித்தது. "மாரு, வா, உள்ளே போகலாம். சாப்பிட்டுவிட்டு, படுத்துக்கொண்டே பேசுவோம்" என்று கிழவன் உள்ளே நகர்ந்தான்.

இருவரும் உணவருந்தியதும் கதவை நன்கு இழுத்துச் சாத்திவிட்டுப் படுத்துக்கொண்டார்கள். ஓலைக் கூரையின்மேல் திபு திபுவென்று மழை விழுந்துகொண்டிருந்தது. அதன் வேகத்தால் ஓரிடத்தில் ஒழுக்கெடுத்துச் சிறுமியின் மேல் சொட்ட ஆரம்பித்தது. நஞ்சப்பன் சட்டென்று எழுந்து அவர்கள் படுத்திருந்த பாயை வேறிடத்தில் தள்ளிப்போட்டான்.

"ஆறேழு வருஷமாச்சு, கூரைபோட்டு. இதுவரை ஒழுகவே இல்லை. இனிமேல் யார் இப்படிப் போடப் போகிறார்கள்? உன்னை ஒருத்தன் கையில் பிடித்துக் கொடுக்கும் வரையில் இந்தக் கூரை தாட்டினால் போதும். அப்புறம் எப்படிக் கிடந்தால் என்ன?" என்று அவன் தனது உள்ளக் கருத்தை வெளிப்படையாகப் பேசினான்.

மாராயிக்கு வயது சுமார் பன்னிரண்டிருக்கும். அவளுக்கு இப்பொழுது கல்யாணத்தைப் பற்றி யெல்லாம் எண்ணமே இல்லை. தன் தாத்தாவின் மனத்திலே படிந்திருக்கிற விசனத்திற்குக் காரணத்தை அறிந்துகொள்ள வேண்டுமென்பதே அவள் ஆசை.

"ஏன் தாத்தா, மழைத்துளி ஒரு சொட்டுக்கூட என் மேலே படப்படாது என்று நினைக்கிறீர்களே, என்னத்தினாலே?"

"மழையா? அதுதான் யமனாக வந்தது?" என்றான் கிழவன்.

மாராயிக்கு ஒன்றுமே விளங்கவில்லை. விஷயத்தை நன்றாக அறிந்துகொள்ள வேண்டுமென்று அவள், "தாத்தா, நீங்கள் சொல்லறது எனக்கு அர்த்தமே ஆகவில்லை. எல்லாச் சங்கதியும் ஒன்று விடாமல் சொல்லுங்க.

நீங்கள் ஏன் அடிக்கடி விசனப்படுகிறீர்கள்? மழையைக் கண்டால் உங்களுக்கு ஏன் இத்தனை பயம்? சொல்லுங்க தாத்தா'' என ஆவலோடு கேட்டுக்கொண்டாள்.

நஞ்சப்பனுக்குத் தன் மனத்திலுள்ள துயரத்தை யாரிடமாவது அந்தச் சமயத்தில் கூறிவிட வேண்டுமென்று தோன்றியது. அவன் தொடங்கினான்:

''மாரு, உனக்கு அம்மா ஒருத்தி இருந்தாள்; ஞாபகமிருக்கிறதா? அவள்தான் வேலாத்தா. அவள் சாகிறபோது நீ ரொம்பச் சிறு பெண். உனக்கு மூன்று வருஷந்தானிருக்கும். தாயென்றால் அவளைத்தான் சொல்ல வேணும். உன் மேலே அவளுக்கு அத்தனை பிரியம். உன் தகப்பனும் அவளும் சந்தோசமா உன்னை வளர்த்துக் கொண்டு வந்தார்கள். ரெண்டு பேரும் உயிருக்குயிரா இருப்பார்கள். நான்தான் அவர்கள் வாழ்க்கையிலே மண்ணைப் போட்டுவிட்டேன். எனக்கும் அவர்கள் மேலே பிரியந்தான். பெத்த மகனிடத்திலே பிரியமில்லாமலா இருக்கும்? ஆனால் எனக்கென்னமோ அவர்கள் ரெண்டு பேரும் கூடிக் குலாவிக்கொண்டு இருக்கிறதைப் பார்த்தால் சில சமயத்திலே பிடிக்கிறதில்லை. ராமசாமிதான் உன் அப்பன் பேர். அவன் வேலாத்தாளை வேலை செய்யவே அனுப்பமாட்டான். அவளாக இஷ்டப்பட்டு வேலைக்கு வந்தாலும் வெயில் நேரத்திலெல்லாம் வீட்டுக்கு வந்துவிடும்படி சொல்லுவான். இது எனக்குப் பிடிக்கவே இல்லை. சிறு வயசுக்காரர்களெல்லாம் நல்லாக் கஷ்டப்பட்டுப் பண்ணையில் வேலை செய்ய வேணும். நமக்கிருப்பதோ கொஞ்சம் நிலம். எல்லோரும் நன்றாகப் பாடுபட்டால்தான் ஜீவனம் பண்ண முடியும். நான் ஓயாமல் வேலை செய்வேன். அப்படி அவர்கள் ரெண்டு

பேரும் செய்யமாட்டார்கள். அதுவுமல்லாமல் உன் அம்மாள் என்றைக்குப் பார்த்தாலும் சீவுவதும், கொண்டையில் செவ்வந்திப் பூ வைத்து, நெற்றியிலே பெரிய பொட்டு வைத்துக்கொள்வதும் எனக்குப் பிடிக்கிறதே இல்லை.''

இதைக் கேட்டதும் மாராயிக்குச் சிரிப்பு அடக்க முடியவில்லை. வாய்விட்டு உரக்கச் சிரித்தாள். நஞ்சப்பன் தான் சொல்லுவதைச் சற்று நிறுத்தினான்.

''ஏன் தாத்தா, பாட்டி உங்களைக் கல்யாணம் பண்ணிக்கிட்ட புதிசிலே இப்படியெல்லாம் பண்ணமாட்டாளா?'' என்று சிறுமி குறும்பாகக் கேட்டாள்.

''பாட்டியா, அந்தக் காலத்திலே அவள் மாமனுருக்கு எதிரிலேயே வரமாட்டாள். அப்படி அகஸ்மாத்தாய் வந்துவிட்டாலும் முக்காடு போட்டுக்கொள்ளுவாள். அவள் சாகும் வரையிலும் அப்படித்தான். இந்தக் காலத்திலே யார் அப்படி இருக்கிறார்கள்? இப்போ எல்லாம் மாறிப் போச்சு. அந்தக் காலம் இனி வருமா?''

''கல்யாணமான பிறகு பாட்டி நாலஞ்சு வருஷந்தான் உயிரோடு இருந்தான்னு சொன்னீங்களே?''

''ஆமாம், இருக்கிற வரையிலும் அப்படி அடக்கமா இருந்தாள்.''

''அவள் செத்த பிறகு நீங்க மறு கல்யாணம் பண்ணிக்கவில்லையா?''

''கல்யாணம் வேண்டாம்னு ரொம்ப நாள் இருந்தேன். உன் அப்பனுக்குக் கல்யாணம் பண்ணி வச்சபிறகு தான் எனக்கும் கல்யாணம் பண்ணிக்கலாமென்று ஆசை

வந்தது. ஆனால் அப்ப யாரும் பெண் கொடுக்க மாட்டே னென்று சொல்லிவிட்டார்கள்.''

மாராயி மறுபடியும் சிரித்தாள்.

''மாரு, இப்போ எனக்கு நீதான் உயிர். உன்னிடத் திலே எல்லாவற்றையும் வெளிப்படையாகச் சொல்லா மல் வேறு யாரிடம் சொல்லப்போகிறேன்?''

''சரி தாத்தா, அப்புறம் சொல்லுங்க.''

''உனக்கு ரெண்டு வயசா இருக்கும்போது நான் ஒரு நல்ல கடாரி வாங்கி வந்தேன். 'அதையாவது வேலாத் தாள் மேய்த்து வளர்க்கட்டுமென்று நான் நினைத்தேன். அவளுக்கும் அதன்மேலே ரொம்ப ஆசைதான். ஆனால் தினமும் ராத்திரியிலே வீட்டுக்கு ஓட்டி வருவதில்லை. ஒரு நாளைக்குப் போய் ஓட்டிக்கொண்டு வருவாள். நாலு நாளைக்குப் போகமாட்டாள். காட்டிலே விட்டுவிடுவாள். நான் அதைப்பற்றி ராமசாமியிடம் சொன்னாலும் அவனும் காதில் போட்டுக்கொள்வதில்லை. பல தடவை இப்படி நடக்கவே எனக்குக் கோபம் அதிகமாய்க்கொண்டே வந்தது. காட்டிலேயே மாடு இருப்பதால் ஒன்றும் முழுகிப்போய்விடாது. இருந்தாலும் என் பேச்சை சட்டை செய்யாமல் வீட்டிலேயே இருந்துகொண்டிருக்கி றாளே என்று கோபம் அதிகமாய்விட்டது. ஒரு நாள் ராத்திரி கடாரி வீட்டுக்கு வராததைப் பார்த்து நான் அவர் கள் ரெண்டு பேரையும் வாய்க்கு வந்தபடி யெல்லாம் பேசிவிட்டேன்.

'' 'மழை வருவது போல இருக்கிறது; ஒரே இருட் டாயும் இருக்கிறது. எப்படிப் போகிறது?' என்று ராமசாமி மெதுவாகச் சொன்னான்.

"'மழை வந்தா என்ன? நனைஞ்சா மூளைச்சுப் போவீர்களா? வீட்டிலே ராணி மாதிரி உட்கார்ந்து கொண்டிருக்க எங்கே போவது? அவள் என்ன மழைத் துளி மேலே படடறியாத சீமாட்டியா?' என்று இப்படி யெல்லாம் இடித்து இடித்துப் பேசினேன். பேசின பிறகு ஏன் அப்படிப் பேசினேன் என்றுகூட நினைத்தேன். என்னுடைய பேச்சு அவள் மனதைத் தாக்கிவிட்டது. அதற்குள்ளே பெரு மழையும் வந்து தொலைந்தது. அவள் அதைக் கவனியாமல் கும்மிருட்டுக்குள்ளே புறப்பட்டு விட்டாள். 'நான் போய் ஓட்டி வருகிறேன்; நீ போக வேண்டாம்' என்று ராமசாமி கூவினான். அவள் அதைக் காதிலேயே போட்டுக்கொள்ளவில்லை. போய் நனைந்து சிரமப் படட்டும் என்றுதான் எனக்கும் இருந்தது. அவள் போன சிறிது நேரத்திற்குள் உன்னப்பன் ராந்தலை ஏற்றிக் கொண்டு பின்னாலேயே போனான். 'ஆகா, பெண்டாட்டி இருட்டிலே போறாள்னு கவலையைப் பாரு' என்று நான் ஏளனமாகக் கூறினேன்.

"அவர்கள் திரும்பிவர வெகு நேரமாகிவிட்டது. காற்று வேகமாக அடித்ததால் கொஞ்ச தூரம் போனதும் ராந்தல் அணைந்திருக்க வேண்டும். இடியும் மின்னலும் அன்று பூமியையே பிளந்தெறிவது போலப் பயங்கரமாக இருந்தன. மழை ஒரே வெள்ளமாகக் கொட்டியது. எத்தனையோ மரங்கள் சடசடவென்று முறிந்துவிழுந்தன.

"எனக்குப் பயமாகப் போய்விட்டது. அவர்கள் திரும்பி வந்த போது மழையில் நனைந்து நடுங்கிக் கொண்டிருந்தார்கள். வேலாத்தாளுக்குத் தலையிலே ரொம்ப மயிர்; நீளமாகத் தொங்கிக்கொண்டிருக்கும். அவள் தலையை உலர்த்திக்கொண்டாளோ என்னமோ,

எனக்குத் தெரியாது, வீட்டுக்குள்ளே போய்ப் படுத்துக் கொண்டார்கள். மறு நாளே காய்ச்சல் வந்து படுத்தவள் தான்: அப்புறம் எழுந்திருக்கவே இல்லை. போய்விட் டாள். ராமசாமி அலறித் துடித்தான். அவனுக்கு அந்த ஏக்கம் தீரவேயில்லை. என் மகன் நாளுக்கு நாள் துரும்பாக இளைத்துக்கொண்டே வந்தான். நானும் எத்தனையோ ஆறுதலெல்லாம் சொன்னேன். இன்னொரு கல்யாணம் செய்து வைக்கிறேன் என்றெல்லாம் சொல்லிப் பார்த்தேன். அவனுடைய துயரம் ஆறாத் துயரமாகி விட்டது. மாரு, என்மேல் நீ கோபங் கொள்ளப்படாது. நானும் ரொம்ப வருத்தப்பட்டேன். இப்படி யெல்லாம் வரும் என்று எனக்கு எப்படித் தெரியும்? அதென்னமோ எனக்குப் பொல்லாத காலம். வேலாத்தாள் என்னிடம் பிரியமாகத்தான் இருந்தாள். ஆனால் அவள் அப்படித் தாராளமாக மகள் மாதிரி நடந்துகொள்வது எனக்குப் பிடிக்காமல் போயிற்று. மருமகள் என்றால் பயந்து கொண்டிருக்க வேண்டுமென்றோ என்னமோ ஒரு எண் ணம் என்னையறியாமல் மனசுக்குள்ளே இருந்திருக்கிறது. அதனாலே நான் அவளை அப்படிப் பேசிவிட்டேன்.

“அதனாலேதான் நான் ரொம்பக் கஷ்டப்பட்டுவிட் டேன். என் மகன் உருகிக்கொண்டே வந்தான். என்ன செய்தும் அவன் தேற வில்லை. வேலாத்தாள் இறந்து இரண்டு வருஷங்கூட அவன் உயிர் வாழவில்லை. அத்தனை காலமும் உன்னைப் பார்த்துத்தான் ஒரு மாதிரி உயிர் வைத்திருந்தான்.

“ஒரு நாள் மறுபடியும் பெரு மழை வந்தது. தூங்கிக்கொண்டிருந்த உன் தகப்பன் திடீரென்று எழுந்து அந்த மழைக்குள்ளே ஓடினான். நான் சத்தம் போட்டுப்

பார்த்தேன். அவன் வெகு நேரம் வரையிலும் திரும்பவே யில்லை. அப்புறம் அவன் வந்து திண்ணை மேலே தொப் பென்று விழுந்தான். மெய்ம்மறந்து கண்டபடி உளறிக் கொண்டிருந்தான். 'வேலாத்தா, அதோ கடாரியைப் பிடி, மழை வந்தால் முளைச்சா போவாய்? இந்தா, அதோ ஓடு' என்றெல்லாம் பேசினான். அவன் உடம்பு கொதித் துக்கொண்டிருந்தது. 'இந்த மழையில் எதற்கடா வெளியே போனாய்?' என்று நான் கதறினேன். கதறி என்ன செய்வது? மகன் எழுந்திருந்து என்னிடம் ஒரு நல்ல வார்த்தைகூடப் பேசவில்லை. அப்படியே மாண்டு போனான்." இதைச் சொல்லிவிட்டுக் கிழவன் வாய்விட்டு அழுதான். மாராயியும் கூடச் சேர்ந்துகொண்டாள்.

"மழைதானம்மா அவர்கள் ரெண்டு பேருக்கும் கூற்றுவனாக வந்தது" என்று விம்மியவாறே கிழவன் சிறுமியை அணைத்துக்கொண்டான்.

அந்தச் சமயத்தில் மழை சட்டென்று நின்றது.

# பட்டணம் கை

இது கதையல்ல; பதினைந்து நாட்களுக்கு முன்னே நடந்த உண்மைச் சம்பவம். ஆனால் பட்டணம் கையின் திறமையைத் தங்கள் சொந்த அநுபவத்தில் கண்டவர்களே இதை உண்மை என்று நம்புவார்கள்; மற்றவர்களுக்கு நான் எவ்வளவு வற்புறுத்திக் கூறினாலும் இது வெறும் கட்டுக் கதையாகத்தான் தோன்றும். நீங்கள் எப்படி முடிவு கட்டினாலும் சரி - விஷயத்தை நடந்தவாறே கூறி விடுகிறேன்.

நானும் என் மனைவியும், என் நண்பன் ஒருவனும் அந்தச் சம்பவத்தில் பங்கெடுத்துக்கொண்ட முக்கிய பாத்திரங்கள். இன்னும் இரண்டு மிகப் பிரதானமான பாத்திரங்கள் உண்டு. அவர்களில்லாமல் இந்தச் சம்பவமே நடந்திருக்க முடியாது; இராவணன் இல்லாமல் இராமாயணம் உண்டா? ஆனால் அவர்களை யாரென்று எங்களில் ஒருவருக்கும் தெரியாது; தெரிந்திருந்தாலும் இச்சம்பவத்தின் முடிவே வேறு விதமாக மாறியிருக்கும்.

எங்களுக்கு அவர்களைப் பற்றி ஒன்றும் தெரியாமற் போனாலும், அவர்களுக்கு எங்களைப் பற்றி நன்கு தெரியும் போலிருக்கிறது. அதுவே அன்று நடந்த சம்பவத்திற்கு முக்கியமான சாதகமாயும் அமைந்திருக்கிறது.

எனக்கும் என் மனைவிக்கும் சென்னை புதிது. சமீப காலத்தில்தான் இங்கே குடி வந்தோம். 'பட்டணத்திலே அறம், பொருள், இன்பம் மூன்றும் கிடைக்கும்; ஆனால் வீடு மட்டும் கிடைக்கவே கிடைக்காது!' என்று எனக்கு

முன்பே கூறியிருந்தார்கள். வீடு கிடைப்பது அவ்வளவு எளிய காரியமா? பட்டணமென்று சொன்னால் மாத்திரம் அது எப்படிச் சுலபமாகக் கிடைக்க முடியும் என்று நான் பெரிய தத்துவ சாஸ்திரி போல நினைத்துக்கொண்டு இங்கு வந்து சேர்ந்தேன். குடியிருப்பதற்கு வீடு தேடி அலைந்தபோதுதான் அவர்கள் கூறிய செங்கல்லும் சுண்ணாம்பும் மணலும் கலந்து உண்டாக்கிய இந்த வீட்டின் அருமை தெரிய வந்தது.

கடைசியில் எப்படியோ ஒரு வீட்டை ஏற்பாடு செய்துகொண்டு குடும்பம் ஆரம்பித்தேன். ஆரம்பித்துச் சரியாக ஒரு மாதங்கூட ஆகவில்லை; அதற்குள் அந்தச் சம்பவம் நிகழ்ந்துவிட்டது.

ஒரு நாள் மாலை சுமார் மூன்று மணி இருக்கும். ஒருவன், "இது வக்கீல் வீடா?" என்று தெலுங்கிலே கேட்டுக்கொண்டே வீட்டிற்குள் நுழைந்தான். முன் அறையில் மேஜையருகில் நான் அமர்ந்திருந்தேன். "இல்லை, இங்கே யாரும் வக்கீல் அல்ல" என்று நான் தமிழில் பதில் சொன்னேன்.

"பக்கத்து வீட்டிலே விசாரித்தேன்; புதிதாக ஒரு வக்கீல் குடி வந்திருப்பதாகச் சொன்னார்களே? அப்பீல் ஒன்று ஹைகோர்ட்டில் தாக்கல் செய்யவேண்டும்" என்று தொடர்ந்து தெலுங்கிலேயே விசாரித்தான்.

"நான் வக்கீல் அல்ல; இந்தப் பட்டணத்திலே பக்கத்து வீட்டுக்காரருக்கு என்ன உத்தியோகமென்றுகூடத் தெரிகிறதில்லை" என்று கூறி நான் அவனை வெளியிலே அனுப்பினேன். அவனும் ஏமாந்தவன்போல் போனான். 'பாவம்! யாரோ ஆந்திர நாட்டுக் கிராமவாசி போலிருக்

கிறது; பட்டணத்திலே இடம் தெரியாது அலைகிறான்' என்று நினைத்து இரக்கப்பட்டுக்கொண்டேன். நாட்டுப் புறங்களிலுள்ள மக்களில் எத்தனையோ பேர் தமக்குள்ளே வீணுகச் சச்சரவு செய்துகொண்டு பட்டணத்து வீதிகளிலே வக்கீலையும் கோர்ட்டையும் தேடித் திரிந்து கையிலுள்ள பொருளையும் தொலைத்துக் கஷ்டப்படுகிறார்கள் என்கிற வருத்தமான விஷயம் என் மனத்திலே எழுந்தது. ஆனால் அதைப் பற்றி நெடு நேரம் சிந்தனை செய்துகொண்டிருக்க நேரமில்லை.

அன்று ஒரு நல்ல இசையரங்கு நடக்க இருந்தது. அதற்குப் புறப்படவேண்டிய யத்தனத்தில் கவனம் செலுத்தலானேன்.

ஐந்து நிமிஷங்கூட ஆகவில்லை; அவன் மறுபடியும் வந்தான். ஆனால் நான் அவனைப் பார்க்கவில்லை; என் மனைவி பார்த்தாள். அவளிடம் என்னை எங்கே என்று விசாரித்தானும். "இதோ உள்ளே குளிக்கும் அறைக்குப் போயிருக்கிறார்; வந்து விடுவார்" என்று என் மனைவி பதில் சொன்னாள். "அதிக நேரம் ஆகுமா? அவரிடம் அவசரமாக ஒன்று கேட்க வேணும்" என்றான் அவன். அவள் யதார்த்தமாக உட் பக்கம் வந்து என்னிடம் விஷயத்தைக் கூறிவிட்டு மறுபடியும் அவனுக்குப் பதில் கூற முன் அறைக்குச் சென்றாள்.

இதற்குள்ளே பட்டணம் கை வேலை செய்துவிட்டது. மேஜை மேல் நான் சற்று முன்புதான் கழற்றி வைத்து விட்டுப்போன கைக்கடிகாரத்தை அவன் எடுத்து மறைத்துக்கொண்டான். சற்று நேரத்தில் நான் வந்துவிடுவேனென்கிற செய்தியை அவனுக்கு என் மனைவி சொல்லவே

அவன் ஏதோ தலை போகிற அவசரம் போல, "மறுபடியும் பத்து நிமிஷத்தில் வந்து அவரைக் கண்டு கொள்கிறேன்; கொஞ்சம் அவசரம்" என்று கூறிவிட்டுக் கிளம்பிவிட்டான்.

நான் திரும்பி வந்ததும் விசாரித்தேன். "அந்த ஆசாமி ஏதோ அவசரமாகப் போய்விட்டான்; பத்து நிமிஷத்தில் மறுபடியும் வருவான்" என்று என் மனைவி பதில் கொடுத்தாள்.

பத்து நிமிஷமாயிற்று; அரை மணி, ஒரு மணி ஆயிற்று. திரும்பி வருவதற்கு அவனுக்கென்ன பைத்தியமா பிடித்திருக்கிறது? நாங்களும் அவன் வரவை எதிர் பார்க்கவில்லை. கடிகாரத்தை மறதியாக வேறு எங்காவது வைத்துவிட்டேனோ என்று தேட வேண்டாத இடமெல்லாம் தேடிக்கொண்டிருந்தோம். தேடும்போதே இது பட்டணம் கையின் வேலைதான் என்பது எங்களுக்கு நன்கு புலப்பட்டுவிட்டது. இருந்தாலும் கொஞ்ச நஞ்சம் உள்ள சந்தேகம் தீர்வதற்காக எல்லா இடங்களையும் துருவிப் பார்த்துவிட்டோம்.

நான் அன்று பாட்டுக் கச்சேரிக்குப் போகவில்லை. போலீசில் பிராது கொடுத்தல் முதலிய காரியங்களில் இரண்டு மூன்று மணி நேரத்தைத் தொலைத்துவிட்டு வீடு திரும்பினேன். அதே சமயத்தில் என் நண்பனும் வந்து சேர்ந்தான். அவன் அன்று காலையில்தான் சென்னைக்கு வந்தான். பட்டணம் பார்க்கவேண்டுமென்று அவனுக்கு வெகு நாளாக ஆசை. அதனால் கிறிஸ்துமஸ் சமயத்தில் உள்ள வேடிக்கைகளையெல்லாம் பார்க்கலாமென்று புறப்பட்டு வந்திருக்கிறான். காலையில் சாப்பிட்டுவிட்டுக் கிளம்

பியவன் அது வரையில் எங்கெங்கோ சுற்றிவிட்டு வந்தான். வந்தவன் மகிழ்ச்சியோடு, "கைக் கடிகாரம் ஒன்று வாங்க வேண்டுமென்று சொன்னேனல்லவா? நல்லதாக ஒன்றைக் குறைந்த விலையில் வாங்கிவிட்டேன்" என்று என்னிடம் சொன்னான். "அப்படியா? எங்கே, பார்க்கலாம்" என்றேன் நான்.

கடிகாரத்தை உடனே என்னிடம் காட்ட நண்பன் விரும்பவில்லை. அதை அவன் வாங்கிய பிரதாபத்தையெல்லாம் ஆதியோடந்தமாக எனக்கு எடுத்துரைத்து விட்டுப் பிறகு காண்பிக்கவேண்டுமென்பது அவனுடைய ஆசை. அதனால், "முதலில் அதை வாங்கிய விதத்தைப் பற்றிச் சொல்கிறேன். பிறகு கடிகாரத்தைப் பார்க்கலாம்" என்றான் அவன்.

"எப்படி வாங்கியிருப்பாய்? எல்லோரையும் போலத்தான் கடையெல்லாம் புகுந்து புகுந்து, ஆயிரத்தெட்டுக் கடிகாரங்களைப் பார்த்துவிட்டுக் கடைசியில் ஓர் ஓட்டைக் கடிகாரத்தை வாங்கி வந்திருப்பாய்" என்று கேலி செய்தேன் நான். "உனக்குத் தெரிந்தது அவ்வளவுதான். நான் அப்படியொன்றும் செய்யவில்லை" என்று அவன் பெருமையோடு பேசினான்.

"சரி; வாங்கின விதத்தைத்தான் சொல்லேன்" என்று நான் கேட்டேன்.

என் நண்பன் ஆரம்பித்தான்: "நான் சுமார் ஐந்தரை மணிக்குச் சைனா பஜாரில் நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தேன். அடாடா! என்ன கூட்டம்! கார்களும், பஸ்களும், டிராம்களும் எத்தனை! எனக்கு அப்படியே பிரமிப்பாய்ப் போய்விட்டது. ஓர் இடத்தில்

அசையாது நின்றுகொண்டு எல்லாவற்றையும் கவனித்தேன்.

"அப்பொழுது எனக்குப் பக்கத்தில் இரண்டு மனிதர்கள் வந்து நின்றார்கள். ஒருவன் தன் கையில் ஒரு கடிகாரத்தைக் கட்டிக்கொண்டிருந்தான். மற்றவன் அதை விலைக்குக் கேட்டான். 'ஐம்பது ரூபாய் வேண்டுமானால் கொடுக்கிறேன்; அதற்கு மேலே என்றால் எனக்கு வேண்டாம்' என்றான் அவன். எனக்குத் தெளிவாகக் கேட்கும்படி அவர்கள் வெளிப்படையாகத்தான் பேசினார்கள்; இரகசியமாகப் பேசவில்லை. அந்தக் கடைவீதி இரைச்சலிலே மெதுவாகப் பேசினால் எப்படிக் கேட்கப் போகிறது?

" 'இவ்வளவு குறைச்சல் விலைக்குக் கேட்பது நியாயமில்லை; நமக்குள் இருக்கிற சிநேகிதத்தை மனத்தில் வைத்துக்கொண்டு கேள்' என்றான் மற்றவன்.

" 'இஷ்டமிருந்தால் கொடு; நான் உன்னைக் கட்டாயப் படுத்தவில்லையே?' என்றான் விலைக்குக் கேட்கிறவன்.

"விற்கிறவனுக்குக் கோபம் வந்துவிட்டது. 'அவசரம் ஆபத்திற்கு உன்னையெல்லாம் நம்பினால் இப்படித்தான்; தலையில் மிளகை அரைத்துவிடுவாய்; உனக்கும் ஒரு ஆபத்து வாராதா? அப்பொழுது பார்த்துக்கொள்கிறேன்' என்று கடுமையாகப் பேசிவிட்டு அவன் வேகமாக நடந்தான். அவன் எங்கே போனானென்று தெரியவில்லை. சட்டென்று மறைந்துவிட்டான்.

"மற்றவன் அவனைத் தேடிக்கொண்டே அங்கும் இங்கும் அலைந்தான். பிறகு கவலையோடு என்னிடம் வந்து,

'ஸார், அவன் எந்தப் பக்கம் போனுனென்று பார்த்தீர்களா?' என்று கேட்டான்.

"'யாரைப்பற்றிக் கேட்கிருய்?' என்றேன் நான்.

"'அவன் என்னுடைய சிநேகிதன்தான். அவனுக்கு இப்போ பணத்திற்கு ரொம்ப அவசரம். அதனுலே தன் கைக் கடிகாரத்தை விற்கவேண்டுமென்று நினைக்கிருன். ஒரு மாதத்திற்கு முன்புதான் 110 ரூபாய் கொடுத்து அதை வாங்கினுன், எனக்கு நன்ருகத் தெரியும். இன்றைக்கு எட்டு மணிக்குள் அவனுக்குப் பணம் அவசரமாக வேண்டியிருக்காவிட்டால் அவன் அதை விற்கவே மாட்டான். நான் ஐம்பது ரூபாய்க்குக் கேட்டேன்; அவன் 75 கேட்கிருன். ஐம்பதுக்கு மேல் இன்னும் ஓர் ஐந்து ரூபாய் வைத்தால் பேசாமல் கொடுத்துவிடுவான். அவனை விட்டுவிடக்கூடாது. வேறு யாராவது அந்தக் கடிகாரத்தைத் தட்டிக் கொண்டு போய் விடுவார்கள். அவன் எங்கே போனுனென்று தெரியுமா?' என்று அவசரம் அவசரமாகக் கேட்டான்.

"'நான் கவனிக்கவில்லையே' என்று பதில் கொடுத்தேன். உண்மையில் அவன் எந்தப் பக்கம் போனுனென்று நான் பார்க்கவில்லை. அந்த மனிதன், 'அடாடா! ஏமாந்து போய்விடும் போலிருக்கிறதே' என்று கூறிக்கொண்டே ஒரு திக்கில் நடந்தான்.

"நாலு பக்கமும் பார்த்துக்கொண்டே நான் மெதுவாக நகர்ந்தேன். ஒருவன் கண்ணுடி தம்ளர் விற்கிருன்; ஒரு கிழவி, 'லட்டெல்லாம் ரண்டணு, லட்டெல்லாம் ரண்டணு' என்று சாத்துக்குடிப் பழம் விற்கிருள். பலூன் வியாபாரி ஒரு பக்கம் கீச்சுக் கீச்சென்று சத்தம் செய்

கிறான். கண்ணில்லாத கபோதி ஒருவன் ஊதுவத்தி விற்கிறான். பல்லுக்குச்சி ஒரு புறம்; பனியன் ஒரு புறம்; இன்னும் ரிப்பன் என்ன, காலண்டர் என்ன, பொத்தான் என்ன, பாச்சைக் குண்டு என்ன,—இப்படிப் பல வகையான சாமான்கள் ஜனங்கள் நடக்கும் குறுகிய பாதையிலேயே விற்கப்படுகின்றன. நகருவதற்குக் கூட இடமில்லை. ஒரே கூட்டம், ஒரே கூச்சல். கிராமத்தில் அமைதியாக இருந்துவிட்டு வந்த எனக்கு இந்த ஆரவாரத்தைக் கேட்டுத் தலை சுற்ற ஆரம்பித்துவிட்டது. கார் சத்தம் வேறு; எதற்கு அப்படிச் சத்தம் போடும் ஹாரன்களை வைத்துக்கொண்டிருக்கிறார்களோ தெரியவில்லை. பட்டணத்து ஜனங்களுக்குக் காது செவிடோ, என்னவோ. டிராம் சத்தம் வேறு. எனக்கு ஒரே மலைப்பாகப் போய்விட்டது. அதோடு அந்தப் பெட்ரோல் புகை நாற்றம் இருக்கிறதே, அதைத்தான் என்னால் சகிக்கவே முடியவில்லை. தலைவலி எடுத்துக்கொண்டது. இருந்தாலும் பட்டணத்துக் காட்சி ரொம்ப ஜோர்தான். நான் இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டு பத்துப் பதினைந்து கஜ தூரம் போயிருப்பேன்.

"அதற்குள் அந்தக் கடிகாரக்காரன் திரும்பி வந்து சேர்ந்தான். 'ஸார், என்னிடம் பேசிக்கொண்டிருந்தானே, அவன் எங்கே போனானென்று பார்த்தீர்களா?' என்று கேட்டான்.

" 'எனக்கு எப்படித் தெரியும்? உன்னைத்தான் தேடிக் கொண்டு போனான் அவன்' என்றேன்.

" 'நீங்கள்தான் பாருங்கள் ஸார்; இந்தக் கடிகாரத்தை அவன் 50 ரூபாய்க்குத் தட்டிக்கொண்டு போகலாமென்று பார்க்கிறான். வாங்கி ஒரு மாசங்கூட ஆகவில்லை. 110

ரூபாயைச் சுளை போலக் கொடுத்து வாங்கினேன். கஷ்டப்பட்டுச் சம்பாதித்த பணம். இன்றைக்கு எனக்கு எப்படியும் கொஞ்சம் பணம் வேண்டியிருக்கிறது. என்னுடைய நெருக்கடியைத் தெரிந்துகொண்டு லாப மடிக்கப் பார்க்கிறான். இத்தனைக்கும் அவன் எனக்கு வெகு நாளாகச் சிநேகம். இந்தக் காலத்திலே சிநேகிதம் எங்கே இருக்கிறது?' என்று வெறுப்போடு பேசிவிட்டுக் கடிகாரத்தை என்னிடம் கொடுத்தான்.

"அழகான கடிகாரம்; சமீபத்தில்தான் வாங்கினது என்பதில் சந்தேகம் இல்லை; அதற்குப் போட்டிருந்த தோல் பட்டை கூடப் பாலிஷ் மங்கவில்லை. எனக்கு அதன்மேல் ஆசை விழுந்துவிட்டது. குறைச்சல் விலைக்குக் கிடைத்தால் லாபந்தானே என்று நினைத்தேன்.

" 'எனக்கு அதை விற்றுவிட உனக்குச் சம்மதமா?' என்று மெதுவாகக் கேட்டேன்.

" 'யாராயிருந்தால் எனக்கென்ன? ரூபாய் 75 கொடுத்தால் யாருக்கு வேண்டுமானாலும் விற்கத் தயார். என்ன செய்கிறது? என்னுடைய அவசரம் அப்படி இருக்கிறது!' என்று அவன் விசனத்தோடு பதில் கொடுத்தான்.

" 'நான் 60 ரூபாய் கொடுக்கிறேன். இஷ்டமா உனக்கு?' என்றேன் நான்.

" 'என்ன ஸார், நீங்களும் அந்தப் பயலைப் போலப் பேரம் செய்கிறீர்களே? யாராவது இதை அடைமானமாக வைத்துக்கொண்டு 50 ரூபாய் கொடுத்தால் மூன்று நாளில் பணத்தைத் திருப்பிக் கொடுத்து விடுவேன். வட்டி வேண்டுமானாலும் கேட்டபடி கொடுப்பேன்' என்றான் அவன்.

" 'அடைமானம் வாங்கிக்கொள்ள நான் இந்த ஊரல்ல. சுத்தக் கிரயமாக 60 ரூபாய் கொடுக்கிறேன். அதற்கு மேலே அது பொருது' என்று சாமர்த்தியமாகப் பேசினேன்.

"கொஞ்ச நேரம் அவன் என்னுடன் வாதாடினன்; இடையிடையே தன்னுடைய தலைவிதியை நொந்துகொண்டான். நான் பிகுவாகவே இருந்தேன். 'சரி; உனக்கு இஷ்டமில்லாவிட்டால் வேண்டாம்; வேறு யாருக்காவது விற்றுக்கொள்' என்று கூறிவிட்டு நடந்து காட்டினேன். நான் அடியெடுத்து வைப்பது கண்டு அவன் மடங்கிவிட்டான். என்னை விட்டுவிட்டால் அவனுக்கு ஐம்பது ரூபாய்க்கு மேல் கொடுக்க ஆள் கிடையாதல்லவா? அதனால் அவன் பேசாமல் கடிகாரத்தை எனக்கு விற்றுவிட்டான்.

"எப்படி என்னுடைய வேலை?" என்று கூறிக்கொண்டே என் நண்பன் தான் வாங்கிய கைக் கடிகாரத்தை என்னிடம் காட்டினன். அவன் அதைச் சல்லிசாகத்தான் தட்டிக்கொண்டு வந்திருக்கிறான் என்பது எனக்கு உடனே விளங்கி விட்டது; கடிகாரமும் புதிது தான்; அதன் விலையும் 110 ரூபாய்தான். இவையெல்லாம் எனக்கு நிச்சயமாகத் தெரியும். ஏனென்றால் அது என்னுடைய கைக் கடிகாரந்தான்.

பட்டணத்துக் கையின் வேலை வெகு சுறுசுறுப்பாக நடந்துவிட்டது. எடுப்பதிலேயும் அப்படி; அதைப் பணமாக்குவதிலேயும் அப்படியே.

மூன்று மணிக்கு நடந்த திருட்டைப் பற்றி என் நண்பனுக்குக் கூற வாயெடுத்தேன். ஆனல் சட்டென்று

நிறுத்திக்கொண்டேன். யோசித்துப் பார்க்கிறபோது அதைச் சொல்வது உசிதமில்லை என்று பட்டது. என் நண்பன் 60 ரூபாய் கொடுத்து அதை வாங்கியிருக்கிறான். மலிவாக அவனுக்குக் கிடைத்திருக்கிறது. அந்தச் சந்தோஷமாவது இருக்கட்டுமே. விஷயத்தை நான் சொன்னால் அவன் என்னைக் கடிகாரத்தை எடுத்துக் கொள்ளும்படி வற்புறுத்துவான்; அதற்காக அவன் தந்த ரூபாயைப் பெற்றுக்கொள்ளவும் மறுத்து விடுவான். அந்தச் சங்கடமெல்லாம் வேண்டாமென்று நான் மௌனமாக இருந்து விட்டேன்.

ஆனால் ஒரு எச்சரிக்கை மட்டும் அவனுக்குச் செய்தேன். "பட்டணத்தை விட்டுப் போகும் வரையில் கடிகாரத்தை ஜாக்கிரதையாக வைத்துக்கொள். என்னுடைய மேஜை மேலே போட்டுவிட்டு அங்குமிங்கும் போய் விடாதே" என்றேன்.

"மேஜை மேலே வைத்தால் நீ தூக்கிக் கொள்வாயா? அல்லது உன் மனைவி தூக்கிக் கொள்வாளா? உங்கள் மேல் எனக்கு அப்படி ஒன்றும் சந்தேகம் இல்லையே!" என்று கேலியாகப் பேசினான் நண்பன்.

நான் பதில் பேசவில்லை.

# ராதா

வழக்கம் போல இன்றும் மோதி விழுந்து ரெயிலுக்குள் ஏறினேன். நிற்பதற்கு இடம் கண்டுபிடிப்பதற்குள் காரமடை ஸ்டேஷனைவிட்டு ரெயில் நகர்ந்து விட்டது. அப்பொழுதுதான் அவளுடைய குரல் கணீரென்று ஒலித்து என்னைத் தூக்கி வாரிப்போட்டு ஆச்சரியத்தில் மூழ்க வைத்தது. ஆமாம், அது அவளுடைய குரலேதான். அதில் சந்தேகமே இல்லை. நான் ஆவலோடு சுற்றிலும் பார்த்தேன். ராதா பாடிக்கொண்டு ஜன நெருக்கத்திற்கிடையிலே ஒரு கோடியிலே நின்றிருந்தாள். அவள் கையை ஒரு தள்ளாத கிழவன் பிடித்துக்கொண்டிருந்தான்.

நான் கூட்டத்தை விலக்கிக்கொண்டு, பலருடைய வசவு வார்த்தைகளையும் பொருட்படுத்தாமல் அவளிருக்கும் இடத்தை நோக்கி நடந்தேன். அவள் முகத்தைப் பார்த்ததும் என்னை யறியாமல் 'ராதா' என்று வாய் விட்டுக் கத்திவிட்டேன். வருஷக் கணக்காகப் பார்க்காமல் திடீரென்று அவளை அந்த நிலைமையில் கண்ணுற்றால் யார்தான் கத்தமாட்டார்கள் ?

நான் முதல் முதலில் அவளைப் பார்த்தபோது அவள் குழந்தையாக இருந்தாள். சிரித்த முகம்; இளமான் பார்வை; துள்ளிக் குதிக்கும் நடை; பிச்சை எடுப்பதாக உணர்ச்சியே ஏற்படாத பச்சிளம் பருவம்.

அந்தக் காலத்தில் அவள் பிச்சை கேட்பதே ஒரு தனிமாதிரி. "ஐயா—" என்று கையை நீட்டுவாள். அவள் குரலில் கெஞ்சுகின்ற பாவனையே இருக்காது. பிரயாணி

களின் முகத்தை ஏறிட்டுப் பார்ப்பாள். குழந்தைத் துடிப்பு அவள் நடையிலும் பேச்சிலும் தென்படும். கொடுத்ததை அநாயாசமாக வாங்கிக்கொண்டு தான் அழைத்து வந்த குருட்டுப் பையனிடம் போவாள். அந்தப் பையன் அவள் திரும்பும் வரை ஓரிடத்தில் நின்று பாடிக் கொண்டிருப்பான்.

இப்படி அந்தச் சிறுமியை ஒரு நாள் போலப் பல நாள் ரெயிலில் கண்டிருக்கிறேன். நான் இருப்பது காரமடையில்; எனக்கு உத்தியோகமோ கோயமுத்தூரில். அதனல் விடுமுறை நாட்கள் தவிர மற்ற நாட்களில் காலை ரெயிலில் கோவை செல்வதும், மாலை ரெயிலில் காரமடை திரும்புவதும் எனது வாழ்க்கை விதியாகப் போய்விட்டது. எனவே அப் பிச்சைக்காரச் சிறுமியை நான் அடிக்கடி பார்க்க முடிந்தது.

சில நாட்களுக்குள்ளாகவே எனக்கு அவளிடம் என்னை அறியாமல் ஒரு வாஞ்சை பிறக்கலாயிற்று. நான் அவளைக் காணும்போதெல்லாம் புன் முறுவல் செய்வேன்; காசும் கொடுப்பேனென்று சொல்லத் தேவையில்லை. அதனல் நாளடைவில் அவள் என்னிடம் தாராளமாகப் பேசிப் பழகலானள்.

கூட வருகின்ற அந்தக் குருட்டுப் பையன் யாரென்று ஒரு நாள் இவளைக் கேட்டேன்.

"அவன் எனக்கு அண்ணன்—மாரியாத்தா வந்து அவனுக்கு ரண்டு கண்ணும் போய்ட்டுது" என்ருள்.

"உங்களுக்குச் சோறு போட ஒருத்தரும் இல்லையா? ஏன் பிச்சை எடுக்கிறீர்கள் ?"

"எங்கம்மா செத்துப் போய்ட்டாள்; எங்கப்பா இருக்குறுரு. அவருக்கு வேலை செய்ய முடியாது."

"ஏன்? வயதாய்விட்டதா?"

"ஆமாம்-இத்தனை நாளாக் கூலிவேலை செய்து சம்பா திச்சார்; இப்போ கையிலாகாது சும்மா இருக்கிறுர்."

இப்படிச் சொல்லிக்கொண்டே அவள் போய் விட்டாள். அதிகம் பேசிக்கொண்டிருந்தால் அடுத்த ஸ்டேஷன் வருவதற்குள் எல்லோரிடமும் காசு கேட்க முடியுமா?

ஆனல் நான் அவளைக் காணும் போதெல்லாம் இப்படிச் சில வார்த்தைகளாவது பேசாமல் இருப்பதில்லை. நாங்கள் பேசும்போது அந்தப் பையன் குரல் கேட்கும் திசைப் பக்கமாகக் கூர்ந்து கவனித்துக்கொண்டே இருப் பான்.

அந்தச் சிறுமிக்கு ராதா என்று பெயரிட்டதும் நான் தான். ஒரு நாள் அவளும், நேத்திரமற்ற அவள் அண்ண னும் துடியலூர் ஸ்டேஷனில் நான் இருந்த ரெயில் வண்டிக் குள் ஏறினுர்கள். ரெயில் நகர ஆரம்பித்ததும் அந்தப் பையன், "கண்ணை யிழந்தவன் நீயோ நானோ?" என்று சோகங் கலந்த குரலில் பாட ஆரம்பித்தான். சிந்தாமணி என்ற பேசும் படம் மாதக் கணக்கில் காண்பிக்கப்பட்ட காலம் அது. அன்று நான் வேடிக்கையாக அச் சிறுமியை ராதாவென்று கூப்பிட்டேன். அது முதல் அந்தப் பெய ராலேயே அவளை அழைப்பது எனக்கு சகஜமாய்விட்டது.

அவளுக்குப் பெற்றோர்கள் வைத்த பெயர் என்னவோ நான் கேட்டுக்கொள்ளவே இல்லை. ராதா என்ற பெயர் எனக்கும் அவளுக்கும் திருப்தியளித்தது.

அதையே நிலைக்கச் செய்துவிட்டோம். கொஞ்ச நாட்களில் அந்தக் குருட்டுப் பையனுங்கூட அவளை ராதா என்றே அழைக்க ஆரம்பித்துவிட்டான்.

இப்படி நான்கு வருஷங்கள் சென்று விட்டன. ரெயில் வண்டி எனது வாழ்க்கையில் ஒரு முக்கிய அம்சமாகப் போய்விட்டது. காலையிலும் மாலையிலும் காப்பியில்லாவிட்டால் எப்படியோ அதுபோல எனக்கு இந்த ரெயில் பிரயாணம் இல்லாவிட்டால் இப்பொழுது என்னவோ மாதிரி இருக்கிறது. மேலும் ராதாவைக் கண்டு பேசுவதும் நான் தினமும் ஆவலோடு எதிர் பார்க்கும் ஒரு செய்கையாய் மாறிவிட்டது.

ஆனால் ராதா இப்பொழுது முன்போலத் தாராளமாக வந்து காசு கேட்பதில்லை. அவள் அந்தக் குருட்டுப் பையன் கையைப் பிடித்துக்கொண்டு வருவாள். அவன் தான் எல்லோரிடமும் காசுக்காகக் கையை நீட்டுவான். அவன் ஒரு குட்டிப் பிரசங்கம் ஒன்றையும் கற்றுக்கொண்டிருக்கிறான். "ஐயா, எனக்கு மாரியாத்தா வந்து ரண்டு கண்ணும் போய்விட்டது. என்னால் கூலி செய்து பிழைக்க முடியாது. பகவான் என்னை இப்படி என்ன பாவத்திற்காகவோ செய்துவிட்டார். ஆகையால் தாய்மார்களே, தகப்பன்மார்களே, இந்த ஏழைக் கண்ணில்லாத கபோதிக்குத் தருமம் செய்யவேணும். உங்கள் வாய்க்கு வெற்றிலை என் வயிற்றுக்குச் சோறு" என்று சொல்லிவிட்டுக் கும்பிடுவான். மக்கள் மனமிரங்கிக் காசு கொடுப்பார்கள்.

எனக்கு மட்டும் ராதா கையில் காசு கொடுப்பதில் தான் திருப்தி. எவ்வளவு சங்கோஜப்பட்டாலும் என்னிடம் ஒன்றிரண்டு வார்த்தைகள் பேசிவிட்டுத்தான் அவளும் போவாள்.

இப்படி ஒரு வருஷம் கழிந்துவிட்டது. மகா பயங்கரமான யுத்தம் உலகத்தைப் பிடிக்கத் தொடங்கிற்று. ரெயில்கள் பல நிறுத்தப்பட்டன. இப்பொழுது கோவை செல்லுவதற்குப் பகலில் ஒரே ரெயில்தான் உண்டு. அதனால் அதில் கூட்டம் சொல்லி முடியாது. பிச்சைக்காரர்களும் கூட்டத்திற்கு ஏற்றவாறு பெருகி விட்டார்கள். சில சமயங்களில் இரண்டு மூன்று பேர் ஒரே வண்டியில் ஏறிவிடுவார்கள். தடிப் பையன் ஒருவன் தன் வயிற்றிலேயே தாளம் போட்டுக்கொண்டு பிச்சை வாங்கத் தோன்றியிருக்கிறான். அவனைக் கண்டால் சிலர், "ஏண்டா, ஆள் வாட்டசாட்டமாய் இருக்கிறாய்; வேலை செய்து சம்பாதிக்கிறதற்கென்ன?" என்று விரட்டுவார்கள். இப்படி விரட்டுவதில் நானும் முக்கியப் பங்கெடுத்துக்கொண்டேன். "என்ன ஸார், இவனுக்கு என்ன கேடு? செக்குலக்கை மாதிரி இருக்கிறான். இவனுக்கெல்லாம் காசு கொடுப்பது தர்மமே ஆகாது. ஏதோ கூன் குருடாக இருந்தால் உதவி செய்வது நியாயம்" என்று எல்லோருக்கும் படும்படி பிரசங்கமும் செய்து விடுவேன்.

ஒரு நாள் ராதாவும் அவள் அண்ணனும் ஏறிய சமயத்திலேயே இந்த வயிற்றுத் தாளக்காரனும் நானிருந்த வண்டியில் நுழைந்துவிட்டான். அன்றைக்கு எனது பிரசங்கத்தின் பயனாக அந்தப் பயலுக்கு ஒரு தம்படி கூடக் கிடைக்கவில்லை. ராதாவுக்கு ஒவ்வொருவரும் காலணாவாவது கொடுத்தார்கள். எனக்கு அன்று வெகு சந்தோஷம். சாயங்காலம் வரையில் சீழ்க்கை அடித்துக் கொண்டே உற்சாகமாக வேலை செய்தேன்.

பிறகு சில நாட்களுக்கு ராதாவைக் காண முடியவில்லை. ஏன் அவள் வருவதில்லை என்று எனக்குள்ளே

ஒரு ஏக்கம் குடி புகலாயிற்று. திடீரென்று ஒரு நாள் அவள் தனியாக வந்தாள். ஆவலோடு அவளிடம் பேசினேன். "உன் அண்ணன் எங்கே?" என்று விசாரித்தேன். அவன் காலராக் கண்டு இறந்து விட்டதாகச் சொன்னாள். அவள் கண்களிலே நீர் ததும்பிற்று.

சில நாட்களில் மறுபடியும் அவள் மறைந்து விட்டாள். எங்கு போனாளோ என்ன நிலைமையில் இருக்கிறாளோ ஒன்றும் தெரிந்துகொள்ள முடியவில்லை. அவளுடைய இனிய குரல் மட்டும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டே இருந்தது.

மேலும் ஒரு மூன்று வருஷங்கள் இப்படி நழுவி விட்டன. இன்று திடீரென்று எதிர்பாராத வகையில் அவள் பாட்டைக் கேட்கவே எனக்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது. அதனால்தான் அவளருகே செல்ல நான் எல்லோரையும் தள்ளிக் கொண்டு சென்றேன். என் குரலை அவள் அறிந்து கொண்டாள்.

"ஆமாம், நீங்க ராதா, ராதா என்று கூப்பிடுவீர்களே அந்த ராதா நான் தான்" என்று கலக்கத்தோடு கூறினாள்.

அவளுடைய அழகான கண்களிலே இப்பொழுது ஒளியில்லை. அதே முகம்—இல்லை, இப்பொழுது அந்த முகத்தில் ஜீவகளையே இல்லை. அது வெறும் பொம்மையின் முகம்போல உணர்ச்சி யற்றுக் காணப்பட்டது. என் உள்ளத்திலே பலவகையான எண்ணங்கள் எழுந்து குமுறின.

"ராதா, உன் கண்கள் ஏன் இப்படியாய் விட்டன?" என்று குழறிக் குழறிக் கேட்டேன்.

அவள் பதில் பேசாமல் என்னவோ யோசித்துக் கொண்டிருந்தாள். ஒளியிழந்த கண்களிலிருந்து முத்துப்

போல இரண்டு துளிகள் பிதுங்கின. பேச்சை மாற்றலா மென்று நினைத்து நான், "யார் உன்னோடு வந்திருக்கும் கிழவன்? அவனுக்கு வயது ரொம்ப ஆகியிருக்கும் போல் இருக்கிறதே?" என்று இப்படிப் பல கேள்விகள் கேட்டேன்.

ஜன நெருக்கத்திலே நாங்கள் நின்று பேசிக்கொண்டிருப்பது பலருக்குப் பெரிய சிரமமாகத் தோன்றியது. அவர்கள் சத்தம்போட ஆரம்பித்தார்கள்.

"கோயமுத்தூர் போய் வேண்டுமானால் பேசிக் கொள்ளலாம்" என்று அவள் நகர்ந்து விட்டாள். நான் அப்படியே ஸ்தம்பித்து நின்றுகொண்டிருந்தேன். வடக்குக் கோயமுத்தூர் ஸ்டேஷனில் வந்து ஏறிய ஒரு பிச்சைக்காரியை யாரோ அதட்டும் சப்தம் மட்டும் என் காதில் குரூரமாக வந்து புகுந்தது.

'ஏன் இப்படிப் பிச்சை எடுத்துக்கொண்டு திரிகிறாய்? உனக்கென்ன கால் இல்லையா, கை இல்லையா? நாலு வீட்டிலே பத்துத் தேச்சுக் கொடுத்தாலும் வயிறு வளர்க்கலாமே?" என்றார் அவர். அந்தப் பிச்சைக்காரி மற்றவர்களைப்போலப் பேசாமலிருந்து விடவில்லை. நல்ல வாயாடி போலிருக்கிறது. "ஏய்யா, இஷ்டமிருந்தால் ஒரு தம்பிடி கொடுங்கோ, இல்லாவிட்டால் பேசாமெ இருங்கோ, உங்களை யோசனை கேட்கவா நான் வந்திருக்கிறேன்?" என்று சட்டென்று பதில் கூறிவிட்டாள்.

இந்த வார்த்தைகளைச் சிந்தித்துக்கொண்டேயிருந்தேன். ரெயிலும் கோவை ஜங்ஷனுக்கு வந்து நின்றது. நான் அவசரம் அவசரமாகக் கீழே இறங்கி ராதாவைத் தேடிக்கொண்டு போனேன்.

முதலிலேயே கண் போனதைப்பற்றிக் கேட்க எனக்கு ஆவலாக இருந்தாலும் துணிவு உண்டாகவில்லை. ராதாவுக்கு அதிக விசனத்தைக் கொடுக்கக்கூடாது என்று எண்ணிக்கொண்டு மெதுவாக, "இந்தத் தள்ளாத கிழவர் யார்?" என்று கேட்டேன்.

"இவர்தான் என் தகப்பனார். முன்பெல்லாம் இவர் குடிசையைவிட்டு வெளியிலேயே வரமாட்டார். சக்தியிருக்கும் வரையில் கூலி ஜீவனம் செய்து எங்களைக் காப்பாற்றினார். பிறகு சக்தியில்லாமல் போகவே குடிசையிலேயே இருந்தார். பிச்சை எடுப்பது ரொம்பக் கேவலம் என்று அதை வெறுத்து வந்தார். ஆனால் என்ன செய்வது? என் அண்ணனும் இறந்து போனான். பிறகு வயிற்றுப் பிழைப்புக்கு ஏதாவது செய்ய வேண்டுமே?"

"ராதா, உனக்கு....ம்...உன்னுடைய கண் எப்படி இப்படியாச்சு?"

"கண்ணா........அது ஒரு சிப்பாய் எனக்குச் செய்த உபகாரம்."

"உபகாரமா!"

"ஆமாம். கண்ணிருந்தபோது எனக்கு ஒரு காலணா தருமம் செய்வதென்றாலும் ஜனங்களுக்கு அவ்வளவு பிரியமாயிருக்கவில்லை. இப்போ எல்லோரும் பாவம் குருடி என்று இரக்கப்பட்டுக் காசு கொடுக்கிறார்கள். அதனால் கண்ணைப் போக்கியது உபகாரந்தானே ? பிச்சைக்காரிக்குக் கண் இருந்து என்ன பிரயோசனம்?"

"ஐயையோ, அப்படி நினைக்கலாமா? கண் இருந்தால் ஏதாவது வேலை செய்து பிழைக்கலாமே?"

"ஆமாம், எல்லோரும் அப்படித்தான் சொல்லு கிறார்கள். ஆனால் வேலைக்குப் போய்ப் பார்த்தாலல்லவா அந்தக் கஷ்டம் தெரியும்? அதிலும் சிறு வயது முதற் கொண்டு பிச்சை வாங்கி வயிறு வளர்த்துக்கொண்டு யதேச்சையாகத் திரிந்தவர்களுக்கு அதைப் போலக் கஷ்ட மானது வேறொன்றுமே இல்லை. நானும் வேலை செய்து ஜீவனம் பண்ணலாமென்றுதான் முயற்சி செய்தேன். பணக்காரர் என்ன வைதாலும் பேசினாலும் சரி என்று பொறுத்துக்கொண்டு அவர்கள் வீட்டில் வேலை செய்து வந்தேன். சொல்ப சம்பளத்திற்காக அவர்கள் வேலைக் காரர்களைச் சக்கையாய்ப் பிழிவது எனக்கு வெறுப்பாக இருந்தது. இருந்தாலும் அதைச் சகித்துக்கொண்டுதான் காலந் தள்ள நினைத்தேன். ஆனால் திக்கற்றவர்களுக்கும் மானம் உண்டு. இந்த உலகத்திலே என் போன்றவர்கள் மானத்தோடு வாழவே முடியாதுபோல் இருக்கிறது. நானும் இந்த மூன்று வருஷங்களாகவே என்ன என்னமோ வேலை செய்து பார்த்துவிட்டேன். எங்கே போனாலும் என்னை இந்த மனிதர்கள் சுலபமான பொருளாக நினைத் தார்கள். குரல் நன்றாயிருப்பதால் சினிமாவில் சேரலாம் என்று சிலர் சொன்னார்கள். அங்கேயுள்ள வாழ்க்கை மகா கேவலமாக எனக்குத் தெரிந்தது. அதனால் அதையும் விட்டு விட்டேன். எனக்கு இந்த உலகத்திலே வாழவேண்டுமென்ற ஆசையே அற்றுப்போய்விட்டது. என் தகப்பனார் தமது தள்ளாத காலத்தில் கஞ்சியில் லாது சாகக் கூடாது என்ற ஒரே நோக்கத்தால்தான் இப்பொழுது இந்த உயிரை வைத்துக்கொண்டிருக் கிறேன்."

"மறுபடியும் இந்தத் தொழிலுக்கு ஏன் வந்தாய்?"

"பிச்சை எடுப்பதுதான் எனக்கு மேல் என்று தோன்றுகிறது. கிடைத்ததைக்கொண்டு சுயேச்சையாகக் காலந் தள்ளலாம். ஒருவருடைய பேச்சுக்கும் இஷ்டத் திற்கும் ஆளாக வேண்டியதில்லை."

வாழ்க்கையில் அடைந்த கஷ்டங்களாலும், ஏமாற்றங் களாலும் அவள் இவ்வாறு பேசுகிறாள் என்பதை நான் உணர்ந்தேன். பிறகு மெதுவாக, "உன் கண்களை ஏன் அந்தச் சிப்பாய் போக்கினான்?" என்று கேட்டேன். அவள் பதில் சொல்லச் சிறிது தயங்கினாள். என் குரலில் நடுக்கமும் சோகமும் இருப்பதை அவள் கண்டு கொண் டாள்போலிருக்கிறது. ஆனால் சற்று யோசித்துவிட்டு மறுமொழி சொல்லலானாள்.

"அவன் என்னைப் பலவந்தப்படுத்த ஆரம்பித்தான். கைத்துப்பாக்கியை நீட்டிப் பயங்காட்டினான். நான் அவ னோடு போராடவேண்டியதாயிற்று. குடிவெறியில் இருந்த மையால் அவனை என்னால் ஒருவாறு சமாளிக்க முடிந்தது. ஆனால் நான் திமிறித் தப்பிக்க முயலும்போது அவன் கையில் இருந்த துப்பாக்கி வெடித்துவிட்டது. குண்டு போடாத தோட்டாவானதால் உயிர் போகவில்லை என்று ஆஸ்பத்திரி டாக்டர்கள் பேசிக்கொண்டார்கள். ஆனால் என் கண்கள் போய்விட்டன."

இதைக் கேட்கும்போது என் தலை சுற்ற ஆரம் பித்தது. உள்ளத்தை யாரோ இறுக்கிப் பிழிவதுபோல இருந்தது. அப்படியே தூண் போல நின்றுகொண்டிருந் தேன். ராதா மேலும் பேசினாளோ என்னவோ, என் காதில் ஒன்றும் விழவில்லை. நான் உணர்வுற்றுச் சுற்றி லும் பார்க்கும்போது அவளைக் காணோம்.

# தூரப் பிரயாணம்

"எங்கே சடையனைக் காணவே இல்லையே?"

"யார் கண்டா? நேத்து ராத்திரி வேலைக்காரி கூப்பிட்டுப் பார்த்தாள். வரவே யில்லை. காலையில்கூடத் தேடினாள், காணோம்."

"காலையிலே கூப்பிட்டுப் பார்த்தீர்களா?"

"ஆமாம், பின்னே பார்க்காமலா சொல்றேன்?" என்று கொஞ்சம் பிகுவாக என் மனைவி பதிலளித்தாள்.

எனக்கு அவளுடைய பதில் அவ்வளவு திருப்தியளிக்கவில்லை. அதனால் உடனே வேலைக்காரியை அழைத்து விசாரித்தேன். அவளும் அதே மாதிரிதான் பதில் சொன்னாள்.

நான் வேலைக்காரியை விசாரித்தது என் மனைவிக்குப் பிடிக்கவில்லை. "நான் சொன்னா உங்களுக்கு நம்பிக்கை கிடையாது; இப்போ சரிதானே? அந்தச் சனியன் எங்கே பிரயாணம் போச்சோ யார் கண்டா?"

அவள் வார்த்தை என் உள்ளத்தில் ஆழ்ந்து தாக்கியது. மறதியென்னும் அந்தகாரச் சலதியிலே மெதுவாக முழுகிக்கொண்டிருந்த சம்பவங்களையெல்லாம் கொந்தளிப்புடன் மேல் வரச் செய்துவிட்டது.

இன்றல்ல; ஐந்து வருஷமாகிவிட்டது. எனது ராஜாமணி........ஆமாம், அன்று நடந்த சம்பவங்களையெல்லாம் இப்பொழுது நடப்பனபோல் என் மனக் கண் முன்பு தோன்றச் செய்துவிட்டது அவள் பேச்சு.

இதோ என் ராஜாமணி சடையனைக் கூவிக் கொண்டு துள்ளி ஓடி வருகிறான்.

"சடையா, சடையா—வாடா போகலாம்." அவன் குரல் கணீரென்று ஒலிக்கிறது. சடையன் வாலை ஆட்டிக் கொண்டு ஒரே பாய்ச்சலில் ராஜாமணியின் பக்கத்தில் வந்து அவனைச் சுற்றிச் சுற்றி ஓடியாடித் தனது சந்தோஷத்தைத் தெரிவிக்கிறது.

ராஜாமணியும் வெளியே புறப்பட ஆத்திரப்பட்டுக் கொண்டிருக்கிறான். ஷர்ட்டைப் போட்டுக்கொள்ள ஒரு நிமிஷம் நிற்கவும் அவனால் முடியவில்லை. அவசர அவசரமாக அதையணிந்துகொண்டே கிளம்பினான்.

"ராஜா எங்கே புறப்படுகிறாய்?"

"அப்பா, நாங்கள் பிரயாணம் போறோம்".

"எங்கேடா போகிறாய்? பள்ளிக்கூடம் இல்லாவிட்டால் காலையிலிருந்து ஊர் சுற்ற ஆரம்பித்து விடுகிறாயே?"

"இல்லையப்பா, வாரத்திலே ஒரு நாளாவது வெளியே போகவேண்டாமா? வீட்டிலேயே இருந்தால் எனக்கு எப்படியோ இருக்கிறது".

"சின்னம்மாவிடம் சொல்லிவிட்டுப் போடா, போய் விட்டு சீக்கிரம் வந்துவிடு."

எனது அனுமதி கிடைத்ததே போதும் அவனுக்கு. "சின்னம்மாவிடம் நீயே சொல்லப்பா; நான் மாட்டேன்" என்று கூறிவிட்டு ஒரே ஓட்டமாய் ராஜாமணி மறைந்து விட்டான்! சடையன் அவனுக்கு முன்னாலே பாய்ந்தது.

தாயில்லாத பிள்ளை. சின்னம்மாவிடம் அவனுக்குப் பற்றுதல் ஏற்படவில்லை. சிறு குழந்தையாக இருந்திருந்தால் ஒரு வேளை தன் தாயின் ஞாபகம் மறந்திருக்குமோ

என்னவோ. நான் இரண்டாவது கல்யாணம் செய்து கொள்கிறபோது ராஜாமணிக்கு எட்டு வயது. கல்யாண மாகியும் இரண்டு வருஷங்களாய்விட்டன. இன்னும் அவன் ஏக்கங்கொண்டே இருக்கிறான். தாயின் உடலை மயானத்திற்கு எடுத்துக்கொண்டு போனபோது வாடிய அவன் முகம் அடிக்கடி அதே வாட்டத்தோடு காணப் படுகிறது. சடையனோடு விளையாடும்போதும், அதைக் கூட் டிக்கொண்டு வெளியே புறப்படும்போதுந்தான் அவன் முகத்தில் உண்மையான மகிழ்ச்சி பிரகாசிக்கின்றது. என் னுடன் கொஞ்சும்போதும் சிரித்துக்கொண்டுதானிருக்கி றான். ஆனால் அவன் தன் சிற்றன்னையின் முன்னிலையில் இருக்கும்போது எதையோ இழந்துவிட்டவன் போலக் காணப்படுகிறான்; முகத்தில் புன்னகையே தோன்றுவ தில்லை.

மத்தியான்னம் ஒரு மணியாகிவிட்டது; இன்னும் ராஜாமணி திரும்பி வரவில்லை. "உங்கள் பையனுக்கு நீங் கள் கொடுக்கிற செல்லம் பார்த்தீர்களா? நாயைக் கூட்டிக் கொண்டு போனவன் இன்னும் வரவில்லை. இனிமேல் வந்து சாப்பிட்டால் உடம்பு இளைத்துப்போகாமல் என்ன செய்யும்? நேரத்திற்கு நேரம் சாப்பிடாமல் இப்படியே சுற்றுகிறான்; பிறகு நான் கவனிக்கவில்லையென்றால் என்ன செய்வது? பையனைக் கொஞ்சம் மிரட்டி வைத்திருந்தால் இப்படியெல்லாம் இருப்பானா? நான் சொன்னால் மட்டும், 'உனக்கென்ன தெரியும் பிள்ளை அருமை?' என்பீர்கள்" என்று என் மனைவி நீட்டினாள்.

ராஜாமணியின் மேல் எனக்குக்கூடச் சிறிது கோபந் தான். அதனால் அவன் திரும்பி வந்ததும் அவன் மேல் அவள் சீறிவிழுந்ததை நான் மௌனமாக விட்டுவிட்டேன்.

"எங்கேடா போனாய் இவ்வளவு நேரம்?" என்று கடிந்தாள் அவள்.

"நாங்கள் பிரயாணம் போனோம்," என்று வெளியில் மனம் போனபடி சுற்றி வந்த குதூகலத்தில் அவன் சிற்றன்னையிடமும் கொஞ்சின மாதிரி பேசினான்.

"ஓகோ பிரயாணமா? இவ்வளவு நேரம் எங்கேயோ நாய் போலத் திரிந்துவிட்டுப் பேசறதைப் பாரு" என்று அவன் கன்னத்தில் பளீர் பளீரென்று இரண்டு அறை கொடுத்துவிட்டாள்.

நான் அதை எதிர்பார்க்கவே இல்லை. திடீரென்று அவள் செய்த காரியமும், ராஜாமணியின் மேலிருந்த சிறிது கோபமும் என்னை உடனே குழந்தைக்குத் தேறுதல் சொல்லுவதிலிருந்து தடுத்துவிட்டன. சடையன் தான் அவனை உற்றுப் பார்த்து உறுமிவிட்டு ராஜாமணியிடம் சென்று வாலையாட்டித் தன் அநுதாபத்தையும் அன்பையும் தெரிவித்தது. ராஜாமணி அப்படியே திகைத்துப்போய் உட்கார்ந்துவிட்டான். வேறு குழந்தைகளைப் போல அவன் அழவே இல்லை. அழுதிருந்தால் அவன் துக்கம் ஆறியிருக்குமோ என்னவோ?

இந்நாள் வரையில் அவன் மேனியில் ஓர் அடி பட்டதில்லை. அவன் தாய் ஒரு கடுஞ்சொல் கூடக் கூறியிருக்கமாட்டாள். சிற்றன்னையும் இதுவரை கையால் தொட்டது கிடையாது. அவள் பார்வை யொன்றிலேயே ராஜாமணி பயந்து கிடப்பான்.

அவன் அப்படியே அசையாமல் உட்கார்ந்திருந்தான். சடையன் அவன் முகத்தை நக்கித் தேறுதல் சொன்னது. அதை மெதுவாக ராஜாமணி அணைத்துக்கொண்டான்.

நான் அழைத்தபோது கூட அவன் எழுந்திருக்கவில்லை. சாப்பிடவும் மறுத்துவிட்டான்.

மறுநாள் என் மனைவி சாமர்த்தியமாக ஒரு காரியம் செய்தாள். சடையனை யாரிடமோ பிடித்துக் கொடுத்தனுப்பிவிட்டாள். அது வீட்டிலிருப்பதால்தான் ராஜாமணி கெட்டுப் போகிறான் என்று அவள் எண்ணிக்கொண்டிருந்தாள்.

சடையனும் இல்லாமற்போகவே ராஜாமணியின் உள்ளம் நொறுங்கிவிட்டது. அவனுக்கு வாழ்க்கையில் மகிழ்ச்சியளித்துவந்த ஓருயிரும் இப்பொழுது அவனுடன் இல்லை. சிற்றன்னை அடித்ததை மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தேனென்றோ என்னவோ, அவனுக்கு என்னிடமும் பிரியம் விட்டுவிட்டது. அவன் உள்ளத்திலே ஏற்பட்ட குமுறலாலோ அல்லது என் மனைவி கூறியபடி கண்டபடி சுற்றியதாலோ திடீரென்று ராஜாமணிக்குச் சளிக் காய்ச்சல் கண்டது. மூன்று நாட்கள் அவன் வாயில் ஜலங்கூட ஊற்றவில்லை. நல்ல நினைவே உண்டாகாமல் பிதற்றிக்கொண்டே படுத்திருந்தான். அடிக்கடி "சடையா, எங்கே போய்விட்டாய்? வா, தூரப் பிரயாணம் போகலாம்" என்று கூவினான்.

அவன் கூப்பிடுவது சடையனுக்கு எப்படிக் கேட்டதோ தெரியவில்லை. மூன்றும் நாளன்று மாலையில் எங்கிருந்தோ சடையன் வந்துவிட்டது. வந்ததும் அது ராஜாமணி படுத்திருந்த கட்டிலில் தனது முன்னங் கால்களை வைத்து அவனை ஆவலோடு பார்த்தது. வாலைக் குழைத்தும் பல விதமான சப்தங்கள் செய்தும் தனது உள்ள உணர்ச்சிகளை வெளிப்படுத்தியது. ராஜாமணி அதை அன்போடு தடவிக் கொடுத்தான். பிறகு கண்களை

மூடிக்கொண்டே, "சடையா, வா நாம் தூரப் பிரயாணம் போகலாம்" என்று கொஞ்சி மொழிந்தான்.

சடையன் வழக்கம்போலத் துள்ளிக் குதித்து முன்னால் புறப்பட்டது. கதவண்டை சென்றதும் பின்னால் ராஜாமணி வராமையால் நின்று அவனை வரும்படி கூப்பிடுவதுபோல் பார்த்தது.

ராஜாமணி கட்டிலை விட்டு எழுந்திருக்கவே இல்லை. வேறு பேச்சுப் பேசவும் இல்லை. என்னைத் தவிக்க வைத்துவிட்டுத் தூரப் பிரயாணம் போய்விட்டான்.

இடுகாட்டில் அவனைக் குழிக்குள் வைக்கும் வரையில் சடையன் பக்கத்திலேயே இருந்தது. எல்லோரும் திரும்புகின்றபோது கூட அதற்கு அந்த இடத்தை விட்டு வர இஷ்டமில்லை. நான்தான் அதை வலியப் பிடித்து இழுத்துக்கொண்டு வந்தேன்.

இச்சம்பவங்களெல்லாம் சலனப் படக் காட்சி போன்று என் முன்பு தோன்றி மறைந்தன.

ராஜாமணி பிரிந்தது முதல் மறுபடியும் சடையன் எங்கள் வீட்டிலேயே இருந்தது. இப்பொழுது திடீரென்று அதைக் காணவில்லை யென்பதால் எனக்குப் பழைய வருத்தம் தோன்றலாயிற்று. எண்ணமிட்டுக் கொண்டே உட்கார்ந்திருந்தேன்.

சட்டென்று ஒரு புது யோசனை என் மனத்தில் ஓடிற்று. ராஜாமணியைப் புதைத்த இடுகாட்டிற்குச் சடையன் ஒரு சமயம் போயிருக்குமா? ஒரு சமயம் அவனை நினைத்துக்கொண்டு சென்றிருக்கலாமல்லவா? இவ்வெண்ணத்திற்கு ஒருவிதமான ஆதாரமும் இருப்பதாகத் தெரியவில்லை. ஐந்து வருஷங்களுக்கு முன்னால்

நடந்த சம்பவத்தை இன்னுமா அந்த நாய் நினைத்துக் கொண்டிருக்கப் போகிறது? நானே மெதுவாக அவனை மறந்துகொண்டிருக்கிறேனே!

இருந்தாலும் அந்த எண்ணம் என் உள்ளத்தில் எப்படியோ நிலைத்து வலிமை பெற்றுக் கொண்டிருந்தது கடைசியாக இடுகாடு சென்று பார்த்துவிடலாமென்றே தீர்மானம் செய்து கொண்டு புறப்பட்டேன்.

ராஜாமணியைப் புதைத்த அதே இடத்தில் சடையன் படுத்திருந்தது. தூரத்தில் போகும்போதே அதைக் கண்டு நான் கூப்பிட்டேன். ஆனால் அது எழுந்து வரவில்லை. ஆழ்ந்த நித்திரையிலிருப்பதுபோல் காணப்பட்டது. சற்று அருகே சென்று அழைத்தேன். அசைவே இல்லை. ஒரு வேளை பசி மயக்கமாக இருக்கலாமோ?

அருகில் சென்று உற்று நோக்கினேன். சடையனும் தூரப் பிரயாணம் போய்விட்டது. ராஜாமணி வந்து அதைக் கூட்டிக்கொண்டு போயிருக்கவேண்டும். இல்லாவிட்டால் அது அவனைப் புதைத்த இடத்திற்கு வந்திருக்காது. இருவரும் இப்பொழுது சதா இன்பத்தோடு விளையாடிக்கொண்டிருக்கிறார்களென்று நம்புகிறேன்.

# தந்தை சொல்

"காதலாவது மண்ணாங்கட்டியாவது? இதெல்லாம் சுத்த முட்டாள் தனம்" என்றார் ஒரு வழுக்கைத் தலையர்.

"நாம் சொன்னால் யார் கேட்கிறார்கள்? இந்தக் காலத்துப் பையன்களுக்கு நம் பேச்சு ஏற்கிறதா என்ன?" என்று பதில் கொடுத்தார் ஒரு தொந்திக்காரர்.

"இந்தச் சினிமா வந்ததிலிருந்து பையன்களே கெட்டுக் குட்டிச்சுவராகப் போய்விட்டார்கள்" என்றார் வழுக்கைத் தலையர், தலையைத் தடவிக்கொண்டே.

"பையன்கள் மட்டுமா? பெண்களுந்தான்" என்று எதிரொலித்தார் மற்றவர்.

"காலங் கெட்டு எல்லாம் தலைகீழாய் நடக்கிறது" என்று பெருமூச்சுவிட்டார் முன்னவர்.

இரண்டு மனிதர்களும் காவிரி ஆற்றங்கரையிலே வெண்மணல் மேட்டிலே உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கிறார்கள். இருவரும் எதிர்வீட்டுக்காரர்கள்; நீண்ட நாள் நண்பர்கள். மாலையிலே உலாவுவதற்காக இருவரும் சோடியாகப் புறப்படுவார்கள். காவிரியாற்றங்கரையில் கால் சலிக்கும்வரை நடந்துவிட்டுக் கடைசியாக அந்த மணல் மேட்டிலே வந்து உட்கார்ந்து பேசிக்கொண்டிருப்பார்கள். அம் மணல்மேடு அவர்களுடைய குடும்ப ரகசியங்களையும் இன்ப துன்பங்களையும் தினமும் கேட்டிருக்கிறது. அவர்களுக்குள்ளே ஒளிவு மறைவு என்பது கிடையாது; தாராளமாக எல்லா விஷயங்களைப் பற்றியும் பேசுவார்கள்.

இருவருக்கும் பூஸ்திதி உண்டு. ஆனால் சொந்தமாக அவர்கள் விவசாயம் செய்வதில்லை. நிலங்களை எல்லாம் குத்தகைக்கு விட்டு விட்டுச் சுகமாகக் காலங் கழித்துக் கொண்டிருக்கிறார்கள். நல்ல வருமானம் வருவதால் அவர்களுக்குக் குடும்ப நிர்வாக சம்பந்தமாக யாதொரு கவலையும் இல்லை.

கொடுமுடியைப்பற்றி அநேகமாகத் தமிழ்நாட்டார் அனைவருக்கும் தெரிந்திருக்கும். காவிரிக் கரையிலே அமைந்துள்ளது. அங்குத்தான் அவர்கள் இருவரும் தங்களுக்குப் பிதுரார்ச்சிதமாகக் கிடைத்த பழைய வீடுகளிலே வாழ்க்கை நடத்தி வந்தார்கள்.

முதலில் இந்தக் காதல் பேச்சை ஆரம்பித்தவருக்கு ஒரு மகனுண்டு. அவனுக்கு ஒரு நல்ல செல்வர் வீட்டிலே பெண் பார்த்துக் கல்யாணம் செய்துவிட வேண்டுமென்பது அவருடைய ஆசை. ஆனால் மகன் அவருடைய எண்ணத்திற்கு இணங்கவில்லை. அவன் யாரோ தனக்கு விருப்பமான ஒரு பெண்ணை மணந்து கொள்ள வேண்டுமென்று சொல்லிக்கொண்டிருக்கிறான். தந்தை எவ்வளவு வற்புறுத்தியும் அவன் அவருடைய ஆசைக்கு இணங்க மறுத்துவிட்டான். அதனால்தான் அவர் மனமுடைந்து தம் நண்பரிடம் அதைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார்.

“நம் அந்தஸ்துக்குத் தக்கபடி நல்ல குடும்பத்திலே கல்யாணம் செய்யவேண்டாமா?” என்றார் அவர்.

“நகை நட்டு, சீர் சிறப்பெல்லாம் தாராளமாகச் செய்கிற வீடாகப் பார்த்துத்தான் கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்யவேணும்” என்றார் அவர் நண்பர்.

"இந்தக் காலத்திலே பணந்தான் பிரதானம்; பணமில்லாது போனால் நாய்கூட மதிக்காது" என்று வழுக்கைத் தலையர் தம் உள்ளக் கருத்தை வெளியிட்டார்.

"உலக அநுபவம் பணத்தை நாடுகிறது; இளமை காதலை நாடுகிறது" என்று இந்தச் சமயத்திலே யாரோ ஒருவர் தமக்குத் தாமே சொல்லிக்கொண்டார்.

நண்பர்கள் இருவரும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தார்கள். அவர்களுக்குப் பக்கத்திலேயே மணல் பரப்பிலே ஒரு புது மனிதர் அமர்ந்திருந்தார். தங்கள் பேச்சிலேயே முழுகியிருந்தபடியால் இவர்கள் அவர் வந்ததைக் கவனிக்கவில்லை. அவரைப் பார்த்ததும் இவர்கள் தங்கள் பேச்சைச் சற்று நேரம் அப்படியே நிறுத்திக் கொண்டார்கள். அதை யறிந்த புதியவர், "நான் இங்கே இருப்பதனால் உங்களுக்கு ஏதாவது இடைஞ்சலாக இருக்கிறதோ?" என்று கேட்டார்.

"அப்படி ஒன்றும் நாங்கள் ரகசியம் பேசவில்லை" என்றார் வழுக்கைத் தலையர்.

"நீங்கள் யோசிக்கிற மாதிரிதான் நானும் ஒருநாள் யோசித்துக் கொண்டிருந்தேன். நான் அன்றைக்குச் செய்த தீர்மானம் என் வாழ்க்கையையே கெடுத்து விட்டது" என்று அந்தப் பெரியவர் பெருமூச்சுவிட்டார். சுருக்கு விழுந்து உலர்ந்திருந்த அவர் முகத்தில் தீராத துன்பத்தின் சாயல் நன்கு படிந்திருந்தது. வெளுத்துப் போயிருந்த அவர் தலை ஊசிக்கட்டைப் புல் முளைத்த பாழுங் காடுபோலத் தோன்றிற்று.

நண்பர்கள் இருவருக்கும் அவருடன் பேசி விஷயம் முழுவதையும் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டுமென்ற ஆசையுண்டாயிற்று.

"உங்கள் மகனும் சொல் பேச்சுக் கேட்காமல் இருந்தானா என்ன?" என்று கேட்டார் வழக்கைத் தலையர்.

"என் பேச்சைக் கேட்டுத்தான் இந்தக் கதி நேர்ந்தது. தந்தை சொல்லைத் தட்டப்படாதென்று நினைப்பது கூடச் சில சமயங்களில் துன்பமாய் முடிகிறது" என்றார் புதியவர்.

"உங்கள் மகனுடைய வாழ்க்கையைப்பற்றிக் கொஞ்சம் விவரமாய்ச் சொன்னால் இந்தச் சமயத்திலே மிகவும் அநுகூலமாக இருக்கும். என் சிநேகிதர் தம் மகனுடைய கல்யாண விஷயத்தைப்பற்றி நிச்சயமாக ஒருவித முடிவும் செய்ய இயலாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்" என்று தொந்திக்காரர் கேட்டுக்கொண்டார்.

புதியவர் சிறிதும் தயக்கமில்லாமல் பேசலானார். மற்றவர்களிடம் தமது விருத்தாந்தத்தைச் சொல்லுவதனாலேயே அவருக்குச் சற்று ஆறுதல் கிடைத்ததுபோலும்.

"என் மகன் ரங்கசாமியை மிகவும் நல்ல பிள்ளை என்று எல்லோரும் சொல்லுவார்கள்; தந்தை சொல்லைத் தட்டாதவனென்று புகழ்ந்து பேசுவார்கள். என் சொல்லுக்கு எவ்வளவு தூரம் அவன் கட்டுப் பட்டிருந்தான் என்பது மற்றவர்களுக்கு அதிகமாகத் தெரியாது. தனது வாழ்க்கையைவிட எனது வார்த்தையே பெரிதென்று அவன் மதித்திருந்தான் என்பது எனக்குத்தான் தெரியும்.

"எனக்கு அவன் ஒரே மகன். அவனைச் சுற்றித்தான் எனது முதுமைப் பருவத்தின் இன்பம் முளைவிட்டுக் கொண்டிருந்தது. அவனுடைய பிற்கால வாழ்க்கைக்காக நான் எத்தனையோ மனக்கோட்டைகள் கட்டியிருந்

தேன். அவையெல்லாம் ஒரே கணத்தில் இடிந்து போகு மென்று எதிர்பார்க்கவே இல்லை. என் மகன் என் பேச்சுக்கு மாறாக நடக்கமாட்டான்; நான் போட்ட திட்டப் படியே எதிர்காலம் உருவாகும் என்று நான் மமதை கொண்டிருந்தேன்." இவ்வாறு கூறிவிட்டு உணர்ச்சி மிகுதி யால் அவர் மௌனமாக வீற்றிருந்தார்.

நண்பர்களுக்கு முழு வரலாற்றையும் தெரிந்து கொள்ள வேண்டுமென்று ஆசை அதிகமாகிவிட்டது. "ரங்கசாமியைப்பற்றி விரிவாகச் சொல்லுங்கள்" என்று இருவரும் ஏகோபித்துக் கேட்டார்கள்.

அந்த மனிதர் மறுபடியும் தொடங்கினார்:

"எனக்குச் சொத்து அதிகம் இல்லை. இருந்தாலும் சிரமத்தைப் பாராமல் ரங்கசாமியைச் சென்னைக்கு அனுப்பிக் கல்லூரியில் படிக்க வைத்தேன். எப்படியோ கஷ்டப் பட்டு நான்கு வருஷம் படிக்க வைத்துவிட்டால் பின்னால் சுகப்படலாம் என்று நான் எண்ணியிருந்தேன். அவனும் கெட்டிக்காரனாதலால் சிறப்பாகத் தேர்ச்சி யடைந்து அரசாங்க உபகாரச் சம்பளமும் பெற்று பி. ஏ. வகுப் பிற்கு வந்துவிட்டான். அதில் இரண்டாவது வருஷம் தொடங்கி மூன்று மாதங்களானதும் அவனுடைய கல்யாணப் பேச்சு ஆரம்பித்துவிட்டது.

"என் சொந்த ஊருக்குப் பக்கத்திலேயே வேறொரு சிற்றூர் இருக்கிறது. அங்கே நல்ல ஸ்திதி படைத்த ஒருவர் வாழ்ந்து வருகிறார். அவருக்கு ஒரே மகள்தான் உண்டு. படித்த பையனைப் பார்த்து அவளை மணம் செய்து வைக்கவேண்டுமென்று அவருக்கு ஆசை. எங்க

ளிலே படித்தவர்கள் மிக அருமை. அதனால் அவர் எனது சாதாரண நிலையையும் பொருட்படுத்தாது என் மகனுக்குப் பெண் கொடுக்க விரும்புவதாக ஒரு பந்து வின் மூலம் குறிப்பாகச் சொல்லியனுப்பினார். எனக்கு அவருடைய செல்வத்திலே இச்சை பிறந்துவிட்டது. எதிர்பாராமல் வலியக் கிடைக்கவிருக்கும் ஸ்ரீதேவியைத் தள்ள மனம் வருமா? அவர் மகளை என் மகனுக்கு மணம் செய்துகொண்டால் அவருடைய சொத்து முழு வதும் எங்களுடையதாகிவிடும். பெண்ணும் நல்ல அழகும் குணமும் உள்ளவள் என்று தெரிந்துகொண்டேன். ஆகையால் அந்த ஏற்பாட்டிற்கு உடன்பட்டேன். அது பற்றி என் மகனுக்கும் உடனே எழுதினேன். நான் எதிர்பார்த்தபடி அவன் அந்தக் கல்யாணத்திற்கு மகிழ்ச்சி யோடு இணங்கவில்லை. கல்யாணத்திற்கு அவசரம் ஒன்றும் இல்லை யென்றும், ஒருவனுடைய வாழ்க்கையிலேயே கடைசிநாள்வரையிலும் பங்கெடுத்துக் கொள்ளுகிறவளைத் தேர்ந்தெடுப்பதில் நிதானம் வேண்டுமென்றும், பணத்தை நினைத்து முடிவு செய்யக்கூடாதென்றும் அவன் எனக்குக் கடிதம் எழுதினான். அன்று முதல் அவன் எழுதிய ஒவ் வொரு கடிதத்தையும் நான் என்னுடனேயே வைத்திருக் கிறேன். அவற்றை ஒவ்வொன்றாக உங்களுக்குப் பொருத்த மான இடத்தில் படித்துக் காண்பிக்கிறேன். நான் சொல்லுவதைவிட என் மகனுடைய உள்ளத்தை அக் கடிதங்கள் நன்றாக எடுத்துக் காட்டும்" என்று சொல்லி விட்டு அவர் தம் சட்டைப் பையில் நன்றாகக் கட்டிவைத் திருந்த ஒரு காகிதக் கட்டை எடுத்தார். அதிலிருந்து ஒரு கடிதத்தை ஜாக்கிரதையாகத் தேடி எடுத்து வாசிக்கலானார்.

'அன்பு மிக்க தந்தை அவர்களுக்கு,

எனது பணிவுள்ள வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். தங்கள் திருபம் கிடைத்து விஷயம் தெரிந்தேன். நான் இன்னும் எனது படிப்பைப் பூர்த்தி செய்யவில்லை. அதோடு எனக்கு வயது ஒன்றும் அதிக மாகிவிடவில்லை; இருபதுதான் நடக்கிறதென்பது தங்க ளுக்குத் தெரிந்ததே. அதனால் இப்பொழுது கல்யாணத் தைப்பற்றி எண்ண வேண்டியதே இல்லை யென்று தோன்றுகிறது.

மேலும் கல்யாணம் என்பது ஒரு பெரிய காரியம். அவசரப்பட்டுத் தீர்மானம் செய்துவிட்டால் வாழ்க்கை முழுவதுமே வருந்தவேண்டி நேரலாம். தெய்வாதீன மாக ஆண் பெண் இருவருக்கும் திருப்தியாக முடிந்து விட்டால் நன்மைதான்; இல்லாவிட்டால் ஆயுள் முழு வதும் துன்பப்பட வேண்டி வரும். ஒரு தடவை செய் வதை மறுபடியும் மாற்றுவதென்பதும் இயலாது. அதனால் நிதானமாக ஆலோசனை செய்து திருமண விஷயத்தை முடிவு செய்யவேண்டும் என்று நான் கருதுகிறேன்.

மேலும் வாழ்க்கை இன்பத்திற்குப் பணம் பிரதானம் அல்ல. எளிய வாழ்க்கையிலும் மனமொத்திருந்தால் அதுவே இன்பம் கொடுக்கும். செல்வம் மிகுந்திருந் தாலும் கருத்தொருமித்து வாழாத வாழ்க்கை நரக வேதனை யாகிவிடும். இவையெல்லாம் தங்களுக்குத் தெரியாதவையல்ல. ஆதலால் இப்பொழுது கல்யாணத் தைப்பற்றி யாதொரு முடிவும் செய்யவேண்டாமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். தாங்கள் குறிப்பிடும் பெண் வீட்டார் உடனே உங்களுடைய அபிப்பிராயத்தைச் சொல்லவேண்டுமென்று கேட்பதானால் வேறு இடத்தில் ஏற்பாடு செய்து கொள்ளும்படி தயவுசெய்து தெரிவித்து விடுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

தங்கள் அன்புள்ள மைந்தன்,

**ரங்கசாமி.'**

"இம்மாதிரிக் கடிதத்தை நான் எதிர்பார்க்கவே இல்லை. கடிதத்திலிருந்து அவன் உள்ளக் கருத்து முழுவதையும் நான் புரிந்து கொள்ளவில்லை. படிப்புப் பூர்த்தியான பிறகு ஏதாவது உத்தியோகம் தேடிக்கொண்டு பிறகு கல்யாணம் செய்து கொள்ள விரும்புகிறான் என்று தான் நான் நினைத்தேன். அதனால் உடனே வேறொரு கடிதம் எழுதினேன். இந்த மாதிரி சம்பந்தம் பின்னால் கிடைக்காதென்றும், படிப்பைப் பூர்த்தி செய்வதற்குக் கல்யாணம் எந்த விதத்திலும் இடைஞ்சலாக இருக்காதென்றும் எழுதினேன். அந்தக் காலத்தில் ஒவ்வொரு மாதமும் ரங்கசாமிக்கு வேண்டிய பணம் அனுப்புவதற்குச் சிரமப்பட்டுக் கொண்டிருந்தேன். அதைக் குறித்தும் கடிதத்தில் தெளிவாக்கினேன். நான் படும் கஷ்டத்தைப் பற்றி நினைவுறுத்தினால் தடை சொல்லாமல் ஒத்துக்கொள்வான் என்பது எனது நம்பிக்கை. சில நாட்களில் அவனிடமிருந்து பதில் கிடைத்தது."

இவ்வாறு சொல்லிவிட்டு மறுபடியும் அந்தக் கட்டில் தேடலானார். மகனிடமிருந்து வந்த இரண்டாவது கடிதத்தையும் எடுத்து நிதானமாகப் படித்தார்:

'பிரியமுள்ள தந்தை அவர்களுக்கு,

தங்கள் அன்பு மைந்தன் ரங்கசாமி வணக்கத்துடன் எழுதிக்கொண்டது.

மறுபடியும் தாங்கள் கல்யாணத்தைப் பற்றி எழுதியிருக்கிறீர்கள். நான் இதுவரையிலும் தங்கள் வார்த்தைக்கு விரோதமாக நடந்து கொண்டதில்லை யென்றாலும் இது விஷயத்தில் மறுப்புச் சொல்லவேண்டி நேர்ந்திருக்கிறது. அதற்காக என்னை மன்னிக்கும்படி மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

முன் காலத்திலே தமிழருடைய மண முறையே வேறு விதமாக இருந்தது. தான் காதலித்த பெண்ணையே ஒருவன் மணந்துகொண்டான். காதலைத் தவிர வேறு எதையும் அவன் கருதவில்லை. அதனால் அவனுடைய வாழ்க்கையானது இன்பம் நிறைந்திருந்தது. ஏழையினது குடிசையிலும் அன்பு நிறைந்திருந்ததால் இன்பம் நிலைத்திருந்தது. அம்மாதிரியான காதல் மணத்தையே நான் விரும்புகிறேன். ஒருவரை யொருவர் பார்த்தறியாத இருவரை வாழ்க்கைச் சகடத்தில் பிணைத்து ஒரு மனத்தோடு செல்லுமாறு ஏவுவது சரியான முறையல்லவென்பது நிச்சயம். தங்களுடைய ஆணைக்குட்பட்டு நான் மணம் செய்து கொள்ளலாம். ஆனால் ஆணைக்குட்பட்டு யாருடைய உள்ளமாவது அன்பு செய்யுமா என்பதை எண்ணிப் பாருங்கள். அன்பில்லாத வாழ்க்கையில் இன்பம் கிடைக்குமா?

தாங்கள் எனது இன்ப வாழ்க்கையைக் கருதியே இந்த ஏற்பாட்டைச் செய்ய முயலுகிறீர்கள் என்பது எனக்குத் தெரியும். செல்வனாகவும் சுகமாகவும் நான் இருக்க வேண்டுமென்று நீங்கள் ஆசைப்படுகிறீர்கள். இந்தக் கல்யாணத்தால் நான் செல்வனாகலாம்! ஆனால் சந்தோஷமாக நான் இருக்கவே முடியாது.

தங்கள் கடிதத்தில் கண்ட ஒரு விஷயந்தான் சதா என்னை வருத்துகிறது. எனக்காக நீங்கள் பெருங் கஷ்டப்படுகிறீர்கள். உங்கள் வாழ்க்கைக்கு அத்தியாவசியமானவைகளையும் நீங்கள் எனக்காகத் துறந்து விட்டீர்கள். உடல் நலிவு முதலியவற்றைக் கூடக் கவனியாது எனக்காக உழைக்கின்றீர்கள். என் தாய் உயிரோடிருந்தாலாவது தங்களுக்கு உதவியாக இருப்பாள்; தங்கள் வாழ்க்கையில் இன்பத்தை உண்டாக்க முயலுவாள். அவளும் இல்லாத நிலையில் தாங்கள் தனியாக நின்று படும் சிரமங்களை யெல்லாம் நான் நன்குணர்வேன். ஆனால் அவையெல்லாம் இன்னும் சில

மாதங்களில் தீர்ந்து போகுமென்று நான் உறுதி கூறுகிறேன்.

எனது கல்யாண விஷயமாக நான் ஓர் எண்ணம் வைத்திருக்கிறேன். அதைக் கோடை விடுமுறையின் போது தங்களுக்கு நேரில் தெரிவிக்கிறேன். இப்பொழுது அதைப்பற்றிய ஞாபகமே எனக்கில்லை. பி. ஏ. படிப்பைச் சிறந்த வெற்றியுடன் முடிக்க வேண்டுமென்பதே எனது சிந்தனையெல்லாம்.

தங்கள் அன்புள்ள மைந்தன்,
**ரங்கசாமி.'**

"அவனுடைய கடிதத்தைப் படித்த பிறகும் எனது ஆசை மாறவில்லை. எப்படியும் நான் நினைத்தபடியே கல்யாணத்தை முடித்து விடவேண்டுமென்று தீர்மானித்தேன்.

"இந்தச் சமயத்திலே பெண்ணின் தகப்பனுர் ஏதோ காரியமாகச் சென்னைக்குப் புறப்பட்டார். என்னையும் கூட வரும்படி அழைத்தார். நேரிலேயே மகனிடம் பேசி எல்லாம் முடிவு செய்யலாம் என்று அவர் எனக்கு யோசனை சொன்னுர். கல்யாணப் பேச்சுத் தொடங்கியதிலிருந்து அவருடன் நான் அதிகம் பழகிக் கொண்டிருந்தேன். அதனுல் அவர் சொல்லிய யோசனையை ஏற்றுக் கொண்டு சென்னைக்கு அவருடன் சென்றேன். ரங்கசாமிக்கு என்து விருப்பத்தைப் பல வகைகளில் எடுத்துக் கூறினேன். அவன் எனது பேச்சைத் தட்டுதற்கு வருந்தினுயினும் எனது கருத்துக்கு இசையவே இல்லை.

"ஒரே சமயத்தில் விடாப் பிடியாக வற்புறுத்தக் கூடாது என்று நான் திரும்பி வந்துவிட்டேன். வந்த சில நாட்களுக்குப் பிறகு நான் அவனுக்கு ஒரு கடிதம் எழுதி

னேன். அதில் அவன் பலமுறை நான் கூறும் யோசனைக்கு உடன்படாதிருப்பதை எடுத்துக் காட்டியதோடு அதனால் எனக்கேற்பட்டுள்ள மன வருத்தத்தையும் வெளிப்படுத்தி யிருந்தேன்.

"அக் கடிதத்திற்கு ரங்கசாமி பல நாட்கள் பதில் எழுதவே இல்லை. எனது கடிதம் அவன் உள்ளத்தில் ஆழ்ந்து பதிந்து விட்டதென்று நான் மகிழ்ச்சியடைந் தேன். கொஞ்சம் மனம் மாறியிருக்கிற சமயத்திலேயே இணங்கச் செய்து விடவேண்டுமென்று மேலும் ஒரு நீண்ட கடிதம் வரைந்தேன். அதில் அவனிடம் எனக்குள்ள அன் பைப்பற்றி விரிவாக எழுதினேன். என் சொல்லுக்கு மீறி அவன் நடந்தால் என் அந்திய காலம் சந்தோஷமாக இருக் காது என்றும் எடுத்துக் காட்டினேன்.

"இதற்கு அவனிடமிருந்து பதில் வந்தது:

'அன்பு நிறைந்த தந்தையவர்களுக்கு,

எனது பணிவான வணக்கம். தாங்கள் எழுதும் ஒவ்வொரு கடிதமும் என் உள்ளத்தைக் கலக்குகிறது. என்னுடைய நலத்திற்காகவே திட்டம் வகுக்கிறீர்கள் என்பது உண்மை. ஆனால் வாழ்க்கைத் துணையைத் தேடுகிற விஷயத்தில் நீங்கள் கொண்டுள்ள முறை சரி யென்று எனக்குத் தோன்றவில்லை. எனக்குப் பிடித்த பெண்ணை நான் மணந்து கொண்டால்தான் இல் லறம் இன்பமாக நடக்கும். செல்வத்தால் மட்டும் ஒருவன் இன்பம் எய்திவிட முடியாது. எத்தனையோ செல்வர்கள் வாழ்க்கையில் இன்பங்காணமல் வாடு வதை நாம் பார்த்திருக்கிறோம்.

நான் பல தடவைகளில் தங்கள் வார்த்தையை ஏற்றுக் கொள்ளாமலிருப்பதற்காக என் மீது குறை கூறுகிறீர் கள். கல்யாண விஷயம் ஒன்று தவிர வேறு எதிலும்

தங்கள் விருப்பத்தை நான் தட்டியதில்லை. தங்கள் சொல்லுக்கு வேறு எதிலும் மாறு கூறியதாக எனக்கு ஞாபகம் இல்லை. இந்த ஒரு விஷயத்தில் மட்டும் எனது விருப்பம்போல் விட்டுவிட வேண்டுமென்று நான் மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன். அப்படி விடுவதால் எனது வாழ்க்கை மட்டுமல்ல, தங்கள் வாழ்நாளும் இன்பமுடையதாக இருக்குமென்று நான் திண்ணமாக நம்புகிறேன்.

தங்கள் பணிவுள்ள மைந்தன்,
ரங்கசாமி.

"இந்தக் கடிதத்திலிருந்து அவன் என் சொல்லைத் தட்டுவதற்காகப் பெரிதும் மனம் வருந்துகிறான் என்று தெரிந்துகொண்டேன். அதனால் கல்யாணத்தை உறுதி செய்துகொண்டு முடிவாக எழுதிவிட்டால் அவன் எப்படியும் இணங்கி விடுவான் என்று தோன்றியது. பெண் வீட்டாருக்கு உறுதி கூறிவிட்டு அது விவரம் எழுதினால் அவன் என் வாக்கைக் காப்பாற்றுவான் என்று சூழ்ச்சி பண்ணினேன். இவ்வளவும் நான் என் மகனுடைய நன்மையை உத்தேசித்துத்தான் செய்தேன். அவனுக்குத் தீமையாக முடிகிற எதையும் நான் கனவிலும் கருதியிருக்கமாட்டேன். மண விஷயத்தைப்பற்றி முடிவு செய்ய இளம் வயதில் அநுபவம் போதாதென்றும் நான் நிச்சயமாக நம்பினேன். அதனால் என் சூழ்ச்சிப்படியே பெண்ணின் தந்தைக்கு உறுதி சொல்லிவிட்டு மைந்தனுக்கும் எழுதினேன்.

"எழுதிய மூன்றாம் நாள் காலையிலேயே நான் எதிர்பாராதவிதமாக ரங்கசாமி ஊருக்கு வந்தான். அப்பொழுது கிறிஸ்துமஸ் விடுமுறை யென்றாலும் அவன் ஊருக்கு வருவதாக முன்னால் தெரிவிக்கவில்லை.

"கல்யாண ஏற்பாட்டை நிறுத்த வேண்டுமென்று அவன் கெஞ்சிக் கேட்டுக்கொண்டான். அதோடு அவன் தன்னுடன் கல்லூரியில் படிக்கும் ஒரு பெண்ணைக் காதலிப்பதாகவும் அவளையே மணந்து கொள்வதாக வாக்களித்திருப்பதாகவும் கூறினான். எனக்கு அந்தச் செய்தி கலக்கத்தை உண்டாக்கிற்று. பக்கத்து ஊர்க்காரருடைய செல்வத்தின்மேல் விழுந்த ஆசையால் எனக்கு வேறெதுவும் சரியென்று படவில்லை. அதனால் காதலைப் பற்றி மிகவும் இழிவாகப் பேசினேன். எத்தனையோ பேர் காதலென்று மதிமயங்கிப் பின்னால் துன்பத்திற்குள்ளானதை யெல்லாம் எடுத்துக் காட்டினேன். மேல் நாடுகளிலே ஆணும் பெண்ணும் தாங்களே சம்பாதித்துக் கல்யாணம் செய்துகொண்டாலும் அங்கேதான் விவாகரத்துக்கள் அதிகமாக நடைபெறுகின்றன வென்றும் சொன்னேன்.

"'இத்தனை கஷ்டப்பட்டு உன்னைப் படிக்க வைத்ததற்குப் பலன் இதுதானா? என் விருப்பத்தை மீறி நீ எவளையாவது கல்யாணம் செய்து கொள்வதானால் நான் உன் முகத்திலேயே விழிக்கமாட்டேன்; உயிரை வேண்டுமானாலும் விட்டுவிடுவேனேயொழிய உன் வீட்டில் காலெடுத்து வைக்கமாட்டேன். படாத பாடெல்லாம் பட்டுப் படிக்க வைத்த தகப்பனை அந்திய காலத்தில் அநாதையாக விட்டுவிட்டாய் என்ற பேச்சை நீ கேட்க வேண்டிய காலம் கட்டாயமாக வரப்போகிறது' என்று கடுமையாகப் பேசினேன்.

"'அப்பா, நீங்கள் என்னிடம் இப்படிக் கோபமாகப் பேசலாமா? நான் ஒன்றும் அபசாரம் செய்துவிடவில்லையே!' என்று அவன் அழுத குரலில் சொன்னான்.

"'நான் பெண் வீட்டாருக்கு உறுதி சொல்லியாய் விட்டது. நீ என் மகனாக இருந்தால் அதைக் காப்பாற்ற வேண்டும். இல்லாவிட்டால் என் முன்னால் நிற்க வேண்டாம்; எங்கேயோ போ' என்று பதற்றமாக மொழிந்தேன்.

"மகன் திகைத்துப் போய்விட்டான். அவனால் மேற்கொண்டு பேச முடியவில்லை. ஒரு நாள்கூட என் சொல்லைத் தட்டியறியாதவனுக்கு எப்படித்தான் பேச முடியும்? பேசாமல் தலையைக் குனிந்துகொண்டு நின்றான். நான் மேலும் மேலும் ஆத்திரத்தோடு வார்த்தை சொன்னேன்.

"'அப்பா, எனக்கு ஒரு நான்கு நாள் அவகாசம் கொடுங்கள். அதன் பிறகு எல்லாம் முடிவு செய்து கொள்ளலாம்' என்று இரங்கிய குரலில் கேட்டுக் கொண்டு ரங்கசாமி வெளியே சென்றான். அன்றும் மறுநாளும் அவன் சாப்பிடவே இல்லை. அது எனக்கு வருத்தமாகத்தானிருந்தது. இருந்தாலும் எல்லாம் சரிப்பட்டுப் போகுமென்று இருந்தேன். நீண்ட கடிதம் ஒன்று யாருக்கோ எழுதிவிட்டு அதற்குப் பதிலை எதிர் பார்த்திருந்தான். மூன்றாம் நாள் பதிலும் வந்துவிட்டது. அதில் என்ன எழுதியிருந்ததோ எனக்குத் தெரியாது. அதைக் கிழித்துத் தீயில் போட்டுவிட்டு ரங்கசாமி என்னிடம் வந்து, 'அப்பா, உங்கள் இஷ்டம்போல் கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்யுங்கள்' என்று சொல்லிவிட்டுப் போனான். அவன் கண்களிலே கண்ணீர் பிதுங்கிக் கொண்டிருந்தது. ஒரு கணம் என் உள்ளம் திடுக்கிட்டது. அவன் கண்ணீர் விடுவதை நான் கண்டதே இல்லை. கொஞ்ச நாளில் அந்த விசனம் தீர்ந்து போகும் என்று

நான் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டேன். கல்யாணத்தை அந்த விடுமுறையிலேயே வைத்து விட்டால் நல்லதென்று எனக்குப் பட்டது. சென்னைக்குப் போன பிறகு அவன் மனம் மாறிவிட்டால் என்ன செய்வதென்று எனக்குக் கவலை. பெண்ணின் தகப்பனாரிடம் என் எண்ணத்தைத் தெரிவிக்கவே அவரும் சந்தோஷமாகச் சம்மதித்து விட்டார். கல்யாணச் செலவையெல்லாம் அவரே ஏற்றுக் கொள்வதாகவும் கூறினார். பத்தாம் நாள் கல்யாணம் விமரிசையாக நடந்தேறியது.

"கல்யாணம் ஆகி மூன்று நாள்தான் ரங்கசாமி ஊரில் தங்கியிருந்தான். அதற்குள் கல்லூரி திறந்துவிட்டபடியால் உடனே போகவேண்டுமென்று கூறினான். ஒரு வாரத்திற்காவது ரஜா வாங்கிக்கொள்ளுமாறு மாமனார் சொல்லியும் அவன் கேட்கவில்லை. மனைவியின் முகத்தைக் கூடச் சரியாகப் பார்த்தானோ இல்லையோ; புறப்பட்டுப் போய்விட்டான். படிப்பின் மேல் அக்கறையுள்ள பையனைத் தடுத்து நிறுத்த எனக்கு இஷ்டமில்லை. என் இஷ்டப் படியே கல்யாணம் முடிந்து விட்டதாகையால் மேலும் அவனைத் தடை செய்ய நான் எண்ணவில்லை.

"அவன் சென்ற சில நாட்களுக்குப் பிறகு பத்திரிகையிலே ஒரு துக்ககரமான செய்தி வெளியாயிற்று. நீங்களெல்லாம் அதைப் படித்திருக்கலாம். கல்லூரி மாணவி ஒருத்தி தற்கொலை செய்து கொண்டதாக அதில் காணப் பட்டது. மறுநாளே ரங்கசாமியிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது" என்று சொல்லிவிட்டு மறுபடியும் அவர் காகிதக் கட்டைப் பிரித்தார். அவர் கை நடுங்கியது; முகம் இருண்டது.

விசனத்தோடு ஒரு கடிதத்தை எடுத்துப் படிக்க லானார்.

'என் அன்புள்ள தந்தையே,

நான் தங்கள் கட்டளையைத் தட்டக் கூடாதென்று கல்யாணத்திற்கு இசைந்தேன். இசையுமுன் என் காதலிக்கு விஷயமெல்லாம் எழுதினேன். அவள் நிலைமையை உணர்ந்து எனக்கு அநுமதி தந்துவிட்டதாகத் தான் பதில் எழுதினாள். நான் அவளுக்குக் கொடுத்திருந்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டியதில்லையென்றும் குறிப்பிட்டிருந்தாள். ஆனால் கல்யாணம் செய்துகொண்டு வந்த என்னைக் காண, அவளுடைய துக்கம் கரை கடந்துவிட்டது. இனி உலகில் தனக்கு வேலையில்லையென்று போய்விட்டாள். அவளுடைய சாவிற்கு நானே பொறுப்பாளி. அவளைத் தேடிக்கொண்டு போய் அவளிடம் மன்னிப்புப் பெறுவதைத் தவிர வேறு ஒன்றும் எனக்குத் தோன்றவில்லை. நீங்கள் விரும்பியபடி கல்யாணம் செய்து கொண்டுவிட்டேன். ஒரு விஷயத்தில்கூடத் தங்கள் பேச்சைத் தட்டவில்லை என்ற பேரும் சம்பாதித்துக் கொண்டேன்.

தந்தையே, நான் இனி என் காதலி சென்ற வழியே செல்லுகிறேன். முன்பின் அறியாத ஓர் இளம் பெண்ணை விதவையாக்கிவிட்டுப் போகிறேனே என்ற எண்ணம் என் உள்ளத்தைப் பாதிக்கின்றது; அந்தப் பெண்ணைப் பார்க்கும்போதெல்லாம் தாங்களும் உள்ளம் குலைவீர்களே என்றும் ஏங்குகிறேன். இருந்தாலும் நான் என் காதலிக்குச் செய்த குற்றம் மிகப் பெரியது. மற்றொருத்தியோடு வாழ்க்கை நடத்தி அக்குற்றத்தை இன்னும் பெரிதாக்க நான் ஒருப்பட மாட்டேன். தந்தையே, எனது வணக்கத்தை ஏற்றுக் கொள்ளுங்கள். போய்வருகிறேன். வணக்கம்.

தங்கள் அன்புள்ள மைந்தன்,
ரங்கசாமி.'

படிக்கப் படிக்க அந்த மனிதர் துக்கம் தாளாமல் கண்ணீர் விட்டார். அவர் தொண்டை அடைத்துக் கொண்டது.

நண்பர்கள் இருவரும் சிலைபோல அமர்ந்திருந் தார்கள்.

# உரிமைப் பெண்

மறுமலர்ச்சி மன்றத்திலே இன்று காரசாரமாக விவாதம் நடந்துகொண்டிருக்கிறது.

"சிறு கதைகள் புற்றீசல் போலக் கிளம்புகின்றன என்பதை நான் காண்கிறேன். ஆனால் அதில் மறுமலர்ச்சி ஏற்பட்டுவிட்டதென்பதை மட்டும் நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன்" என்று அழுத்தமாகப் பேசினார் ஒரு மூக்குக் கண்ணாடிக்காரர்.

"முதலில் மலர்ச்சி இருந்தால்தானே பிறகு மறுமலர்ச்சி ஏற்படமுடியும்?" என்று குயுக்தி செய்தார் ஒரு குள்ளையர்.

"என்ன இருந்தாலும் தமிழிலே சிறு கதைகள் இப்படிப் பெருகப்படாது. இது இலக்கிய வளர்ச்சிக்கு அறிகுறியல்ல. எந்தப் பத்திரிகையை எடுத்தாலும் சிறுகதை, சிறுகதை—ஒரே சிறுகதை மயந்தான்" என்றார் ஒரு வானவில் மீசைக்காரர்.

" தமிழில்தானா இப்படி? உலகத்திலே எந்த மொழியிலும் இப்படித்தான் இருக்கிறது. இது சிறுகதை யுகம்" என்றார் எல்லாம் அறிந்த ஒருவர்.

"வேறு பாஷைகளில் எழுதுகிறார்களென்றால் அப்படி எழுதுகிறவர்களுக்குச் சிறுகதை இலக்கணமாவது தெரிந்திருக்கிறது. தமிழிலே அதையும் காணோமே!"

"காணோமென்று நீ எப்படிச் சொல்ல முடியும்?"

"எப்படிச் சொல்ல முடியுமா? கதையைப் படித்துப் பார்த்தால் தெரியாதா? அதற்குக்கூட உன்னைப் போலச் சிறுகதை எழுத்தாளனாக இருக்கவேண்டுமா என்ன?"

"சிறுகதை இலக்கணம் உனக்கு ரொம்பத் தெரியுமோ? எங்கே, சொல் பார்க்கலாம்."

"எனக்கு அதிகம் தெரியாவிட்டாலும் நீ எழுதுகிற கதையில் அந்த லக்ஷணம் கொஞ்சங்கூட இல்லை என்று சொல்லுகிற அளவுக்குத் தெரியும்."

"எந்தக் கதையிலே லக்ஷணம் இல்லாமல் போய் விட்டது? எங்கே, ஒரு கதையை எடுத்துக் காண்பி பார்க்கலாம்."

"ஏன், காலையிலே என்க்குப் படித்துக் காண்பித் தாயே, அதிற்கூடச் சிறுகதை இலக்கணம் இல்லை."

"அந்தக் கதையைச் சரியாகப் புரிந்துகொள்ளச் சக்தியில்லாவிட்டால் பேசாமல் இருக்கவேண்டும். இலக்கணமில்லை என்று எதற்காக உன்னுடைய அறியாமையை வெளிப்படுத்திக்கொள்கிறாய்?"

"அந்தக் கதையில் அப்படிப் புரியாதபடி ஒன்றும் பிரமாதமாக இல்லை. உன்னுடைய கதையைப்பற்றி நீயே பெருமையடித்துக்கொள்ள வேண்டாம்."

"என்ன, நீங்கள் இரண்டு பேருமே இப்படித் தனிச் சண்டை போட்டுக்கொண்டிருக்கிறீர்களே! எங்களையெல்லாம் மறந்துவிட்டீர்களே!" என்று இந்தச் சமயத்தில் மற்ற அங்கத்தினர்கள் குறுக்கிட்டார்கள். இல்லாவிட்டால் வேலுச்சாமியும் சாமியப்பனும் எந்த நிலைமையில் தங்கள் வாக்குப் பூசலை நிறுத்தியிருப்பார்களென்று கூறமுடியாது. இருவரும் நெருங்கிய நண்பர்கள்தாம். ஆனால் இப்படி அபிப்பிராய வேறுபாடுகள் ஏற்பட்டுவிட்டால் மட்டும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்க மாட்டார்கள். விவாதத்திற்கு வந்த பொருளைப்பற்றி அலசி அலசிப் பேசியபிறகு அதை முற்றும் விட்டுவிட்டு ஒருவர்மேலொருவர் வசை

வாளி தொடங்கிச் சிலநாட்களுக்குப் பேச்சு வார்த்தைகூட இல்லாத நிலை வரையில் சென்றுவிடுவார்கள். ஆனால் அந்த நிலைமை வெகு நாட்களுக்கு நீடித்திருக்காது. வேலுச்சாமி மற்றொரு புதிய கதை எழுதும் வரையில்தான் சண்டை. அதை எழுதியானதும் அவன் எல்லாவற்றையும் மறந்து விட்டுச் சாமியப்பனிடம் ஓடுவான். ஆவலோடு கதையைப் படித்துக் காண்பிப்பான். இருவரும் பழையபடி நண்பர்களாகி விடுவார்கள். தனியாக இருக்கும்பொழுது அவர்களுக்குள் எண்ண வேறுபாடு உண்டானால் அது சண்டையாக மாறாது; மறுமலர்ச்சி மன்றத்திற்குள் புகுந்துவிட்டால் தான் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்கமாட்டார்கள்.

வேலுச்சாமி மற்றவர்களைப் பார்த்துப் பேசலானான்: "நான் எழுதிய கதையின் நோக்கத்தைத் தெரிந்துகொள்ளாமலே இவன் அதை மதிப்பிடுகிறான். அது தான் எனக்குப் பிடிக்கவில்லை."

உடனே சாமியப்பன், "நோக்கத்தைப்பற்றி இப்பொழுது பேச்சில்லை; சிறுகதை அமைப்பு உன் கதையில் இல்லை என்பதுதான் என் கட்சி" என்று பதில் கொடுத்தான்.

"கதை முழுதும் ஒரே உணர்ச்சி தொனிக்கவில்லையா? காலத்தால் நீண்டிருந்தாலும் ஒரே உணர்ச்சியைத் தாங்கி நிற்பதும் சிறுகதைதான்."

"என்ன உணர்ச்சியோ?" என்று குள்ளையர் நடுவில் புகுந்தார்.

"கொங்கு நாட்டுக் கிராமத்திலுள்ள மக்கள் பரம்பரையாக வந்த பழக்கத்திலும் எண்ணங்களிலும் கட்டுண்டு கிடக்கிறார்கள்; அதனால் அவர்களுக்குள் முன்னேற்றமில்லை என்கிற உணர்ச்சிதான். இதுகூடத் தெரியவில்லையா?" என்று சிடுசிடுத்தான் வேலுச்சாமி.

"ஏன் தம்பி, கதை இன்னதென்றே எங்களுக்குச் சொல்லாமல், இது தெரியவில்லையா, அது தெரியவில்லையா என்று கேள்வி போடுகிறாயே; நியாயமா?" என்றார் குள்ளையர்.

"வேலுச்சாமி, நீ கதையைப் படித்துக்காட்டிவிடு. பிறகு நாங்களே தனித்தனியாக அதைப்பற்றி யோசித்து முடிவு செய்துகொள்ளுகிறோம். நீங்கள் இரண்டுபேரும் வீணாக ஏன் இப்படி அடிக்கடி சத்தம் போட்டுக்கொள்ளு கிறீர்கள்?" என்று மூக்குக் கண்ணாடிக்காரர் மத்தியஸ்தம் செய்ய வந்தார்.

அவர் ஆலோசனையை அனைவரும் ஆமோதிக்கவே வேலுச்சாமி கதையைப் படிக்கலானான்.

★

ஏர் முன்னால் செல்லுகிறது; அவன் கால்களும் முன்னால் எட்டி வைக்கின்றன. ஆனால் அவன் உள்ளம் மட்டும் பின்னால் தாவிக்கொண்டிருக்கிறது. அடிக்கடி அவன் திரும்பிப் புன்முறுவலோடு, உள்ளத்தில் பொங்கி வழியும் காதல் கண்களின் வழியாகப் பாய்ந்தோட அவளைப் பார்க் கிறான். அவளும் பார்க்கிறாள். இளஞ் சிரிப்பில் இதழ் மலர நெற்றி ஒளிவீசக் குனிந்துகொள்கிறாள். கைமட்டும் யந்திரம்போல விதைக் கடலையைப் படைக்காலில் ஒவ் வொன்றாகப் போட்டுக்கொண்டு வருகிறது.

காலை பத்து மணி; நல்ல ஏறு வெயில். இருந்தா லும் மழையீரம் போகுமுன்பே விதைத்தாக வேண்டும். இரண்டு ஏர் பூட்டியிருந்தால் எளிதாக முடிந்திருக்கும். ஆனால் பண்ணையாள் தலைவலி யென்று முதல் நாள் படுத்த வன் இன்னும் எழுந்திருக்கவில்லை. அவன் காலையில் வந்து விடுவான் என்று எதிர்பார்த்து வேறு கூலியாளையும் கூப்

பிடவில்லை. அதனால் காளியப்பன் தனியாக உழுதுகொண் டிருக்கிறான். அதிலே அவனுக்கும் பூரண திருப்தியாக இருக்கிறது. இப்படி நீண்ட நேரம் பாவாத்தாளுடன் தனியாக உரையாடிக்கொண்டும், அவள் அழகிய வதனத் தைப் பார்த்துக்கொண்டும் இருக்க வேறு நல்ல சமயம் வாய்க்குமா? சாதாரணமாக அவர்கள் அடிக்கடி சந்தித்துக் கொண்டுதானிருந்தார்கள். பாவாத்தாள் கூலிக்காரி; காளியப்பனுடைய தகப்பனார் பெரிய பண்ணைக்காரர். அவருடைய பண்ணையிலே பன்னிரண்டு மாதமும் ஒன் றிரண்டு பெண்களுக்குக் களை எடுப்பது, மிளகாய் பறிப்பது, பருத்தி எடுப்பது என்று இப்படி வேலை இருந்துகொண்டே இருக்கும். அதனால் பாவாத்தாள் அநேகமாக அந்தப் பண்ணையிலே வேலை செய்து வந்தாள். காளியப்பன் அவளைச் சந்தித்து வார்த்தையாடப் பல சந்தர்ப்பங்கள் கிடைத்தன. இருந்தாலும் இவ்வாறு நீண்ட நேரம் தனி யாக இருவரும் இருக்கச் சமயம் வாய்ப்பது அருமை.

பண்ணைக்காரனுடைய மகன் என்றாலும் காளியப் பன் வேலை செய்யாமல் இருப்பதில்லை. ஆட்களிடம் வேலை வாங்குவதோடு தானும் அவசியமானபோது எந்த வேலை யையும் செய்வான். இப்பொழுது அவன் தன் நெற்றியில் ஊறிக் கன்னத்தில் வழியும் வியர்வையை அலட்சியமாகத் துடைத்துக்கொண்டு ஏர் உழுகிறான். பாவாத்தாள் முன் றானையை எடுத்துத் தலையில் சுற்றிக் கட்டிக்கொண்டு ஒரு கையால் விதைக் கூடையைத் தாங்கி, மற்றொரு கையால் படைக்காலில் விதையைப் போட்டுக்கொண்டு அவன் பின்னால் நடக்கிறாள்.

தனியாக அவளுடன் நீண்ட நேரம் பேசுவதற்குச் சமயம் கிடைத்தால் என்ன என்னவோ சொல்ல வேண்டும் என்று அவன் முன்பெல்லாம் நினைத்துக்கொண்டிருந்தான்.

இப்பொழுது அவனுக்கு அந்தச் சமயம் கிடைத்துவிட்டது. ஆனால் அவன் அதிகம் பேசவில்லை. தன்னைக் கவர்ந்த பெண்கொடியின் அழகில் ஈடுபட்டு அவன் உள்ளம் நிறைந்திருந்தது. ஒரே இன்பக் கிளர்ச்சி. வார்த்தைக்கு அங்கு இடமே இருக்கவில்லை.

பாவாத்தாளும் அதை உணர்ந்துகொண்டாள். வார்த்தை அலங்காரத்தில் அவனுடைய காதலைப்பற்றிக் கேட்க அவள் விரும்பவில்லை. ஆழ்ந்த உணர்ச்சியைப் பூரணமாகக் காட்டச் சொற்களால் முடியாது. சொற்களை விட மௌனம் அந்த உணர்ச்சியைக் குறிப்பாக நன்கு காட்டும். அந்த மௌனப் பேச்சிலே இருவரும் ஒருவரை ஒருவர் உணர்ந்துகொண்டு தங்கள் வேலையைச் செய்தார்கள்.

ஆனால் பாவாத்தாளுடைய உள்ளத்திலே ஒரு பயம் மட்டும் எப்பொழுதும் ஒளிந்திருந்தது. காளியப்பன் பண்ணைக்காரனுடைய மகன். அவன் தந்தைதான் வீரன் காட்டூரில் பெரிய தனக்காரர். அப்படியிருக்கக் காளியப்பன் கூலிக்காரப் பெண்ணைக் கல்யாணம் செய்துகொள்ள முடியுமா? அவன் பண்ணிக்கொள்வதாக ஆயிரந் தடவை உறுதி கூறினாலும் பெற்றோர்கள் சம்மதிப்பார்களா? பண்ணைக்காரர் மகனுக்கும், பண்ணையில் வேலை செய்யும் கூலிக்காரிக்கும் கல்யாணமா? இது நடக்கக்கூடிய காரியமா ? இதுவரையில் கண்டிராத புதுமையாக இருக்கிறதே! மேலும், கல்யாணப் பேச்சு வருகிறபோது காளியப்பனை யார் கேட்கப் போகிறார்கள்? பெற்றோர்களும் நெருங்கிய உறவினரும் தங்களுக்குள்ளேயே பேசி முடிவு செய்கிற காரியந்தானே அது?

இம்மாதிரி எண்ணங்கள் அடிக்கடி அவள் மனத்தைக் கவ்விக்கொள்ளும். ஆனால் இப்பொழுது அவை

யெல்லாம் அவளைத் துன்புறுத்தவில்லை. காளியப்பனுடைய புன்னகையில் அவை எரிந்துபோய்விட்டன. அவனுடைய அன்பு, அவனுடைய கட்டுறுதியுள்ள மேனி, அவனுடைய காதல் ஒளிரும் கண்கள்-இவைகளே அவளுக்கு உறுதிப் பொருள்களாகத் தோன்றின.

★

பூரணச்சந்திரன் நீல வானில் தண்ணமுதப் பொற் கலசம் போல மிதக்கும் ஓரிரவு. வெள்ளிக்கிரண மது மயக்கத்திலே உலகம் அறிவிழந்ததுபோலக் கிடக்கின்றது. பாவத்தாள் வீட்டுத் திண்ணையிலே பாயை விரித்துப் படுத்திருந்தாள். அவளையும் இந்த மயக்கம் தொட்டு விட்டது. அவளுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. நெஞ்சத்திற் குள்ளே ஆயிரம் ஆயிரம் இளமைத் துடிப்புகள் ஒருங்கே குமுறிப் பொங்கின. மார்பகம் வெதும்பி விம்மிற்று. காளியப்பனுடன் இருக்கவேண்டுமென்று ஆசை பீறிக் கொண்டு எழுந்தது.

இதென்ன பேதைமை! என்றாவது அவர்கள் இரவில் சந்தித்திருக்கிறார்களா? இல்லவே இல்லை. இன்றிரவாவது சந்திக்கலாமென்று ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார் களா? அதுவும் இல்லை. பின் இவள் ஏன் புறப்படுகிறாள்? வீரன்காட்டூரிலிருந்து அரை மைல் தொலைவில்தான் வேங்கை மரத்துப்பாளையம் இருக்கிறது. விரைவில் அங்குச் செல்ல முடியுமானாலும் காளியப்பனை எப்படிச் சந்திப்பது!

அவளுக்கென்னவோ சந்திக்க முடியுமென்று ஒரே நம்பிக்கை. எழுந்து புறப்பட்டுவிட்டாள். தாய், அண் ணன் முதலியவர்கள் பகலெல்லாம் உழைத்த களைப்பினால் அயர்ந்து தூங்குகிறார்கள். பாவாத்தாள் ஊரைத் தாண்டி விட்டாள்.

ஆ! என்ன அதிசயம்! யார் அங்கே வருகிறது? அவனுக்குப் பாவாத்தாள் வருவது எப்படித் தெரியும்? நெஞ்சோடு நெஞ்சம் பேசிக்கொண்டதா? நிலாப் பெண் தூது சென்றாளா? இளமைத் துடிப்பு ஒரே மாதிரி எண்ணத்தை இருவர் உள்ளத்திலும் ஒலித்ததா? காளியப்பன் பாவாத்தாளைத் தேடிக்கொண்டு எதிரே வருகிறான்!

கட்டுக்கடங்காத இளமை; அது துணிச்சல் மிக்கது. புதிய அநுபவங்களையெல்லாம் ஆவலோடு எதிர்பார்ப்பது. பின்னால் விளையப் போவதை எண்ணிப் பார்க்காதது. இருவரும் எதிர்பாராது சந்தித்து நிலவு மயக்கத்திலும் இளமைத் துடிப்பிலும் புதுமை இன்பம் கண்டார்கள்.

★

காளியப்பன் பாவாத்தாளையேதான் கல்யாணம் செய்துகொள்வேன் என்று ஒரே பிடிவாதம் பண்ணுகிறான். அவன் பெற்றோர்க்கு இது பெரிய விந்தையாக இருக்கிறது. எங்கேயாவது இப்படிக் கேட்டதுண்டா?

அவனுக்கென உரிமையாக வளர்ந்த அத்தை மகள் பருவமடைந்து காத்திருக்கிறாள். அத்தையும் அடிக்கடி வந்து சிக்கிரம் கல்யாண ஏற்பாட்டைச் செய்யும்படி வற்புறுத்திக்கொண்டிருக்கிறாள். சீர் சிறப்பு, நகை நட்டு முதலான விவகாரங்களை யெல்லாம் திருப்தியாகப் பேசி முடித்தாகிவிட்டது. எல்லோருக்கும் வேலைவெட்டி இல்லாத சமயம் பார்த்துக் கல்யாணத்தை வைத்துக் கொள்ளலாம் என்று எண்ணிக்கொண்டிருக்கிறபோது, மேகமில்லாமல் இடியிடித்ததுபோலக் காளியப்பன் இவ்வாறு குறுக்கே பேச ஆரம்பித்துவிட்டான்.

"வெளியே சொல்லாதே. ஊரில் உள்ளவர்களுக்குத் தெரிந்தால் நம் மதிப்பே போய்விடும். எல்லோரும் சிரிப்பார்கள்" என்று தாய் அடக்க முயன்றாள்.

"பையனுக்குப் புத்தி போகிறதைப் பார்! நம் அந்தஸ்து என்ன? ஊரிலே நமக்கு இருக்கிற மரியாதை என்ன? அந்தக் கூலிக்காரியைக் கட்டிக்கொண்டு எங்கே போய் உட்காருவாய்? மருமகன் போனால் ராகிக் களிகூடக் கிடைக்காது" என்று இகழ்ச்சியாகப் பேசினார் தந்தை.

அத்தை கண்ணீரைத் திறந்துவிட ஆரம்பித்தாள். "நான் என் ஒரே மகளை எத்தனை ஆசையாக வளர்த்தேன்! நீ அவளைக் கல்யாணம் பண்ணிக்கொள்ளாவிட்டால் எனக்கு இனிமேல் இந்த வீட்டிற்கு வர என்ன சொந்தம் இருக்கிறது?" என்று அங்கலாய்த்தாள்.

இப்படியாக, வீட்டில் ஒருவர் பாக்கியில்லாமல் எல்லோரும் காளியப்பனுக்கு விரோதமாகக் கிளம்பி விட்டார்கள். அவர்களுடைய தனித் தாக்குதல்கள், கூட்டுத் தாக்குதல்கள், இகழ்ச்சி வார்த்தைகள் முதலியவற்றை அவனால் சமாளிக்க முடியவில்லை. கடைசியாக அவன் தோல்வியடைந்தான். அத்தை மகளுக்கும் அவனுக்கும் கல்யாணம் நடந்தேறியது. அத்தை மகள் என்ற உறவால் வந்த உரிமைப்பெண் வீடு சேர்ந்தாள். அன்பு என்னும் உறவால் வந்த உரிமைப்பெண் அங்கலாய்த்து நின்றாள்.

★

இரண்டு உள்ளங்கள் உடைந்துபோன இவ்வரலாற்றிலே நாம் தெரிந்துகொள்ள வேண்டியது வேறு என்ன இருக்கிறது? வேறு என்ன தான் நிகழ்ந்திருந்தாலும் அதைப்பற்றிப் பேசிப் பயன் என்ன?

காளியப்பனுடைய பெற்றோர்கள் தங்கள் விருப்பப்படியே மகனுக்குக் கல்யாணம் செய்து வைத்துத் தங்கள் அந்தஸ்தைக் காப்பாற்றிக்கொண்டார்கள். அவனுடைய

அத்தை, தன் சொந்தத்தை இன்னுமொரு தலைமுறைக்கு நிலைநாட்டிவிட்டாள்.

காளியப்பனா? அவன் இப்பொழுது சதா குடி வெறியில் மயங்கிக் கிடக்கிறான். அறிவு தெளிவாக இருந்தால் அவனால் சகிக்க முடிவதில்லை. ஆனால் அதன் காரணத்தை யாரும் உணர்ந்துகொண்டதாகத் தெரியவில்லை. "கல்யாணமாகிக் கொஞ்சம் சுதந்தரம் கிடைத்துவிட்டால் இந்தக் காலத்துப் பையன்களே இப்படித்தான் கெட்டுப் போகிறார்கள்" என்றுதான் எல்லோரும் பேசிக் கொண்டார்கள்.

பாவாத்தாள் விஷயம் ஒரு வகையில் நோக்கினால் இவ்வளவு மோசமில்லை. அந்தப் பூரண நிலவு ஒரு புதிய உயிரை அவள் வயிற்றில் புகுத்திவிட்டது. காளியப்பனுக்குக் கல்யாணமான மறு வாரத்திலேயே இந்த ரகசியம் அவளுடைய அண்ணனுக்குத் தெரிந்துபோயிற்று. அவன் என்ன செய்வான்? விஷயம் வெளியானால் அவன் மானம் போய்விடும்; சமூகக் கட்டுப்பாடு வந்துவிடும். என்னவோ நடந்தது. அவ்வாறு நடப்பது கிராமங்களிலே சகஜம். ஒரு நாள் பாவாத்தாள் தூக்குப் போட்டுக்கொண்டு இறந்துவிட்டதாகச் செய்தி பரவிற்று. "தாய் எதற்காகவோ வைதாளாம்; கோபத்தில் தூக்குப் போட்டுக் கொண்டாள். ரொம்பக் கோபக்காரி அந்தப் பெண்" என்று மக்கள் பேசிக்கொண்டார்கள்.

★

வேலுச்சாமி கதையைப் படித்து முடித்துவிட்டு ஆவலோடு தலை நிமிர்ந்து பார்த்தான். யாரும் தமது எண்ணத்தைத் தெரிவிக்க முன்வரவில்லை. அனைவரும் நித்திரை மயக்கத்திலிருந்தார்கள். மறுமலர்ச்சி மன்றம் நித்திராதேவியின் முழு ஆதிக்கத்தின் கீழ் இருந்தது.